www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 15
மடல் : 9-10
தி.பி. 2032 : கன்னி - துலை
கி.பி. 2001 : செப்டம்பர் - அக்டோபர்
விலை : ரூ 6.00



## வீரச் சாவெய்திய புலிப்படை கர்னல் சங்கர்

படிப்பகம்



# நிறை குறை

### தேர்தல் புறக்கணிப்பால் என்ன சாதித்தோம்?

ஆகஸ்ட் மாத தமிழர் கண்ணோட்டத்தில் பெ.மணியரசனின் தேர்தல் புறக்கணிப்பு கட்டுரையில் ஏராளமான வரலாற்று சான்றுகளை தந்துள்ளார். நிகழ்கால அரசியலில் நம் முதன்மையான எதிரிகள் மதவாத பாசிஸ்ட்டுகளே! இவர்களில் யாரும் தேர்தலை புறகணிப்பதில்லை. தேர்தலில் இவர்கள் வெற்றிப்பெற்று நம் எதிர்க்காலத்தை தீர்மானிக்கிறார்கள்.

குணா, நகைமுகன் போன்ற மரபினவாத பாசிஸ்ட்டுகள் நீங்கலாக அனைத்து தமிழ்த் தேச அமைப்புகளும் இணைந்து ஓர் அரசியல் கட்சியை தொடங்கி சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றலாம். 15 ஆண்டுகளில் இந்தியாவை தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக மாற்றலாம்.

- ந.அப்துல் ரகுமான், ஹாங்காங்

### தற்கொலைக்குச் சமம்

பெ.ம.வின் தேர்தல் புறக்கணிப்பு கட்டுரைப் படித்தேன். தந்தை பெரியாரின் வகுப்பு வாரி உரிமைக்கான இந்திய அரசியல் முதல் சட்டத்திருத்தம் தேர்தல் புறக்கணிப்பாளர்க்கு உற்சாகமும், ஊக்கமும் அளிப்பதாகும்.

தங்களின் தேர்தல் புறக்கணிப்பு நிலைப்பாடு சரியானதே. தமிழ்த் தேச தன்னுரிமை. நாம் பெறும் வரையில் தேர்தலில் பங்கு கொள்வது தற்கொலைக்குச் சமமாகும்

- நா.வை.சொக்கலிங்கம், சென்னை.

### தலையங்கம் அருமை

டர்பன் மாநாட்டில் சாதிப்பிரச்சினைப் பற்றியும், தீண்டாமை சிக்கல் குறித்தும் ஏன் இந்தியா விவாதிக்க மறுக்கிறது என்பதை தலையங்கம் சிறப்பாக சுட்டிக் காட்டியுள்ளது.

- கு.சித்ரா, சென்னை.

## 'பயங்கரவாதம்' பற்றி சிந்தனையாளர் பேரவை கருத்தரங்கம்

சென்னை, சிந்தனையாளர் பேரவை சார்பில் 4.10.2001 அன்று பல்லாவரம், இங்கிலீஷ் எலக்ட்ரிகல்ஸ் தொழிலாளர் சங்க மண்டபத்தில் 'சனநாயகமும், பயங்கரவாதமும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இப்பேரவை நடத்தும் 23 ஆவது கருத்தரங்கம் ஆகும் இது.

இக்கருத்தரங்கிற்கு புலவர் செகதீசன் தலைமை ஏற்றார். சிந்தனையாளர் பேரவையின் அமைப்பாளர் தோழர் பீட்டர் துரைராஜ் பேரவையின் நோக்கங்களை எடுத்துக்கூறி வரவேற்புரையாற்றினார். 'சனநாயகமும், பயங்கரவாதமும்' என்ற பொருள் பற்றி தோழர் கி.வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர், த.தே.பொ.க.) சிறப்புரையாற்றினார்.

## தலைஞாயிறு ஊராட்சி ஒன்றிய ஆணையரின் சட்ட விரோதப் போக்கைக் கண்டித்து மிதிவண்டி பிரச்சாரம் - கண்டனக் கூட்டம்

தலைஞாயிறு ஒன்றியம் கொத்தங்குடி ஊராட்சி - தொழுதூர் கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தை தனியார் அனுபவத்திற்கு சட்ட விரோதமாக விட்டுக்கொடுத்தும் பொது நன்மைக்கு பயன்படுத்த மறுத்தும் செயல்படுகின்ற ஊராட்சி ஒன்றிய ஆணையரைக் கண்டித்து தொழுதூர் பகுதி த.தே.பொ.க., த.இ.மு. தோழர்களின் மிதிவண்டி பிரச்சார இயக்கம் 3.10.2001 அன்று ஆலத்தம்பாடி கடைத் தெருவில் துவங்கி ஆலங்குடி, மணக்குடி வழியாக சென்று தலைஞாயிறு ஒன்றிய ஆணையர் அலுவலகம் முன்பு முடிவுற்றது. அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பின்னர் தலைஞாயிறு கடைத் தெருவில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் கா. அரசு (ஒன்றியச் செயலாளர்) மதியழகன் இரா.கோவிந்தசாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

செப்டம்பர் - அக்டோபர் 2001

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை
கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம்
படைப்போம்

# மறுபடியும் ஒரு மனித உரிமைப் பறிப்புச் சட்டம்

செப்டம்பர் 11 நியுயார்க் கட்டடம் தகர்ப்பு - ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி - ஆப்கான் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போர் எனத் தொடர்ந்து வரும் சங்கிலித் தொடர் நடவடிக்கைகளின் சந்தடியில், தனது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள பல வழிகளில் முயற்சி செய்கிறது பா.ஜ.க. அரசு. அம்முயற்சிகளில் ஒன்றாக மனித உரிமைப் பறிப்பு அவசரச் சட்டம் ஒன்றைப் பா.ஜ.க. அரசு பிறப்பித்துள்ளது.

மக்கள் வெறுப்பிற்குள்ளாகி, கைவிடப்பட்ட பழைய தடாச்சட்டம் தான் புதிய பெயரில் வருகிறது. இது மனித உரிமைக்கெதிரான பயங்கரச் சட்டம் என்பதால், இந்திய அரசின் இந்நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

இந்த பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ஒருவர் மீது வழக்குப் பதிவு செய்தால், பத்து நாட்களுக்குள் மாநிலக் காவல்துறை தலைமை இயக்குநரிடம் அதற்கான ஒப்புதல் பெறவேண்டும் என்றும், ஒரு மாதத்திற்குள் அக்குறிப்பிட்ட வழக்குபற்றி மறு ஆய்வு செய்ய குழு அமைக்கப்படும் என்றும் புது விதிகள் சேர்க்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டவர்க்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று இந்திய அரசு கூறுகிறது.

இச்சட்டத்தின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்ட பிறகு, அதற்கான ஒப்புதல் மாநிலக் காவல்துறைத் தலைமை இயக்குநரிடம் (டி.ஜி.பி.) பெறுவது ஒரு சடங்கே தவிர பொதுவாக அதனால் குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எந்த நிவாரணமும் கிடைக்கப் போவதில்லை. அதே போல் கைது செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குள் மறு ஆய்வுக்குழு அமைப்பது என்பதும் வெறும் சொல் அலங்காரம் தவிர வேறல்ல. அதுவும் அந்த ஆய்வுக் குழுவில் நீதிபதிகள் யாரும் இருக்க மாட்டார்கள்; அதில் நிர்வாகத்துறை அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் மட்டுமே இருப்பர். பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள், இப்படிப்பட்ட வழக்குகளில் நீதிபதிகளைக் கொண்ட மறு ஆய்வுக்குழு இருக்க வேண்டும் என்று வரையறுத்துள்ளன.

மேலும் நிர்வாக மற்றும் காவல்துறை அதிகாரிகளைக் கொண்ட இந்த மறு ஆய்வுக்குழுவில், குற்றம் சாட்டப்பட்டவர் தன் சார்பில் எந்தப் புகாரும் அல்லது மனுவும் தருவதற்கு விதிகள் இல்லை.

பழைய தடாச்சட்டத்தில் காவல்துறைக் கண்காணிப்பாளர் தகுதியில் உள்ள ஒருவரிடம் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ. மணியரசன்**
ஆசிரியர்,
150 அ சமீன்தார் குடியிருப்பு,
(பழைய எண் 53 அ)
புது ஆற்றுச் சாலை
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : 32994

அச்சிட்டோர்
**நீட் பிரிண்டர்ஸ்**
சென்னை - 600 003.

வடிவமைப்பு
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : 70018
e-mail: kannotam@md5.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

கூறப்பட்டது. புதிய சட்டத்தில் துணைக் கண்காணிப்பாளர் தகுதியில் உள்ள ஒருவரிடம் கொடுக்கும் ஒப்புதல் வாக்கு மூலமே செல்லுபடியாகும் என்றுள்ளது. இது, மூன்றாந்தர முறைகளைப் பயன்படுத்தி குற்றம் சாட்டப்பட்டவரிடம், காவல்துறை வாக்கு மூலம் பெற்றிட வழிவகுக்கும். அத்துடன், இவ்வாறான வாக்குமூலத்தை நீதிபதி ஏற்க வேண்டும் என்று விதிப்பதால், இது நீதித் துறையின் சுயேச்சைத் தன்மையை, நீதிபதியின் விருப்பத்தேர்வைக் கட்டுப்படுத்தி விடுகிறது.

குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்கும்போது அவருக்கு உதவியாக வழக்குரைஞர் ஒருவரை வைத்துக் கொள்ளலாம் என்று இச்சட்டம் கூறுவது வெறும் ஏட்டுச் சுரைக்காய் உரிமையாகத்தான் இருக்கும். கைது செய்யப்பட்டு முப்பது நாட்கள் வரை காவல்துறை பொறுப்பில் ஒருவரை வைத்துக் கொண்டு விசாரிக்க இச் சட்டம் அனுமதி தருகிறது. இதில் எல்லா நேரமும் வழக்குரைஞர் இருக்க முடியாது. எல்லார்க்கும் அந்த வாய்ப்பு கிடைக்காது.

இந்த வழக்கு இரகசியமாக நடைபெறும் என்பதே, இது ஜனநாயக உரிமைக்கும், மனித உரிமைக்கும் எதிரான சட்டம் என்பதைப் புலப்படுத்துகிறது. சாட்சிகள் இரகசியமாக வைக்கப்படுவார்கள் என்று கூறுவதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய முடியாது என்பதை இச் சட்டம் கூறுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக உள்ள இன்னொரு கொடுமை, பயங்கர வாதச் செயலில் ஈடுபட்டோர் குறித்துத் தகவல் தெரிந்து, அதைத் தெரிவிக்க மறுக்கிறார்கள் என்று யார் யார் மீது காவல் துறையினர் சந்தேகப்படுகிறார்களோ அவர்களையெல்லாம் இதே சட்டத்தின் கீழ் கைது செய்யலாம் என்பதாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர்க்கு வழங்கக் கூடிய குற்றவியல் நீதியை (Criminal Justice) மறுப்பது, அநாகரிகத்தை நோக்கியே சமூகத்தை இட்டுச் செல்லும். பயங்கரவாதத்திற்கு எதிராக என்று சொல்லிக் கொண்டு இன்று கூர் தீட்டப்படும் ஆயுதம், நாளை, அரசின் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு எதிராகவும் பாயும். இதுதான் கடந்த கால அனுபவம்.

இந்தச் சட்டம், காலாவதியான தடா போல, இஸ்லாமிய மக்களுக்கும், தேசிய இன உரிமை இயக்கம் நடத்துவோருக்கும் எதிராகவே மிகுதியும் பயன்படுத்தப்படும்.

இந்திய அரசு மனித உரிமைகளுக்கெதிரான, புதிய தடாச் சட்டம் கொண்டு வரும் முயற்சியைக் கைவிட வேண்டும். காஷ்மீர் போன்ற தேசிய இனச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு தான் பலனளிக்குமே தவிர பயங்கரவாதச் சட்டங்கள் அல்ல.

மனித உரிமையைப் பறிக்கும் இந்த காட்டுமிராண்டிச் சட்டத்தை எதிர்த்து அனைத்து சனநாயக சக்திகளும் ஒன்று திரள வேண்டும். போராடி முறியடிக்க வேண்டும் ●

## தமிழ்க் கலை இலக்கியப் பேரவை நிகழ்ச்சிகள்

### இலக்கிய நிகழ்ச்சி

சென்னை மூவரசன்பட்டு த.க. இ.பேரவை சார்பில் 30.09.2001 அன்று இலக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது.

திரு க.சுப்பையா தலைமையில் கவிஞர்கள் செந்தமிழ்ச் சித்தன், வசந்தப் பிரியன் ஐ.காதர்பாட்சா, இராதா கு. ஞானசேகர், சத்தியபாமா, கீதா தாராசுராம், க.பாபு ஆகியோர் கவிதை பாடினார்.

திரு அ.பாலசுந்தரம் சிறுகதை படித்தார். இதைத் தொடர்ந்து திரு செ. தட்சிணாமூர்த்தி "தமிழ் இலக்கியம் அன்றும், இன்றும்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று திரு நா.ஞானசேகரன் பேசினார்.

முடிவில் திருமதி இராதா ஞானசேசகர் நன்றி கூறினார்.

### படைப்பிலக்கிய அரங்கம்

சென்னை நங்கல்லூர் த.க.இ.பே. சார்பில் படைப்பிலக்கிய அரங்கம் 14.10.2001 அன்று நடைபெற்றது.

கவிஞர்கள், குணசேகரன், வசந்தப்பிரியன், ராதா ஞானசேகரன், செந்தமிழ்ச் சித்தன், முக்கனி தமிழரசன் ஆகியோர் கவிதை வாசித்தனர்.

திருவாளர்கள் முகிலை இராசபாண்டியன், மு.முத்துவேலு, வெங்கட்ராமன் ஆகியோர் சிறுகதை சொன்னார்கள்.

படைப்பாளிகளின் படைப்பு குறித்து விமர்சனம் நடைபெற்றது. திரு உதயன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினார்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ விடுதலைப்புலிகள் கர்னல் சங்கர் வீரமரணம்



அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக தமிழக நாளேடுகளில் செய்தி வரவில்லை. 'இது முக்கியச் செய்தியில்லை', 'இது பரபரப்புக்குத் தீனி போடாது' என்றெல்லாம் கருதி தமிழ் நாளேடுகள் இச்செய்தியைப் புறக்கணித்திருக்கலாம். ஆனால் இதே நாளேடுகள் சிங்களப் படையைச் சேர்ந்த சின்னத் தளபதி ஒருவர் இறந்து போனாலும் அவசரம் அவசரமாக பெரிய செய்தி போடும். ஈழ விடுதலைப் போரைப் பொறுத்தவரை, சிங்கள ராணுவம் கொடுக்கும் செய்திதான் தமிழ்நாளேடு களுக்கு முக்கியம்.

தமிழர்களைப் பொறுத்தவரை நடந்துள்ள இழப்பு சாதாரணமானதல்ல. புலிப்படையின் கர்னல் சங்கர் 2001 செப்டம்பர் 26 அன்று வீரமரணமடைந்தார். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு மிக நெருக்கமாக விளங்கிய பேராற்றல் மிக்க, சாதனைகள் பல படைத்த கர்னல் சங்கர், ஒட்டுச் சுட்டானிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி A.35 நெடுஞ்சாலையில் ஈரிருக்கை கொண்ட தமது ஜீப்பில் தன்னந்த தனியராய் சென்று கொண்டிருந்தபோது காட்டுப்பாதையில் எதிரியின் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இரையாகி வீர மரணத்தைத் தழுவினார்.

கனடா நாட்டில் மான்ட்ரியல் நகரில் புலம் பெயர்ந்து வசித்து வந்த வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் 1983 ஜூலை படுகொலைக்குப் பிறகு, சென்னை வந்து விடுதலைப்புலிகள் அமைப்பில் முழுநேர வீரர் ஆனார். இயக்கப் பெயர் தான் சங்கர்.

தற்போது, விடுதலைப்புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவுத் தலைவராக உள்ள பொட்டு அம்மானை 1985ஆம் ஆண்டு பிளாட் அமைப்பினர் வஞ்சகமாகக் கடத்திக் கொண்டு போய் விட்டனர். அவரை மீட்கும் பொறுப்பை சங்கரிடமும், அருணாவிடமும் ஒப்படைத்தார் பிரபாகரன். அப்போது சென்னையில் விடுதலைப்புலிகள் அலுவலகம் வைத்திருந்தனர். சென்னை மகாலிங்கபுரத்தில் அப்போதிருந்த தமிழ்ச் செய்தி நிலையத்தில் பிளாட் தளபதி கண்ணனை சங்கர் கைது செய்து, பின்னர் பொட்டு அம்மானை விடுவிக்கச் செய்து, கண்ணனை விடுவித்தார் சங்கர். அது முதல் சங்கரின் ஆற்றல் வெளி உலகிற்குத் தெரிய வந்தது.

விடுதலைப்புலிகளுக்கான, புதிய புதிய நிறுவனங்களைத் தொடக்குவதில் சங்கர் முக்கியமானவர். புதிதாக நிறுவப்பட்ட வான்புலிகள் படைக்கு சங்கரே தளபதியாக இருந்தார். கடற்புலிப் படைப்பிரிவின் நிருவாகத் தளபதியும் சங்கரே. கடல் புலிகளின் போர்க் கப்பலில் ராடார் சாதனம் உள்ளிட்ட நவீனக் கருவிகளைப் பொருத்துவதில் சங்கரின் பாத்திரம் மகத்தானது.

முல்லைத் தீவு (சூலை1996) கிளிநொச்சி (செப்டம்பர் 1998) ஆனையிறவு (ஏப்ரல் 2000) ஆகியவை மீட்கப்பட ஓயாத அலைகள் போரில் சங்கரின் பாத்திரம் பாராட்டிற்குரியது.

கடந்த ஆண்டு (2000), நார்வே தூதர் எரிக்சோல்கைமுடன், பிரபாகரன் பேச்சு நடத்தியபோது சங்கரும் தமிழ்ச்செல்வனும் உடன் இருந்தனர்.

1948 செப்டம்பரில் பிறந்த சங்கர் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் பின்னர் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியிலும் பயின்றார். சங்கருடன் பிறந்தவர்கள் 5 பேர்.

ஆறு சகோதரர்களில் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் சங்கர். இவர் சகோதரர் சித்தார்த்தன். 1987 ஆம் ஆண்டு பிப்ரவரியில் கைத்தடியில் ஏற்பட்ட வெடி விபத்தில் பொன்னம்மானுடன் சேர்ந்து வீர மரணம் அடைந்தார். மற்றொரு சகோதரர் கரன், 1987இல், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணியில், சிங்களக் கப்பல் படையால், வஞ்சகமாகப் பிடிக்கப்பட்டு, கொழும்புக்குக் கொண்டுபோக முயற்சித்த போது, குமரப்பா, புலேந்திரனுடன் சேர்ந்து நஞ்சருந்தி மடிந்த 12 புலிகளில் ஒருவர்.

1980களில், சிங்களப் படையால் தேடப்பட்டபோது காணாமற்போன, சங்கரின் கடைசித் தம்பி கடைசிவரை வீடு திரும்பவில்லை. அவரும் உயிரோடு இருக்க முடியாது. சங்கரின் இன்னொரு தம்பி பொறியியல் கல்லூரி மாணவராக இருந்த போது, சிங்கள விமானக் குண்டு வீச்சுக்குப் பலியானார். சங்கரின் அண்ணன் மட்டுமே இங்கிலாந்தில் டாக்டராக உள்ளார். குடும்பமே ஈழ விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

முள்ளியவளையில் உள்ள மாவீரர் நினைவு மண்டபத்திற்கு மக்கள் பார்வைக்கு வைக்க, சங்கரின் உடல் ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது மக்கள் வெள்ளம் அவருக்கு வீரவணக்கம் செலுத்தியது. தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மண்டபத்திற்கு வந்து சங்கருக்கு இறுதி வணக்கம் செலுத்தியபோது, கூடியிருந்தோர் வாய்விட்டுக் கதறினர்.

பட்டினிப்போர் தியாகி திலீபன் நினைவு நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றபோதுதான் கர்னல் சங்கர், எதிரியின் கண்ணி வெடிக்குப் பலியாகியுள்ளார். அமைதிப் பேச்சு நாடகமாடும் வேளையில் நயவஞ்சகச் செயலில் ஈடுபட்ட சிங்களப் படை இதன் பலனை அனுபவிக்கும் நாள் தொலைவில் இல்லை.

**கர்னல் சங்கருக்கு வீர வணக்கம்!**

- ஈழ



படிப்பகம்

www.padippakam.com

# பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்

- து.மூர்த்தி

பொதுவாக இப்படிப்பட்ட தலைப்புகளில் ஒரு பொதுக்கட்டுரை எழுதுவது என்பது மிக எளிதான வேலைதான். பெரியாரின் சிறப்புகளை எல்லாம் விதந்து கூறி, போற்றிப் பரவி 'அய்யாவே தலைவர்!' என முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் ஒருவேளை அக்கட்டுரை பக்கங்களை நிரப்பப் பயன்படலாம். ஆனால் நம் முன்னே இன்று கனலும் நடப்புகளும் உண்மைகளும், கருகிச் சீரழியும் தமிழர் வாழ்வும், அழுகும் அரசியலும் இந்தத் தலைப்பை இப்படி லேசாக அணுக முடியாதபடிச் செய்துள்ளன. கல்வி நேர்மையும் சமுதாயப் பற்றுறுதியும் உடைய ஓர் உண்மையான பெரியாரியல்வாதிக்கு முன்னால், இந்தத் தலைப்பு, செய்தி வாக்கியமாக இல்லாமல், வினா வாக்கியமாக அமைகிறது. பெரியாரா, இன்றுமா தேவைப்படுகிறாரா: 1) பெரியாரா இன்றும் தேவைப்படுகிறார்? 2) பெரியார் இன்றுமா தேவைப்படுகிறார்? 3) பெரியார் இன்றும் தேவைப்படுகிறாரா?

இந்த மூன்று வினாக்களும் இடைக்காலத் தமிழ்ப்புலவனின் சொல் விளையாட்டுகள் அல்ல; தத்துவம், காலம், நடைமுறை ஆகிய மூன்றின் இயங்கியல் விளைவுகள் ஆகும். 'இன்றைய தேவைகளின்' தன்மையை உணர்ந்து கொண்ட ஒரு சமூக விஞ்ஞானி "பெரியாரா?" என்ற முதல்கேள்வியைக் கேட்கிறான்; இவன் ஓர் கறாரான அரசியல்வாதி! "இன்றுமா?" என்ற கேள்வியைக் கேட்பவன் ஓர் வரலாற்று ஆசிரியன்; இவனைப் பொறுத்தவரை பெரியார் குறிப்பிட்ட காலத்தின் குறியீடு மட்டுமே! சமூக அக்கறை உள்ள, நடைமுறை அரசியலில் தவறாமல் பங்குபெறும் ஒரு சாதாரணக் கட்சி ஊழியன் "தேவைப்படுகிறாரா?" என்ற கேள்வியைக் கேட்கிறான், இவனுக்குத் தேவை உடனடி விளைவுகள்! ஆக, பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்ற தலைப்பு, புரட்சி நடவடிக்கையில், நடைமுறையில் உள்ள ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தீர்மான ஆவணத்தின், கருப்பொருளாக அமையும் விவாதமாகும்.



பெரியார் அவர் வாழ்ந்த காலத்திலேயே கூட சரியாக, உண்மையாக அடையாளப் படுத்தப்படவில்லை. இதில் பெரும்பங்கு ஏற்க வேண்டியவர்கள் பெரியாரிய வாதிகளே ஆவர்! "கடவுள் இல்லை என்று சொன்ன நாஸ்திகர், பார்ப்பன துவேஷி, வயதான காலத்தில் சின்ன பெண்ணைக் கல்யாணம் செய்தவர்" என்ற மூன்றாக மட்டுமே பெரியார், அவர் எதிரிகளால், அடையாளம் செய்யப்பட்டார். செதுக்கிக் காட்டப்பட்டார். எதிரியின் சூழ்ச்சியை அறியாத நாத்திக பஜனைக் கூட்டம், இந்த அடையாளத்தையே 'அனுமன் பிடி'யாகப் பிடித்துத் தொங்கியது.

'பெரியார் அடிப்படையில் ஓர் கம்யூனிஸ்ட், கம்யூனிச சமுதாயத்தைத் தன் இறுதி இலக்காகக் கொண்டவர்; இதற்கான வேலைத்திட்டங்களில் நிபந்தனைகளற்ற கலகக்காரராகவும் போராட்ட வீரராகவும் விளங்கியவர்' என்ற உண்மையை எதிரி - மேல்சாதிக்காரன் அவன் வாழ்க்கைத் தேவையில் இருந்து மறைத்தான்; திராவிடத்தான் - பிறப்பட்ட மேல்சாதிக்காரன். தன் சொந்த நலன்களைக் கிராமங்களில் தக்க வைத்துக்கொள்வதற்காக மறைத்தான்; சாதாரண ஊழியன், இன்றுவரை அறியாமையால் இந்த உண்மையைச் சுகமாக உணராமல் இருக்கிறான். உணர்ந்தவன் ஒதுக்கி வைத்து வருகிறான். ஆக, பெரியார் அவர் வாழ்நாளிலேயே உயிரோடு சமாதியாக்கப்பட்டார்; செத்த பின்பு தர்கா ஆக்கப்பட்டார். இந்தக் கண்ணோட்டத்தில் **பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்** என்ற தொடரைப் படிக்கும் போது நமது அறிவும், மனமும், சுயமரியாதையும் துன்புறுகின்றன; கனக்கின்றன!

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதில் உள்ள 'உம்'மை (பாமரனுக்கும் கூட) கீழ்க்கண்ட வினாக்களை எழுப்புகின்றன:

1. பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்றால், "அன்று" பெரியார் ஏன் தேவைப்பட்டார்?

2. அப்படியானால் அடிப்படையில் பெரியார் 'அன்று' என்னவாக இருந்தார்?

3. பெரியாரின் "அன்று" இன்னுமா தொடர்கிறது? தொடர்கிறது என்றால் ஏன்? எப்படி? (இந்த வினாவை நுட்பமாகப் புரிந்துகொள்ள வேண்டும். பெரியாரியம் அன்று; அன்றைய சமுதாயம் என்ற இரண்டாக இது பொருள்படும்)



படிப்பகம்

www.padippakam.com

4. பெரியார் 50 ஆண்டுகள் குருதி கொட்டிப் பணிபுரிந்த பின்பும் "அன்று" தொடர்கிறது என்றால் இதற்கான காரணங்கள் யாவை? காரணர்கள் யாவர்?

5. அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் முதல் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் வரை பெரியார் நடத்திக் காட்டிய பின்பும் பெரியாரின் "அன்று" தொடர்கிறது என்றால், "பெரியார் அன்றே தேவைப்படவில்லை" என்றுதானே பொருள் என எதிரி கூறும் வாதத்தை எப்படி அறிவுசான்று காட்டி முறியடிப்பது?

இந்தக் கேள்விகள் நியாயமானவை, ஆராயத் தக்கவை relevant questions to be probed properly- என்ற அளவில் மனதில் வாங்கிக் கொள்ளப்படுகின்றன என்ற நம்பிக்கையிலும், அவ்வாறு வேண்டிக்கொண்டும் விடைகாணும் முயற்சியைத் தொடர்கிறேன்.

பெரியாரின் அன்றைய கால கட்டத்தை வரலாற்று - சமூகவியலாளன் கண்ணோட்டத்தில் நான் படம்பிடிக்கப்போவதில்லை. இது தனி ஆய்வு. பெரியார் அடிப்படையில் "அன்று" என்னவாக இருந்தார் என அரசியற்படுத்தமுடியுமா என்று முயல்கிறேன். பெரியாரின் எதிரிகளும், சுயநலமும் அறியாமையும் மிக்க தோழர்களும் அடையாளப்படுத்திய, முன்பே குறிப்பிடப்பட்டுள்ள, மூன்று கூறுகளும் தான் பெரியார் அல்ல; அப்படியானால் பெரியார் "அன்று" என்ன.

**1.பொருள்முதல்வாதி:** கம்யூனிசத்தை இறுதி இலட்சியமாக அறிவித்தவர். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே தோன்றும் முரண்பாடுகளும் நடைபெறும் போராட்டங்களும் தொடர, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே தோற்றுவிக்கப்பட்டுள்ள சுரண்டலின் அனைத்து வடிவங்களையும் முற்றாக ஒழித்தல்.

**2.நாத்திகர்:** சரியான சொல், இயங்கியலாளர், நாத்திகம் என்ற சொல்லை 'கடவுள் மறுப்பு' என்ற சுருங்கிய பொருளில் மட்டும் பெரியார் பயன்படுத்தவில்லை. பெரியார் எங்கெல்லாம் நாத்திகத்தை ஒரு தத்துவமாகப் பயன்படுத்தியுள்ளாரோ அங்கெல்லாம் சோசலிசத்தைப் பற்றி மறக்காமல் பேசியுள்ளார்; நாத்திகத்தை அறிவுகொள் கருவியாகவும் 'tool to seek knowledge' அறிவுதேடு வழியாகவும் 'method to search knowledge' கொண்டவர்.

**3. வருணதர்ம ஒழிப்பாளர்:** சாதியை. அதன் நிறுவன வடிவத்தையும் அதன் தத்துவ மூலத்தையும். ஒழிக்க முயன்றவர். 'மாசுடைப்பிறப்பு' என்ற அடிப்படையில் தீண்டப்படுவோர், தீண்டப்படாதோர் என்ற பிரிவு; தீண்டப்படாதோர் வருணத்திற்கு வெளியே நிற்கும் அடிமைகள். தீண்டப்படுவோருள் குறிப்பாகத் தென்னிந்தியா - தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடவுள் தன்மையர் 'person of priesthood', பிறர் என்ற பிரிவு. இந்தப் 'பிறர்' என்ற பிரிவுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்பிரிவுகளே வர்ணாசிரம ஒடுக்குமுறையின் அடிப்படை வன்மையாகும். இந்தப் 'பிறர்' ஆகிய சூத்திரர்கள் சமூகப் படிநிலை ஒழிப்பில் யாரோடு சேர்ந்துகொள்ள விரும்புகிறார்கள் என்ற கட்டங்களே இந்தியாவின் அரசியல் மற்றும் அரசியல் போராட்ட வடிவங்களைத் தீர்மானிக்கின்றன. பெரியாரோ பிறப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட பிரிவுகள்-பிளவுகளையும் அதன் தத்துவச் சூழ்ச்சிகளையும் ஒழிக்க முயன்றவர்.

சாதியைச் சுரண்டலின் நிறுவனமாகக் கண்டார். இந்த நிறுவனத்திற்குள் நுழைக்கப்பட்ட 'தீண்டாமை'யை அதைத் தாங்கிக் - காப்பாற்றும் ஆதாரமாகக் கண்டார். எனவேதான் சாதிபேத மறுப்பு, சமபந்தி உணவு எனக் களியாட்டங்களில் இறங்காமல் வர்ண ஒடுக்குமுறை ஒழிப்பில் உழைத்தார்.

**4. மத ஒழிப்பாளர்:** பெரியார் பொதுவில் எல்லா மதங்களையும் எதிர்த்தவர்; மதங்கள் ஒழிந்த சமூகம் காண விழைந்தவர். இந்தியாவில் பெரும்பான்மையோர் இந்துவாக இருந்ததால் இந்துமத ஒழிப்பில் பெரிதும் ஈடுபட்டவர். வர்ண ஒடுக்குமுறை - இந்து மத ஒழிப்பு இந்தியாவில் அனைத்து மதங்களையும் ஒழித்துக்கட்டும் என நம்பியவர். கடவுளும் மதமும் மனிதகுல விடுதலையின் தடைக்கற்கள் எனக் கருதியவர். அரசியல் சமூக நிலையில், பொதுவாக அரசில் (State) இருந்தும் குறிப்பாகக் கல்வியில் (Education) இருந்தும் மதத்தை நீக்கி வைப்பதைத்தான் மதச்சார்பின்மை 'செக்யூலர்' எனக் கருதியவர்.

இந்துமதம் என்ற இரும்புப் போர்வைக்குள் இருந்த பார்ப்பனியத்தையும், இதற்கு விடாப்பிடியாகச் சேவகம் செய்த சற்சூத்திரர்களையும் தோலுரித்துக் காட்டியவர்.

**5. பெண்ணுரிமைப் போராளி:** சமுதாயப் போராட்டங்களின் வளர்ச்சியினூடே பெரியாரியலின் கூறுகள் பலவும் கடந்து செல்லப்படும் நிலையிலும் 'பெரியார் பெண்ணுரிமைப் போராளி' என்ற கூறு நிற்கும். இதன் பொருள் பெண் விடுதலைப் போராட்டம் சோசலிச அரசு நிறுவிய பின்பும் நடக்கும்.

**6. கூட்டுறவு இயக்க ஆதரவாளர்:** உழைப்பின் விளைவு - உற்பத்தியின் பயன், உற்பத்தியாளனுக்கும் அதைத் துய்ப்போனுக்கும் மட்டுமே சென்று சேர வேண்டும். 'இடைத்தரகர்' ஒழிந்த கூட்டுறவு நிலையங்கள் சோசலிசக் கட்டுமானத்தின் பயிற்சி நிலையங்களாக அமைய வேண்டும்.

**7. இட ஒதுக்கீட்டு ஆதரவாளர் :** பெரியார் வகுப்புரிமை வீரர் ஆவார்; சாதியப்படி நிலைகளால் பிளவுண்ட ஒரு சமுதாயத்தில், அனைத்து மக்களும் அரசு எந்திரத்தில் சமமாகப் பங்கேற்பதை ஜனநாயகத்தின் ஒரு கூறாக எடுத்துக் கொண்டு, 'சாதி அடிப்படையில் சமபங்கு'



படிப்பகம்

www.padippakam.com

என்ற கோரிக்கையாக வகுப்புரிமையை முன் வைத்தார். சமுதாய - சாதி இறுக்க ஒழிப்பில் - போராட்டத்தில் வகுப்புரிமையையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தினார். அரசியல் சொற்களில் சொல்வதென்றால் வகுப்புரிமை 'தொழிற்சங்க உரிமை'யைப் போன்ற ஒன்றாகும்.

பெரியார் இடஒதுக்கீட்டின் மூலம் சாதி ஒழிந்துவிடும் எனக் கனவு காணவில்லை. இடஒதுக்கீட்டின் மூலம் உழைப்பாளர் வர்க்க ஆட்சி தோன்றி விடும் என்று பொய்யுரைக்கவும் இல்லை. இவை முக்கியம்.

8. பகுத்தறிவு சான்ற, மானுட மேம்பாட்டை மையப்படுத்திய **கலை இலக்கியப் பார்வையைப், படைப்புகளை** வரவேற்றார். மொழியைக் கருத்தறி கருவியாகவும், கருத்தறிவிக்கும் ஊடகமாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும் கண்டார். விஞ்ஞான வளர்ச்சியின் கூறுகளை உள்வாங்காத அடையாளங்களை எதிர்த்தும், உள்வாங்கிச் செழுமைப்பட்ட வளர்ச்சியை ஆதரித்தும் வந்தார். பெரியாரின் அழகியல்; பயன்பாடு (application) சார்ந்தது; அமைப்புச் (Structure) சார்ந்தது அல்ல.

9. **இனவிடுதலையாளர்:** பெரியாரின் இனவிடுதலைக் கோட்பாடு இரண்டு வகைப்படும்: அ.இந்தியாவின் போலி தேசியக் கட்டமைப்பைக் கடுமையாக இறுதிவரை எதிர்த்தவர்; ஆ.தமிழ் இன அடையாளத்தின் அளவுகோலாக பார்ப்பன - பனியா - இந்தி ஆதிக்க ஒழிப்பை முன்னிறுத்தியவர். இன அடையாளத்தின் 'ஆதிக்கம்' என்ற இச்சொல் முக்கியமானது. பார்ப்பனர்களை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்றோ, நாட்டை விட்டு விரட்டிவிட வேண்டும் என்றோ எங்கும் எந்தச் சமயத்திலும் கூறாதவர்.

10. **சமாதானம்:** 'கவலையற்ற மனச் சமாதானம் உடைய மனித குலத்தை- சமுதாயத்தை உருவாக்குவதே' பெரியாரின் அடிமனக் கருத்தாக இருந்தது. பொருள்களின் நிறைவால் (fullfilment of basic needs) கவலையற்ற சமுதாயத்தை உருவாக்கமுடியும். மனச் சமாதானமுள்ள சமுதாயம் என்பது தனிமனித உள்துடிப்புகளின் (Insticts) நிறைவுக்கும் வளர்ச்சிக்கும் வழியேற்படுத்திக் கொடுக்கும் சமுதாய அமைப்பு முறையாகும்; திறமைகளும் (Skills) அதன் அடிப்படையில் பெறும் சமூக மரியாதையும் எல்லா நிலைகளிலும் சமம் என்பதாகும்.

பெரியார் 'அன்று' இப்படியெல்லாம் இருந்தார் என்பது நம் ஆசைகளோ, அவர்க்கான புகழ்மொழிகளோ அல்ல; அறிவுவாதியான - நாத்திகரான பெரியார் தன் சமூக ஆய்வின் முடிவுகளில் இருந்து மேற்கண்ட நிலைகளை மேற்கொண்டார். புத்தரைப் போல எங்கே தன்னையும் கடவுளாக்கி விடுவார்களோ என்ற அச்சம் பெரியாருக்கு நிரந்தரமாக இருந்திருக்கக் கூடும். எனவேதான் 'கடவுள் இல்லை' என்ற முழக்கத்தில் கடைசிவரை தெளிவாக இருந்தார்.

பெரியார் கடைசிவரை நாத்திகராக இருந்தார் என்பதன் உண்மைப் பொருளை பெரியாரியவாதிகள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். புத்தர் முதல் மார்க்சு வரை தோன்றிய அறிவுவாதிகளின் நோக்கம், இல்லாத கடவுளோடு சண்டையிடுவது அல்ல; மனிதகுலத்தின் விடுதலைக்கான தடைக்கற்களுள் ஒன்றாகக் கடவுள் இருந்தது என்பதுதான். திராவிடப் பெரியாரிய வாதிகள் 'கடவுள் ஒழிப்பில்' அதன் **சமூகவிடுதலைப் பண்பை** ஒழித்துக்கட்டிவிட்டு விடாப்பிடியாக நின்றனர். பெரியார் வீழ்ந்தார். ஆக, அன்றைய பெரியாரியம் - பெரியார் - என்பது அன்றைய சமூக மாற்றத்தேவைகளின் தத்துவமாகவும் நடைமுறையாகவும் இருந்தது. எனவே, பெரியார் அன்று தேவைப்பட்டார்.

அன்று தேவைப்பட்ட பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்றால் பெரியாரின் "அன்று" (அன்றைய பெரியாரியம், அன்றைய சமுதாயம்) இன்னுமா தொடர்கிறது? தொடர்கிறது என்றால் ஏன்? எப்படி? இதற்கான காரணிகள் என்ன? அப்படியானால் பெரியாரியமே கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டுமா? மிகக் கவனமாகப் பாசாங்குகளுக்கு அப்பாற்பட்டு, அணுக வேண்டிய வினாக்கள்.

இதற்கு முன்னால் ஒரு கருத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். பெரியார் சலனம் - சபலம் அற்ற போர் வீரராக இருந்தது உண்மை. அதே சமயம் இக்கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்டுள்ள பத்துக் கூறுகளும் அதையொட்டிய பிறவற்றையும் உள்ளடக்கிய பெரியாரியத்தில் "அரசு எந்திரம்" (State as a Machine) பற்றிய எந்தக் கண்ணோட்டமும் இல்லை. அதே சமயத்தில் அவர் காலத்தில் நிலவிய அரசு எந்திரத்திற்குள்ளேயே அவரது கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இன்னொரு கசப்பான உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். தமிழ்நாடு விடுதலை, சோசலிசம் வரை பேசிய பெரியார் அதற்கான கட்சிகட்டும் பணியில் இறங்கவே இல்லை. இவையெல்லாம் பெரியாரியத்தின் உள்ளொட்டி (inherent) இருந்த குறைபாடுகளாகும். பெரியார் அவர் முழுச் சக்தியையும் தமிழரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டாலே போதும் என்ற அளவில் செலவிட வேண்டியதாயிற்று. தனி மனிதர் ஒருவரைத் தத்துவமாகவும் தலைவராகவும் நிறுவனமாகவும் வைத்து நடத்தப்பெறும் அரசியல் போராட்டங்கள் ஆசிய சமூகங்களில் ஒரு கறையாகவே (Trat) இன்றுவரை இருந்து வருகின்றது.

அன்றைய புரட்சிகரமான பெரியாரியத்தில் தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட பெரியாரிஸ்ட்டுகளின் தன்மைதான் என்ன? இது மிக முக்கியம். பெரியார் இன்றும் ஏன் தேவைப்படுகிறார் என்பதன் ஊற்றுக்கண்ணாக இதை நான் அணுகுகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

சோசலிச விடுதலை வீரரான பெரியார், தன் அரசியல் முழக்கங்களின் வழி, பன்முகத் தன்மை வாய்ந்தவராக விளங்கினார். அவர் எந்தவொரு அரசியல் முழக்கத்தையும் அதற்கான முழு தத்துவ - நடைமுறைப் பொருளில் அறிவித்தார், கடைப்பிடித்தார், போராடினார். ஆனால் பெரியாரிஸ்ட்டுகளும் சரி, பெரியார் அனுதாபிகளும் சரி, பெரியாரிசத்தின் எந்தவொரு கூறையும் அதன் முழுப்பொருளில் ஆதரித்தவர்கள் அல்ல. மூளைக்குள் கண்ணிவெடி சிதறுவதை என்னால் உணரமுடிகிறது! பெரியாரை ஆதரித்தவர்கள் எல்லோருமே நாத்திகர்கள் அல்லர்; இன்னும் சொல்லப்போனால் ஆத்திகத் தமிழர்கள்தான் அதிகம் ஆதரித்தனர். பெரியாரை ஆதரித்த நாத்திகர்கள் கூட, பெரியாரின் நாத்திக அர்த்தத்தில் அதைப் புரிந்துகொள்ளவில்லை. எப்படி?

பெரியாரின் நாத்திகம் 'வெறும் கடவுள் மறுப்பு' அல்லவே அல்ல; அது அவர்க்குச் சோசலிசத்தின் போர்வாளாகவும் சாதி ஒழிப்பின் தத்துவமாகவும் பயன்பட்டது. ஆனால் பெரியாரின் நாத்திக ஆதரவாளர்கள். 'இல்லாத ஒன்றை ஒழிப்பதில்' மட்டும் நிறுத்திக் கொண்டனர். அதாவது கடவுள் இல்லை என்று அலறுவது நகரத்திலும் கிராமத்து மேடைகளிலும் மரியாதைக்குரிய ஒன்றாகக் கூட இருந்தது. ஆனால் அதன் தொடர்ச்சியாக சாதி ஒழிப்பில் - தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்குவதில் இருந்து விடுபடுவதில் - அவர்களால் இறங்க முடியவில்லை. சாதிப் பெருமையும், உடைமைப் பெருமைகளும் அவர்களை வர்ண ஒழிப்பின் - சோசலிசத்தின் முதற்படிக்கட்டு வரை கூட அனுமதிக்கவில்லை. பெரியார் நாத்திகச் சாட்டையால் கடவுள், வர்ணம், சாதி, முதலாளித்துவம், காலனித்துவம் என அனைத்தையும் வெளுத்தார். அவர் தொண்டர்கள் 'கடவுளோடு' நிறுத்திக் கொண்டனர். பெரியார்க்குத் துரோகமிழைத்தனர். பெரியார் 'தர்கா' ஆனார். பெரியார் 'அன்று' என்னவோ அது இன்றும் தொடர்கிறது; எனவே, பெரியார் தேவைப்படுகிறார்.

இவ்வளவு எளிய செய்தியா இது? அல்ல! இது விளக்கத்தின் முதல் ஒளிக் கீற்று! பெரியாரை ஆதரித்தவர்கள் எல்லோருமே நாத்திகர்களோ, வர்ண ஒழிப்பாளர்களோ, சோசலிஸ்டுகளோ அல்லர் என்பது வெளிப்படை. ஆனால் எல்லோரும், விதிவிலக்கே இன்றி, ஒன்றுபட்டுப் பெரியாரை ஆதரித்த ஒரு புள்ளி உண்டு. அதுதான் வகுப்புரிமை - இட ஒதுக்கீட்டு உரிமையாகும். பெரியார் காலத்திலேயே பேரளவில் தமிழ்நாட்டில் இந்தக் கொள்கை வெற்றி பெற்றது. ஆஸ்திகர், சாதிவெறியர், மதவெறியர், பெண்ணடிமையாளர், முதலாளித்துவவாதிகள், இந்திய தேசியத் தமிழர் என அனைவர்க்கும் இது - வகுப்புரிமை - பொதுவானதாகத் தேவையானதாக இருந்தது. ஒன்றிணைந்தனர், பெரியாரைத் தூக்கிப் பிடித்தனர், போராடினர், வென்றனர். இட ஒதுக்கீடு 75% மக்களுக்கு 69% வரை தமிழ்நாட்டில் சென்றது. பொதுப்பட்டியலின் முதல் ஏழுநிலைகளை அடையும் அளவிற்கு இவர்கள் முன்னேறியுள்ளனர்.

தங்கள் கோரிக்கை முடிந்ததும், வென்றதும் பெரியாரைத் 'தொப்' பெனத் தூக்கிப் போட்டுவிட்டு ஓடினர், எங்கே? சாதி (சங்கம்) வெறி, மதவெறி, ஊழல் வெறி, ஆங்கில வெறி, முதலாளித்துவ வெறி, பண்பாட்டுச் சீரழிவு வெறி என வெறியர் கூட்டம் தங்களுக்கான அரசியல் அமைப்புகளை உருவாக்கிக் கொண்டன. எனவே, பெரியார் தோற்றார், எனவே பெரியாரின் 'அன்று' தொடர்கிறது எனவே, பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்.

பெரியார் 50 ஆண்டுகாலம் இரத்தம் பாய்ச்சிப் பணியாற்றிய பின்பும் பெரியாரின் "அன்று" அப்படியே தொடர்கிறது என்றால், பெரியாரியமே கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டாமா? எதிரி இந்தக் கேள்வியைக் கேட்கிறானோ இல்லையோ நாம் கேட்டே ஆகவேண்டும். அதுவே தத்துவத்தின் வெற்றியாகும்.

பெரியாரியத்தின் தர்க்கரீதியான முடிவு (Logical end), இன்றைய சீரழிந்த / ஊழல் நிறைந்த திராவிடக் கட்சிகள் மற்றும் அவற்றின் கால்நக்கிகள், சாதிக்கட்சிகள், மதவெறி கொழுந்துவிடல், தீண்டாமை, தாழ்த்தப்பட்டோர் மீது தொடுக்கப்படும் உடல்சார், பால்சார் கொடுமைகள், விநாயகர் ஊர்வலங்கள், தாமிரபரணியில் மூழ்கடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட தொழிலாளர்கள், கட்சிக் கூட்டு உண்டென்றாலும் தாழ்த்தப்பட்டவர்க்கு வாக்களிக்காத பிற்பட்டோர் இவைதான் என்றால் பெரியாரியலில் எங்கே குறை இருக்கிறது? பெரியார் எங்கே இருந்தார்? எங்கே இருக்கிறார்? இவை ஆராயப்பட வேண்டாமா?

1. காலனித்துவம் வேரோடு களையப்பட்டு, தூக்கியெறியப்பட்டு, காலனியவாதிகளின் சொத்துக்கள் அனைத்தும் நஷ்ட ஈடு கொடுக்கப்படாமல் பறிமுதல் செய்யப்பட்டு, அவை அனைத்தும் தேசியச் சொத்தாக்கப்பட வேண்டும் என்று கூறிய பெரியாரிசத்தின் தொடர்ச்சிச் செயல்பாடுகள் என்ன?

2. 1940 சனவரியில் பம்பாயில் நடைபெற்ற "அம்பேத்கார், ஜின்னா, பெரியார்" முத்தரப்புக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது என்ன? அதன் தொடர்ச்சி என்ன? இந்த முக்கூட்டின் தத்துவம் தான் என்ன? இதை வெறுமனே தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முஸ்லீம் கூட்டு எனக் கொச்சையாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

3. கிராமங்களில் இருந்து பெரியார் இயக்கம் ஏன் தீவிரமாக நகரங்களுக்கு (பிராமணாள்கபே ஒழிப்பு முதலியன) இடம் பெயர்ந்தது?

4. 1931க்கு முன்பிருந்தே 'சமதர்மம்' பேசிய, மாஒவை வரவேற்ற, ஸ்டாலினை ஆதரித்த பெரியார், ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய பிறகு மிகத் தீவிரமாக 'தோழர்', 'இரஷிய நீதி', 'கூட்டுறவு' 'பெண்ணுரிமை', முதலானவற்றைப் பேசியிருந்தும், பெரியார்ப் பணிகள் எதனால் வகுப்புரிமை, நாத்திகம் எனச் சுருக்கப்பட்டன?



படிப்பகம்

www.padippakam.com

5. கிரிப்ஸ் கமிஷனில் பெரியார் கோரிக்கை - தனிநாடு - நிராகரிக்கப்பட்ட பின்பு அதன் வெற்றிக்குப் பெரியாரும், கட்சியும் செய்த பணிகள் யாவை?

6. மாபெரும் பகுத்தறிவு மேதையாக இருந்த பெரியார், பைசா பைசாவாக உண்மையுடனும், நெறியுடனும் கட்சிக் கொள்கைக்காகப் பணம் சேர்த்த பெரியார், அதை நிறுவனப்படுத்துவதிலும், அது எப்படிச் செலவிடப்படவேண்டும் என்பதிலும் கவலையற்றும் அக்கறையற்றும் இருந்துவிட்டுப் போனாரே, இதன் விளைவுகள் தான் என்ன?

சுருங்கச் சொன்னால் பெரியாரின் புரட்சிகரத் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் கட்சிக்கும் இடையே நிலவிய பயங்கரமான இடைவெளியில் முளைத்த காளான்கள் அரசதிகாரம், சமூக அதிகாரம், அதிகார வர்க்க அதிகாரம் பெற்றன! பெரியார் வீழ்ந்தார். இனி என்ன?

## II

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் எனும்போது, குறிப்பாகத் தமிழ்நாட்டில், அவர் காலத்திய அதே சமுதாய அரசியல் நிலைமைகளே இன்னும் நிலவுகின்றன என்றால் நாம் பொதுவாகவே வரலாற்றையும் அரசியலையும் பிறழ உணர்ந்தவர்களாவோம். எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அந்த மாற்றங்கள் யாவும் வளர்ச்சிக்குத் துணை செய்யும் மாற்றங்களாக அமைந்துள்ளனவா, வரலாற்றைப் பின்னுக்கு இழுப்பனவாக உள்ளனவா, பெரியாரின் ஆதரவு அல்லது எதிர்ச் சக்திகளுக்குத் தலைமை அளித்துள்ளனவா என்பவைதான் நாம் ஆராய வேண்டிய வினாக்கள்.

தமிழ்நாட்டில் கல்வி பெருகியுள்ளது; பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும்தான் அதிகார வர்க்கத்தில் கணிசமாக உள்ளனர். காவல்துறை பிற்படுத்தப்பட்ட மக்கள் கையில்தான் உள்ளது. கிராமத்தின் ஆட்சி அதிகாரம் பிற்படுத்தப்பட்ட மக்களிடமே உள்ளது. நிலவுடைமை பார்ப்பனர் அல்லாத வேளாளர்களிடமும் பிற்படுத்தப்பட்டோரிடமுமே உள்ளது; தாழ்த்தப்பட்டோர் இன்னும் இவர்களைச் சார்ந்த உழைப்புக் கூலிகளாகவே உள்ளனர். ஒப்புக் கொள்கிறோமோ இல்லையோ 1967 முதல் ஏறக்குறைய 34 ஆண்டு காலம் தமிழ்நாட்டில் பெரியார் பெயர் சொல்லும் திராவிடக் கட்சி ஆட்சிகளே உள்ளன. யாரும் இட ஒதுக்கீட்டை எதிர்த்து அரசியல் ஆதிக்கம் பெற்று விட முடியாது. பல்கலைக்கழக, கல்லூரி, பள்ளி ஆசிரியர்களுள் பெரும்பாலோர் பார்ப்பனர் அல்லாதவர்களே! டி.வி.எஸ். போன்ற ஒரிரு பெரிய தொழிற்சாலைகளைத் தவிர, சிமெண்ட் உற்பத்தி, சர்க்கரை ஆலைகள், பேருந்து கம்பெனிகள், தோல் வணிகம், துணி உற்பத்தி, கட்டடத் தொழில் இப்படிப்பட்ட தொழில்களில் பார்ப்பனர் அல்லாதாரே அதிகம். இந்தப் பட்டியல் இன்னும் நீளக் கூடும்.

தமிழ்நாட்டின் பத்திரிகைகளும் தொடர்புச் சாதனமும் இன்னும் பார்ப்பனர்கள் கையில்தான் உள்ளன. பிற்படுத்தப்பட்டோரிடமும் உள்ள சாதனங்களோ, பார்ப்பனர்களை விட மிக அதிகமாகச் சமுதாயத்திற்குக் கேடு செய்வனவாக உள்ளன. குடும்பம், வணிகம் என்ற இரண்டைத் தாண்டி இவை வெளியே வந்ததில்லை. அதிகார வர்க்கத்திற்கு வந்த பிற்படுத்தப்பட்டவர்களைப் போலவே தொடர்பு சாதனத்தை வளர்த்துக் கொண்ட இவர்களும் எல்லா வகையிலும் பெரிய கம்பெனி முதலாளிகள் என்ற நிலையில் இருந்து மாறி உலக அளவிலான வணிகக் குடும்பங்களாக (International corporate business house) தங்களை உயர்த்திக்கொள்ளவே முயல்கின்றனர். நீதியும் கோயிலும் இன்னும் மேல் சாதியிடமே உள்ளன. மிகக் கேவலமான வளர்ச்சி ஒரு திராவிடக் கட்சி இந்து வெறியர் காலிலும், இன்னொரு பெரியார் கட்சி பார்ப்பனக் காலிலும் தங்கள் இனத்தின் சுயமரியாதையை அடகு வைத்துவிட்டதுதான்.

சாதிக் கட்சிகளும் சங்கங்களும் வளர்ந்துள்ளன; பெருகியுள்ளன. திரு.வி.க., பாரதிதாசன் உட்பட பலரும் சாதிக்குள் சாதிப் பெருமைக்குள் அடக்கப்படுகின்றனர். இந்து வெறிச் சக்திகள் அனைத்தும் முனைப்பாய்ச் செயல்படுவதும், இவற்றை எதிர்த்து எந்தக் குழுவும் வீதிக்கு வந்து போராட முடியாமல் இருப்பதும் கண் கூடு. இந்தியாவில் 'பிஜேபி' என்ற மதவெறி அரசியல் கட்சிக்கு, அரசியல் ரீதியில் எதிராகப் பல்வேறு கட்சிகள் அமைப்புகள் நாடு முழுக்க உள்ளன. ஆனால் 'இந்துத்துவா', என்ற அதன் பாசிசத் தத்துவ வெறியைத் தத்துவரீதியில் எதிர்த்துப் போரிட்ட ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இப்போது அந்தத் தமிழ்நாடும், 50 ஆண்டு காலம் பெரியார் உழைப்புக்குப் பின்னைய தமிழ்நாடும், தத்துவ ரீதியில் வீழ்ந்து விட்டது.

ஆக, பார்ப்பனர் அல்லாதார் எழுச்சி, பார்ப்பனரையும் உள்ளிட்ட தமிழர் ஐக்கியமாக உருப்பெறாமல், சாதி வெறியால் துண்டு துண்டாகச் சிதறிவிட்டது; தமிழர் ஓர் இனமாக இறுக்கமாகக் கெட்டிப்படாததால், தனிநாடு அல்லது உண்மையான கூட்டாட்சி என்பதின் அருகில் கூட வரமுடியாததோடு ஒற்றையுறுப்பு மைய ஆட்சிக்கு வெளிப்படையாக அடிமைச் சேவகம் செய்து கொண்டுள்ளது. இந்தியாவை, இராணுவம் - பொருளாதாரம் ஆகியவற்றில், ஓர் அலகாகக் (One unit) கருதி அதன் அடிப்படையில் பொருளாதாரக் கொள்கையை எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் எந்தத் திராவிட - தமிழ் அரசியல் கட்சிகளும் வகுத்துக்கொண்டதில்லை. இதன்



படிப்பகம்

www.padippakam.com

விளைவாக உலக நாடுகளின் சுரண்டல், மைய அரசின் சுரண்டல், பனியா - மார்வாரிகளின் சுரண்டல் இவற்றைத் தமிழகம் எதிர்க்க முடியாததோடு, தமிழ்நாட்டின் வாய்ப்புப் பெற்ற பணமுதலைகள் சாதி வேறுபாடு இன்றி இந்தப் பொருளாதாரச் சுரண்டலின் கூட்டாளிகள் ஆனார்கள். மேலே கூறிய நிலைமைகளைத் தொகுத்து/ பொதுமைப்படுத்திக் கூறுவது என்றால், 'பார்ப்பனியம் + முதலாளித்துவம் என்ற கூட்டுச் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் பல்வேறு தளங்களில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், பிற்படுத்தப்பட்டோர் எனப் பலரும் இடம் பெற்றிருப்பதை வெளிப்படையாகக் காணமுடியும்' எனக் கூறலாம். இந்த நிலைமை விந்தையான ஒன்று அல்ல; பெரியாரை அவர் காலத்திலேயே வீழ்த்த முடியாத அவர் எதிரிகள் அவரை 'மகான்' ஆக்க புற அளவில் முயன்றதும், அவருடைய தோழர்கள் என்போர் நுட்பமாக ஆங்கிலக் கல்வி பெற்ற அண்ணாத்துரை போன்றோர் - பெரியாரியலைத் தத்துவப்படுத்தி அதற்கான புரட்சிகரக் கட்சி கட்டாததோடு, அவர்தம் தத்துவத்தில் இருந்து இழிந்து அவரை விட்டு ஓடியதும், தொடர்ந்து அவரைப் பின்பற்றியோர் தங்கள் நிலவுடைமைத் தத்துவ நலன்களைச் சிறிதளவும் விட்டுவிடாமல், அவருடைய நாத்திகக் கொள்கைகள் மற்றும் இட ஒதுக்கீட்டு நலன்களில் மட்டும் தாலூன்றியதும் தான், பெரியார் அவர் காலத்திலேயே வீழ்த்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகும்.

அப்படியானால் பெரியார்/ பெரியாரியம் என்பது "இன்று" என்ன? பெரியார் "அன்று" என்பதை விளங்கிக் கொண்டது போலவே பெரியார் "இன்று" என்பதையும் விளங்கிக் கொள்ள முயல வேண்டும். முதற்கண், இன்றைய பெரியாரியம் என்பது வெறுமனே ஒரு சமுதாயச் சீர்திருத்த - கடவுள், மதம், சாதி, பார்ப்பனர், புராணம் இவற்றைக் கிண்டல் செய்தல், மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடத்தல்... கோட்பாடு அல்ல என்பதைத் தெளிவாகக் கூறுகிறேன். பெரியாரியம் என்பது மையப்படுத்தப்பட்டுவிட்ட நவகாலனியச் சுரண்டலுக்கும், இந்துத்துவ வெறி ஒடுக்குமுறைக்கும் கிராமங்களில் நிலவும் அனைத்துவகை ஆதிக்கச் சாதிகளின் ஒடுக்குமுறைக்கும் எதிரான சமரசமற்ற ஓர் அரசியல் போராட்டமாகும். அதாவது மையப்படுத்தப்பட்ட இராணுவத்திற்கும், இந்துத்துவ பாசிச அரசுக்கும் (State) அனுமதிக்கப்பட்ட/ போராடிப் பெற்ற எல்லா ஜனநாயக உரிமைகளும் பறிக்கப்பட்டுவிட்ட ஒடுக்குமுறை வடிவங்களுக்கும் (Anarchic rule of Law) எதிராக, குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளின் மீட்சிக்கான, அனைத்திந்திய அளவில் நடைபெற வேண்டிய அரசியலும் அதன் தத்துவமும் ஆகும். பெரியாரை அவருடைய அதே பழைய வடிவத்திலேயே பயன்படுத்த முடியாமல் - பயன்படுத்த முடியாது - கருத்தைக் கூர்மைப்படுத்தியும் தளத்தை (நேயச் சக்திகளை) விரிவுபடுத்தியும் நடத்த வேண்டிய அனைத்திந்திய அரசியலாகும்.

இங்கே நான் இன்றைய பெரியாரிஸ்டுகளின் வகைபற்றியும் நேயச் சக்திகள் பற்றியும் சிறு குறிப்பையாவது எழுத வேண்டும். மொழி நலச் சக்திகள், தமிழர் தேசியச் சக்திகள், தமிழின விடுதலைச் சக்திகள், வகுப்புரிமையை ஒப்புக் கொண்ட மார்க்சிய லெனினியச் சக்திகள், வர்க்கப் போராட்டத்தை அரசியல் தலைமையாகக் கொண்ட சக்திகள் முதலியன பெரியாரிசத்திற்கு எதிராகப் போகாத ஆதரவு தரக்கூடிய நேசச் சக்திகளாகும். ஆனால் ஒரு தத்துவம் அதற்கான நேசச் சக்திகளால் மட்டும் வெற்றிபெற்றுவிடக் கூடியது அன்று; அந்தத் தத்துவத்திற்கென்றே புரட்சிகரக் கட்சி ஒன்று வலுவாகக் கட்டப்பட வேண்டும். இப்படிப்பட்ட கட்சி நேற்று முதல் - பெரியார் காலம் முதல் இன்றுவரை இல்லை, இல்லவே இல்லை என்பதுதான் கசப்பான, பெரியாரைப் போன்ற, பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்பது போன்ற உண்மை.

பெரியாரிஸ்ட்டுகளில் பெரும்பாலோர் பெரியார் பக்தர்கள்; அவர் தும்மியது போலவே தாங்களும் தும்ம வேண்டும் என்ற பரவச பக்தியில் மூக்கின் அழுக்கைக் குடைபவர்கள்; இவர்கள் தும்மி ஓய்வர்! அடுத்த நிலையினர் பெரியார் வியாபாரிகளும் துரோகிகளும் ஆவர். உணர்வு பூர்வமாகக் காசை வழிபடுபவர்களும், தங்கள் உடைமை நலனில் இருந்து தத்துவத்தைத் திரிப்பவர்களும் ஆவர். ஆளும் கணத்தாரின் ஆதரவுபெற்ற இவர்கள் பெரியாரிசத்தின் எதிரிகளுக்குப் பெரியார் பெயரில் ஆதரவளிப்பவர்கள். அபாயமானவர்கள்! மூன்றாவது நிலையினர் பெரியார் வீரர்கள். சுயநலமற்ற இந்தத் தோழர்கள் பெரியாரைத் தங்கள் ஆர்வத்தாலும் அறியாமையாலும், சில சமயம் அறிவு அகம்பாவத்தாலும், பல சமயம் தலைமை மேட்டிமையாலும், பெரியாரைத் தங்கள் கால், அரை, முக்கால், ஒன்றரைக் கண்ணால் பார்த்து இன்றுவரை அழிந்து போகிறார்கள்; இவர்கள் பல பிரிவினர்; இவர்களுடைய அனுகூலக் கூறு இவர்கள் இழக்கத் துணிந்த சுயநலமற்ற தொண்டர்கள் என்பதுதான். முதலில் இவர்களைத் 'தத்துவப்படுத்துவது' என்பதுதான் மிகப் பெரிய தேவையாகவும் நடைமுறையாகவும் இருக்கிறது.

1. பெரியாருக்கு அரசு (State) பற்றி எந்தக் கண்ணோட்டமும் இல்லை.

2. பெரியார் 'நாத்திகம்' என்ற சொல்லை எங்கெல்லாம் தத்துவப் பொருளில் பயன்படுத்தினாரோ அங்கெல்லாம் 'சோசலிசம்' பற்றிப் பேசியுள்ளார்.

3. பெரியார் பெண்விடுதலையைச் சோசலிசத்தின் உடன் நிபந்தனையாக வைத்தார்.

4. 'பார்ப்பான்' என்ற சொல்லை 'ஒடுக்குமுறை' வடிவமாகக் கூறிய அனைத்து இடங்களிலும் 'மேல்சாதி' என்ற சொல்லையும் பயன்படுத்தினார்.



படிப்பகம்

www.padippakam.com

5. பெரியார் வகுப்புவாரி உரிமையைப் பற்றி மிகக் குறைவாகவே எழுதினார்; பேசினார்.

6. கிராமங்களில் சாதி உரிமையைத் தகர்த்தெறிவதையும் பெண்விடுதலையையும் உடன் நிபந்தனையாகக் கொண்ட, சோசலிசத்தை நோக்கிய ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களே இன்றைய பெரியாரியம்.

இந்தக் கருத்துகளை எந்த அளவில் புரிந்து உள்வாங்கிக் கொண்டோம் என்பதைப் பொறுத்தே பெரியாரிஸ்டுகளின் பலமும் பலவீனமும் தீர்மானிக்கப்படும்.

## III

இன்றைய பெரியாரியத்தை வரையறுத்தல் அல்லது புரிந்து கொள்ளுதல் வெறும் தத்துவவேலை அன்று; அது நடைமுறை அரசியல் வேலைகளும் அதனூடே செய்யப்பட வேண்டிய படிப்பு - விவாத வேலைகளும் ஆகும். பெரியாரியம் என்பது தனித்து இயங்கக் கூடிய (absolute) கட்டளைகளின் தொகுப்பு அன்று; அது பலருடைய, அரசியல் போராட்ட முன்னோடிகளின். அனுபவங்களில் இருந்து செதுக்கி அமைக்கப்பட வேண்டிய வேலைத்திட்டமாகும். அயோத்தி தாச பண்டிதர், சோதிபாபுலே, அம்பேத்கர் போன்ற இந்தியப் போராளிகளின் அரசியல் நடைமுறைகள், வெற்றிகள், தோல்விகள், மார்க்சியத்தின் வெற்றிகள் தோல்விகள் ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு இன்றைய பெரியாரியம் இயங்கும் என நாம் ஆசை கொண்டோமானால், கனவு கண்டோமானால், சந்தாக் கம்யூனிஸ்ட்டுகள், வேதக் கம்யூனிஸ்ட்டுகள், தரகுக் கம்யூனிஸ்டுகள் எனக் கம்யூனிசம் கம்யூனிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டதைப் போல, பெரியாரிசம் தமிழ் விடுதலைப் போராளிகள், தமிழ்நாட்டு விடுதலைப் போராளிகள், மூட நம்பிக்கை ஒழிப்பாளிகள், வகுப்புரிமை கம்யூனிஸ்ட்டுகள் எனப் பலச் சறுக்கல்களாய்ச் சீரழியும். இந்த அபாயத்தை முன்னுணராமல் போனால் பெரியார் வீரர்களால் மீண்டும் ஒரு 50 ஆண்டுகள் பெரியாரிசம் ஆராய்ச்சிக்குரிய பொருளாகவே நிறுத்தப்படும்.

இந்த முன்னுரையின் அடிப்படையில் பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதற்கான அரசியல் முழக்க இணைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன். இன்று நாடு தழுவி இயக்கப்படும் மக்களுக்கான அரசியல் முழக்க இணைகள்.

1. இந்துத்துவ எதிர்ப்பும் மதச் சார்பின்மை ஆதரவும் (anti-Induttva and Pro-Secularism)

2. மைய அரசு எதிர்ப்பும் இனங்களுக்கான ஆதரவும் (anti centre and pro-Nationalities)

3. நிலவுடைமை எதிர்ப்பும் சோசலிச ஆதரவும் (anti-Feudal and pro-socialism)

4. காலனிய எதிர்ப்பும் தேசங்களின் விடுதலை ஆதரவும் (anti-Colonial and pro liberations of Nations)

இப்படிச் சிலவற்றை அடுக்கமுடியும். இவை நான்கும் இன்ன பிறவும் தனித்தனியே இயங்கக் கூடிய அரசியல் போராட்டங்கள் அல்ல என்பது வெளிப்படை. ஒவ்வொன்றும் அதனதன் தன்மையில் வெளிப்படையான தேவைகளையும் நடைமுறைகளையும், வகுப்பு நலன்களையும் கொண்டவை. இவை விரிவான விவாதத்திற்கும் செழுமைக்கும் உரியவை.

ஆனால், இன்றைய மதவெறி நவகாலனியப் பாசிச அரசுக் கட்டமைப்புக்கு எதிராகவும், அனைத்து ஆதரவுக் (Pro) கொள்கைகளுக்கான ஜனநாயக உரிமைகளின் அரசியல் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் எந்த அரசியல் முழக்க இணையின் மீது -அதாவது தலைமையாகக் கொண்டு - நடைமுறைகளை வேலைத் திட்டங்களைத் தொடங்குவது - தொடர்வது என்றால் நான் “நிலவுடைமை எதிர்ப்பையும் சோசலிச ஆதரவையுமே” கொள்வேன்.

கிராமத்தில் சாதியுரிமைகளின் அடிப்படையிலான பெருமைகளையும் ஒடுக்குமுறைகளையும் தகர்த்தெறிவது என்றாலும், ஏகாதிபத்திய - காலனிய எதிர்ப்பு என்றாலும் இனங்களின் விடுதலை என்றாலும், “நிலவுடைமை எதிர்ப்பு சோசலிச ஆதரவு” என்ற அரசியல் முழக்கமே - தலைமையே - முன்னிறுத்தப்பட வேண்டும் என்பது என் கருத்தாகும். இந்த வகையில் நாம் பெரியாரியலைப் புத்தாக்கம் செய்ய முனைகிறோம் என்றால் பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் எனப் பொருள்படும். இதை விடுத்து நாம் பெரியாரைச் சுருக்கிப் பார்க்க - நம் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப - கீழிறக்கிப் பார்க்க முயன்றோமானால் அது எல்லைத் தெய்வங்களுக்குக் கொண்டாடும் பண்டிகையாக முடிந்து விடும். அப்படித்தான் முடிந்து விட்டது என்பதற்கான வாக்குச் சீட்டுச் சாட்சிகள்தான் திராவிடங்களின் ஆட்சிகளும், திராவிடத்தின் ஆதரவு பெற்ற இந்துவெறி மைய ஆட்சியும், அவ்வப்போது நாம் நடத்தும் பெரியார் ஊர்வலங்களும் ஆகும்.

பெரியாரைச் சரியாகப் புரிந்து கொண்டு அரசியல் வேலை செய்திருந்தோமானால், விநாயகர் ஊர்வலங்கள் நடைபெற்றிருக்க முடியாது பாபர் மசூதி உடைக்கப்பட்டிருக்க முடியாது; இந்தியப் பொருளாதாரம் முழுக்க முழுக்க தனியார் மயப்பட முடியாது; மொழி,



படிப்பகம்

www.padippakam.com

## கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா கொடும்பாவி எரிப்புப் போராட்டம்

கர்நாடக அரசு நடுவர் மன்ற தீர்ப்புபடி தமிழகத்திற்கு சூன் தொடங்கி செப்டம்பர் முதல் வாரம் வரை 117.73 டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் கர்நாடகமோ வெறும் 51.45டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே கொடுத்துள்ளது. தமிழகத்தில் சுமார் 4½ லட்சம் ஏக்கர் குறுவைப் பயிர் தண்ணீர் இன்றி காய்ந்து கருகிய நிலையில் இருந்த போதும், வயல் வரண்டு வெடிப்புடன் காணப்பட்ட நிலையிலும் கர்நாடகம் எஞ்சியுள்ள 66.28 டி.எம்.சி. தண்ணீரை தரமறுத்து அடாவடி செய்து வருகிறது. கர்நாடக அணைகளில் 97.4டி.எம்.சி. தண்ணீரை வைத்துக் கொண்டே அணைகளில் தண்ணீர் இல்லை என்றும் மாநிலத்தில் வறட்சியென்றும் பொய் பிரச்சாரம் செய்து வருகிறது.

இந்நிலையில் தமிழக மக்களுக்கு எதிரான கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் போக்கை கண்டிக்கும் வகையில் அவரது உருபொம்மை எரிப்புப் போராட்டம் தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் 4.9.2001 அன்று தமிழக உழவர் முன்னணி அமைப்பாளர் தெ.காசிநாதன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. முன்னதாக தஞ்சை கீழவாசலில் இருந்து தஞ்சை, வாளமரக்கோட்டை, தெண்டொண்டார் இருப்பு, திருவையாறு, செங்கிப்பட்டி, பூதலூர், கிள்ளுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி பகுதி உழவர்கள் பெருந்திரளாக பழைய பேருந்து நிலையம் நோக்கி கிருஷ்ணாவின் கொடும்பாவியுடன் புறப்பட்டனர்.

அனைவரையும் காவல்துறை மறித்தது. காவல்துறையின் கடுமையான நெருக்கடிகளையும் மீறி கிருஷ்ணாவின் கொடும்பாவி கொளுத்தப்பட்டது. அதே நேரத்தில் தஞ்சை பழைய பேருந்த நிலையத்திலும் தோழர் இரா.சு.முனியாண்டி (நகரச் செயலாளர் த.இ.மு.) தலைமையில் எஸ்.எம்.கிருஷ்ணா கொடும்பாவி கொளுத்தப்பட்டது. அனைவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.

காவல்நிலையத்தில் இருந்த உழவர்களின் போராட்டத்தை வாழ்த்தி திருவாளர்கள் பெ.மணியரசன், சூ.ரெத்தினசாமி (தேனிமாவட்ட செயலாளர் தமிழக விவசாயிகள் சங்கம்) சா.பேகன் (மாவட்டத் தலைவர், தமிழர் தேசிய கழகம்) ஆகியோர் உரையாற்றினர்.

மாலையில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இனம், மதம் பண்பாடு என எதுவும் ஒற்றை (Mono) எனத் திணிக்கப்படாமல் பல (multi) என நிறுவப்பட்டிருக்கும். இந்தியாவின் பன்முகத் தன்மைக்காக (multi, plural, many) நடத்தப்பெற்று, ஒற்றைத் தன்மைக்கான (Single, mono, only one) அரசதிகாரம் நிறுவப்பட்டுவிட்டதே பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதற்கான அரசியலாகும்!

IV

பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதைக் கூறும் நமது முழக்கங்கள்:

1. சாதி உரிமைப் பெருமைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான வருணாசிரம ஒழிப்புப் போரை முன்னெடுப்போம்!

2. அரசிலிருந்தும், கல்வியில் இருந்தும் மதத்தை நீக்குவதற்கான செக்யூலரிசத்திற்காகப் பாடுபடுவோம்!

3. சோசலிச ஆட்சி நிறுவுதலுக்கான அறிவுகொள் கருவியாக நாத்திகத்தைப் பயன்படுத்துவோம்.

4. உலகமயமாக்கல் என்ற நாகரிக முகத்திரையோடு வந்துள்ள பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருளாதாரச் சுரண்டலை முறியடிப்பதே தேசபக்தியின் முன் நிபந்தனை ஆகும்.

5. தேசங்களின் விடுதலைக்காகவும் விடுதலை பெற்ற தேசிய இனங்களின் இந்தியக் கூட்டாட்சிக்காகவும் பாடுபடுவோம்.

*(கட்டுரையாளர் முனைவர் து. மூர்த்தி அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர். பொருள் ஆழம் மிக்க, இக்கட்டுரையில் காணப்படும் நிலவுடைமை, அனைத்திந்தியப் போராட்டம் போன்ற சில நிலைபாடுகள் மீது நமக்கு மாற்றுக் கருத்துண்டு. இக்கட்டுரையின் மீது ஆதரவு அல்லது மாற்றுக் கருத்துடையோர் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். கருத்துச் சிதையாமல் சுருக்கி வெளியிடப்படும்).*

*- ஆசிரியர்.*



படிப்பகம்

www.padippakam.com

# கன்னடர் இன உணர்ச்சி!

- பூ.அர.குப்புசாமி

கலைஞரும், மூப்பனாரும், தேவகவுடாவை பிரதமர் ஆக்கினார்கள். அவர் தன் கன்னட வெறியை, தமிழர் எதிர்ப்பைப் பலமுறை பாரறிய காட்டிக் கொண்டவர். அவர் பிரதமராக வந்த உற்சாகத்தில் தமிழ்நாடு கன்னடர்கள் கோவையில் ஒரு மாநாடு கூட்டினார்கள். அதற்கு, நடிகை சரோஜாதேவி கூட வந்திருந்தார். காவிரி சிக்கலில் தமிழ்நாட்டுக்கு கடும் எதிர்ப்பு காட்டுவதில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஒக்கலிய சாதியினர் முன் நிற்கின்றனர். அவர்களுடைய சாதி மாநாட்டை தமிழ்நாட்டில் ஈரோடு முதலிய பல ஊர்களில் நடத்தினார்கள். அதற்கு தேவகவுடா வந்திருந்தார். ஒக்கலியர்களுக்கு ஒரு மடம் உள்ளது. அது சுஞ்ச நகரியில் இருக்கிறது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆதி சுஞ்ச நகரி சுவாமிகள் தலைவர். அவர்தான், சம்பத்தில் இராமேஸ்வரத்தில் உள்ள கோயிலின் கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவுக்கு தன்னுடைய சொந்த ஹெலிகாப்டரில் வந்திருந்தார். மடத் தலைவர்கள் மட்டுமல்ல, அரசியல் தலைவர்களையும் கர்நாடகத்திலிருந்து இறக்குமதி செய்வது வாடிக்கையாகிவிட்டது தமிழர்களுக்கு. எஸ்.எம்.கிருஷ்ணா, நஞ்சுண்டசாமி, நஞ்ச கவுடா, நாக கவுடா, ஹெக்டே, தேவகவுடா முதலிய கர்நாடகத் தலைவர்கள் அடிக்கடி தமிழகம் வருகின்றனர். ஒவ்வொரு முறையும் தவறாது காவிரி பிரச்சினை குறித்து "காவிரிச் சிக்கலை பேச்சுவார்த்தை மூலம் மட்டும் தான் தீர்க்கமுடியும்" என்று பேசிச் செல்கிறார்கள். அப்பாவித் தமிழர்களுக்கு அதன் பொருள் புரிவதில்லை.

பகுத்தறிவுவாதி மைசூர் பல்கலைப் பேராசிரியர் பகவான் என் நண்பர். அவருடைய "ஆதி சங்கரரின் மக்கள் விரோதத் தத்துவங்கள்" என்ற நூலின் ஒன்றாவது, ஏழாவது கன்னடப் பதிப்பை, நான் தமிழில் ஆக்கி இருமுறை வெளியிட்டுள்ளேன். அவர், 1991 - 92ல் கன்னடர்கள் தமிழர்கள் மீது நடத்திய இனப் படுகொலையைப் பற்றி கூறும்போது, "இதில் நாம் நடுநிலை வகிக்கிறோம்" என்றார். அதேபோல், பகுத்தறிவுவாதிகள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு அழைத்து வரும் திரு வி.டி.இராஜசேகர் இதேமாதிரி கருத்தைத்தான் கூறுகிறார். அவர்கள் கன்னடரை கண்டிக்கவோ தமிழருக்கு ஆதரவாக பேசவோ தயாராக இல்லை.

மைசூர் மானசரோவர் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி மாணவர் ஒருவரை, காவிரிச் சிக்கல் பற்றி அறிந்துகொள்ள, அப்பல்கலைக் கழகத்தின் அரசியல் துறைத்தலைவர் திருமதி மிடத்தலா ராணி அனுப்பி வைத்தார். அம் மாணவர் மூன்று நான்கு நாட்கள் கரூரில் தங்கி, என்னிடம் பாடம் கேட்டார். அவர், காவிரிச் சிக்கலில் கர்நாடக நிலைப்பாட்டை என்னிடம் சொல்லி விளக்கங்கள் கேட்டார். அவைகளுக்கு நான் ஆணித்தரமாக பதில்கள் அளித்தேன். அவர் அப்பதில்களில் திருப்தி அடைந்ததாகச் சொன்னார். ஆனால், அவரோ, அவரை அனுப்பிய, மிடத்தலா ராணியோ இதுவரை ஒரு நன்றிக் கடிதம் கூட எழுதவில்லை.

சமீபத்தில் வீரப்பனால் விடுதலை செய்யப்பட்ட கன்னட வெறியர், காவிரி கலவரத்திற்கு பெரிதும் காரணமான நடிகர் ராஜ்குமார் பெங்களூர் திரும்பியதும், முதல் வேலையாகச் செய்தது கன்னட மண்ணை எடுத்து முத்தமிட்டதும், அதை எடுத்து நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டதும் தான். தேவராஜ் அர்சுக்கு தமிழ்நாட்டில் பெருத்த வரவேற்பு. அவர் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் ஒரு வீரராம். ஆனால், அவர் காவிரிச் சிக்கலில் இந்திரா காந்திக்கே சவால் விட்டவர். "நீங்கள் கர்நாடகத்தின் காவிரித் திட்டங்களை அங்கீகரிக்காமல் இருக்கலாம்; அவைகளுக்கு பொருள் தராமல் இருக்கலாம்; ஆனால் நாங்கள் அவைகளை நிறைவேற்றாமல் இருக்கப் போவதில்லை; உலகத்தில் எங்கு பொருள் கிடைத்தாலும் பிச்சை எடுத்தாவது நாங்கள் அவைகளை நிறைவேற்றுவோம்" என்று முழங்கினார்.

### திருத்துறைப்பூண்டி வட்டம் மணலி பகுதியில் தமிழக இளைஞர் முன்னணி கொடியேற்று விழா, தெருமுனைக் கூட்டம்

*12.09.2001 அன்று தோழர் பொ.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர் இரா.கோவிந்தசாமி (தலைமைச் செயற்குழு த.தே.பொ.க.) தோழர் வெ. இராமதாசன், (த.தே.பொ.க.) தோழர் கா. அரசு (ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) தோழர் பாண்டியன் (மையக்குழு, த.இ.மு.) தோழர் ஞானசேகரன் (கிளைச் செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர்.*



படிப்பகம்

www.padippakam.com

நஞ்சுண்டசாமி, தன் விவசாய சங்கத்தின் மூலம் கிளர்ச்சியில் ஈடுபட்டு, காவிரியில் ஒரு சொட்டு தண்ணீர், தமிழ்நாட்டுக்கு விடக்கூடாது என போராடியவர். "தண்ணீர் விட்டால், ஐந்து இலட்சம் விவசாயிகளைத் திரட்டி, விதான் சவுதாவை முற்றுகை இடுவேன்" என்று முழங்கியவர். அவர், மதுரைக்கு வந்து ஒரு கருத்தரங்கில் பேசினார். அப்போது தமிழ் இன உணர்வாளர்கள் சிலர், அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். தமிழ் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த அவர்களை தமிழக காவல்துறை நையப்புடைத்துவிட்டது. இந்த எதிர்ப்பையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டார் நஞ்சுண்டசாமி.

இரண்டாவது முறையாக மதுரைக்கு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தார். இரண்டாயிரம் கன்னடர்களை இரயிலில் சீட்டு இன்றி, ஏதோ படையெடுத்தது போல் கூட்டி வந்து மாநாட்டை நடத்திச் சென்றார். நான், தமிழ் உணர்வாளர்க்கு எல்லாம் எழுதி, ஏதாவது ஒரு முறையில் மறுப்புக் காட்ட முயன்று பார்த்தேன், முடியவில்லை.

ராஜ்குமாரின் சம்பந்தி பங்காரப்பா, காவிரிச் சிக்கலில் ஒரு கட்டத்தில் (1991 - 92) அரசு விடுமுறை விட்டு, பந்த் அறிவித்து, தமிழர்களுக்கு எதிராக ஒரு பெரும் இனப் படுகொலையை நடத்தினார். அந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு தரவேண்டும் என்று ஒரு போராணை மனுவும், ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் பற்றி எதையுமே கன்னடக் காவல்துறை வழக்குப் பதியவில்லையாதலால், அவைகளை மத்திய புலனாய்வுத்துறை வழக்கு பதிந்து, புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு பேராணை மனுவும் டெல்லி உச்ச நீதிமன்றத்தில் என் முயற்சியால் தமிழ்ச் சங்க உதவியுடன் தாக்கல் செய்யப்பட்டது. அவற்றை சீக்கிரம் நடத்த விடாமல் கன்னடத் தலைவர்கள் பார்த்துக் கொண்டனர். எட்டு ஆண்டுகள் கழித்து, நட்ட ஈடு மனு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்னும் சி.பி.ஐ. விசாரணை மனு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ராஜ்குமார் கடத்தப்பட்டதை அடுத்து, தமிழர்களைத் தாக்க பலவித முயற்சிகள் நடந்தன. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலையில் அது கன்னட வெறியர்களுக்குக் கைகூடாததாக ஆயிற்று. ஆனால் திருவள்ளுவர் சிலை திறப்பு, காவிரிச் சிக்கல், தமிழ்மொழி காப்பு ஆகிய சிக்கல்கள் முன்னுக்கு வரும்போது கன்னட வெறியர்கள் தமிழர்களை தாக்க மாட்டார்கள் என்று கூற முடியாது. ராஜ்குமார் போன்றவர்கள் பற்ற வைத்த அந்த நெருப்பு, நீரு பூத்த நெருப்பாகவே சதா உள்ளது. அதை அவ்வப்போது கன்னட வெறி அமைப்புகள் ஊதி விட்டுக் கொண்டே இருக்கின்றன.

இலங்கைக்கு அடுத்தபடி தமிழர்கள் வதைக்கப்படுவது கர்நாடகத்தில்தான் ●

## செஞ்சி வட்டத்தில்
# தமிழக உழவர் முன்னணி

செஞ்சி, செப்டம்பர் 3, அன்று தமிழக உழவர் முன்னணி செஞ்சி வட்ட அமைப்புக் கூட்டம் காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் வழக்கறிஞர் க. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.



நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் தமிழக உழவர் முன்னணியின் அமைப்பாளர் தெ. காசிநாதன் விளக்கவுரை நிகழ்த்தினார். தமிழ்ச்செல்வன், இராஜேந்திரன், சின்னப்பையன், காரைமுருகன், முனியப்பன், இராமலிங்கம் உள்ளிட்ட பலர் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

செஞ்சி, மேல் மலையனூர், வல்லம் ஒன்றியங்களுக்கு துரைசெல்வன், விஜயகுமார், சம்பத், ஆறுமுகம், பரசுராமன், இராமமூர்த்தி உள்ளிட்டோர் அடங்கிய அமைப்புக்குழு உருவாக்கப்பட்டு வட்ட அமைப்பாளராக வழக்கறிஞர் க. கிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உழவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யும் பொருள்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யக் கோரியும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் பால் விற்பனை செய்யும் உற்பத்தியாளர்களுக்கு உடனுக்குடன் பணம் வழங்கக் கோரியும், தமிழக அரசு பான்பராக் உள்ளிட்ட போதைப் பாக்குகளைத் தடை செய்யும் திட்டத்தை உறுதியாக நிறைவேற்றக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தையும், பொறுப்பாளர்களையும் வாழ்த்தி ஆசிரியர் மு. கந்தசாமி, பேரா.பா.கல்யாணி, எழுத்தாளர் இராசேந்திரசோழன் ஆகியோர் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# பயங்கரவாத அமெரிக்காவே ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறு!

- கி. வெங்கட்ராமன்

"சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை உயிருடனோ, பிணமாகவோ பிடிக்கும்வரை இந்தப் போர் ஓயாது...."

"தலிபான் அரசை வீழ்த்துவதே ஆப்கான் போரின் நோக்கம்..."

"ஒரு நபரையோ அல்லது ஒரு அமைப்பையோ அழிப்பதல்ல நமது நோக்கம். ஒட்டு மொத்தமாக பயங்கரவாதத்தையே இந்த உலகத்தை விட்டு ஒழிப்பதே நமது இலக்கு. எனவே இந்தப்போர் ஒரு நாளிலோ, ஒரு வாரத்திலோ ஒரு மாதத்திலோ, ஏன், ஓராண்டிலோ முடிந்து விடாது. பத்தாண்டுகளோ, பல பத்தாண்டுகளோ ஆகலாம். போர் தொடரும்..."

இவ்வாறு நாளுக்கு ஒரு அறிவிப்பை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ்புஷ் வெளியிட்டுக் கொண்டு இருக்கிறார். போர்க்களமும், போர்க்காலமும் விரிவடைந்து கொண்டே போகின்றன.

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பதிலடியே அமெரிக்காவின் இந்தப் போர்ப் பிரகடனம். இதுவரை விமானங்களிலிருந்து குண்டுமழை பொழிவதை உலகம் பார்த்திருக்கிறது. ஆனால் விமானங்களே குண்டுகளாக




மாறி, தாக்கி பல்லாயிரம் பேரை பலிகொண்டதைப் பார்த்து அமெரிக்காவே குலுங்கியது. உலகம் அதிர்ந்தது. இந்த 2001 செப்டம்பர் 11 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 9 மணிக்குள் அமெரிக்காவின் வெவ்வேறு விமான நிலையங்களிலிருந்து புறப்பட்ட நான்கு பயணி விமானங்கள், புறப்பட்ட சிறிது நேரத்திற்குள் நடுவானில் கடத்தப்பட்டன.

கடத்தப்பட்ட விமானங்களில் இரண்டு நியூயார்க் நகரின் மன் ஹாட்டன் பகுதியில் உள்ள உலக வர்த்தக மையத்தின் வானுயரக் கட்டடங்கள் இரண்டின் மீது அடுத்தடுத்து மோத வைக்கப்பட்டன. இந்த இரண்டு விமானங்களுமே நெடுந்தொலைவு செல்லும் பயணி விமானங்கள் என்பதால் பலநூறு காலன் எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தது. விமானம் மோதியவுடன் வெடித்து, இந்த எரிபொருள் அனைத்தும் ஒரே நேரத்தில் பற்றி எரிந்ததால் உருவான கடும் வெப்பம் இந்த 110 மாடி கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் இரும்புத் தூண்களை உருக்கின. எட்டு மேல் தளங்கள் ஒரே நேரத்தில் நொறுங்கிய அழுத்தத்தால் அடுத்தடுத்து கீழே உள்ள தளங்களும் அப்படியே அப்பளம் போல் நொறுங்கின.

இந்த உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் முக்கியமான பங்குச் சந்தைகளும், பன்னாட்டு நிறுவனங்கள் பலவற்றின் அலுவலகங்களும், பல்வேறு நிதி நிறுவனங்களும் இயங்கி வந்தன. எப்போதுமே பல்லாயிரக்கணக்கானோர் சுறுசுறுப்புடன் இயங்கி வரும் உறங்காத மாநகரமாக இந்த கட்டிடம் செயல்பட்டு வந்தது.



படிப்பகம்

www.padippakam.com



மோதிய விமானத்தில் இருந்த நூற்றுக்கணக்கான அப்பாவி பயணிகளும், உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் இருந்த 7000 பொதுமக்களும் கொல்லப்பட்டு விட்டனர். இடுபாடுகளில் சிக்கி உறுப்பு இழந்து ஊனமானவர்கள் ஏராளம். அதிர்ச்சியில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் உண்டு.

இத்தாக்குதலினால் மிகப்பெரிய பொருளாதார இழப்பை அமெரிக்க அரசும், நிறுவனங்களும் சந்தித்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் முதன் முறையாக மூன்று நாட்களுக்கும் மேல் பங்குச் சந்தைகள் மூடப்பட்டன. வங்கிப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. விமான நிலையங்கள் மூடப்பட்டன. அமெரிக்கப் பொருளாதாரமே நிலைகுலைந்து போனது.

ஏற்பட்ட இழப்புகளுக்காக காப்பீட்டு நிறுவனங்களிடம் கோரப்பட்டத் தொகை மட்டும் 7300 கோடி டாலர். அதாவது சுமார் 3,35,800 கோடி ரூபாய் என்றால் இழப்பின் அளவை ஊகித்துக் கொள்ளலாம். இத்தாக்குதலின் விளைவாக அமெரிக்க விமான சேவை மட்டுமின்றி, உலகம் முழுவதும் விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத் தொழில் பெருமளவு சரிந்து விட்டது.

நியூயார்க்கின் உலக வர்த்தக மையக் கட்டடம் தாக்கப்பட்ட அதே நேரத்தில் அமெரிக்கத் தலைநகர் வாசிங்டனில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது. கடத்தப்பட்ட விமானங்களில் ஒன்று பென்டகன் மீது மோதிச் சிதறியது. பென்டகன் கட்டடம் நொறுங்கியதில் இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 860 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கடத்தப்பட்ட இன்னொரு விமானம் அமெரிக்க அதிபர் அலுவலகமான வெள்ளை மாளிகை மீது மோதக் குறி வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், அது நடுவானில் வெடித்தது. வெள்ளை மாளிகை தப்பியது.

ஒன்றுமறியாத பயணிகளும், பொதுமக்களும் கொல்லப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. எப்படிப்பட்ட நோக்கத்திற்காக இருந்தாலும், இது சரியான போராட்ட முறையும் அன்று.

ஆயினும் இந்த கொந்தளிப்பான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க வல்லரசு, உலகம் முழுதும் கேள்வி முறையற்ற இராணுவத் தாக்குதல் நடத்தி, தனது மேலாதிக்கத்தை உறுதி செய்ய முனைந்துள்ளது.

செப்டம்பர் 11 தாக்குதலை நடத்தியவர்களைக் கண்டறிந்து, அவர்கள் மீது சர்வதேச சட்டங்களின்படி நடவடிக்கை எடுத்து, தண்டனை தர வேண்டுமே தவிர, இவ்வாறு தனக்கு வேண்டாத நாடுகள் மீது அமெரிக்கா போர் தொடுப்பது உலக அமைதியைச் சீர்குலைத்து, பேரழிவை உண்டாக்கிவிடும்.

செப்டம்பர்11 தாக்குதல் ஏன் நடந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன் 'பயங்கரவாதம்' 'சனநாயகம்' ஆகியவை பற்றியும் பரிசீலிக்க வேண்டும்.

செப்டம்பர் 20 அன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றிய புஷ் "அமெரிக்காவின் எதிரிகள் சுதந்திரத்தின் எதிரிகள். அவர்கள் ஏன் நம்மை வெறுக்கிறார்கள் என்று சில அமெரிக்கர்கள் கேட்கிறார்கள். அவர்கள் நம்மை வெறுப்பதற்குக் காரணம் அவர்கள் சுதந்திரத்தை வெறுப்பதுதான். நம்நாட்டில் உள்ள மத சுதந்திரம், கருத்து சுதந்திரம், வாக்களிக்கும் சுதந்திரம், கருத்து வேறுபடுவதற்குள்ள சுதந்திரம் ஆகியவற்றை அவர்கள் வெறுக்கிறார்கள். அதனால்தான் நம்மை வெறுக்கிறார்கள்" என்று விளக்கம் அளித்தார்.

"அதிபர் புஷ் சொல்வது உண்மையானால் அவர்கள் என் பொருளாதார ஆதிக்க மையம் எனக் கருதப்படும் உலக வர்த்தக மையத்தையும், இராணுவ ஆதிக்க மையமாகக் கருதப்படும் பென்டகனையும் தாக்கினர். அவர்கள் சுதந்திரதேவி சிலையை அல்லவா தாக்கியிருக்க வேண்டும்?" என எழுத்தாளர் அருந்ததி ராய் கேட்பது சிந்திக்கத் தக்கது.

(காண்க: 'அவுட் லுக்' அக் 8, 2001)

சுதந்திரம் பற்றி எவ்வளவுதான்





படிப்பகம்

www.padippakam.com

மார்தட்டிக்கொண்டாலும் உண்மையில் அமெரிக்க முற்றாதிக்கம் தான் உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளின் சுதந்திரத்தைப் பறிப்பதிலும் இனப்படுகொலை செய்யும் அரசுகளைப் பாதுகாப்பதிலும் முதன்மைப் பாத்திரம் வகிக்கிறது. உலகின் முதன்மையான பயங்கரவாதி - அரசு பயங்கரவாதி அமெரிக்கா தான்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், முசோலினி கொல்லப்பட்ட பிறகு, இட்லர் தற்கொலை செய்து கொண்டு செத்துப்போன பிறகு, ஜப்பானின் டோஜோ ஆட்சி சரணடைந்த பிறகு, எந்தவித சிறு நியாயமும் இன்றி ஹிரோசிமா, நாகசாகி நகரங்களின் மீது அணுகுண்டு வீசி இரண்டு இலட்சம் ஜப்பானிய மக்களைக் கொன்று குவித்த அமெரிக்காவின் வெள்ளை பயங்கரவாதத்தை யாரால் மறக்க முடியும்? இன்று நூறு மாடிக் கட்டடம் நொறுங்கி அதிலிருந்து எழும் புகை துரத்த, நியூயார்க் மக்கள் அலறியடித்து ஓடி வரும் கோரக் காட்சியைக் காணும்போது, வியட்நாமில் அமெரிக்காவின் நாபாம் குண்டின் நெருப்பில் ஆடை கருகிய பின் புகை துரத்த அந்த வியட்நாமியச் சிறுமி கதறிக் கொண்டு அம்மணமாக ஓடிவரும் கொடூரக் காட்சி அல்லவா மனதில் விரிகிறது? வியட்நாம் மீது ஆக்கிரமிப்புப் போர் நடத்தி பல இலட்சம் வியட்நாமியர்களை இனப்படுகொலை செய்த அமெரிக்க வல்லாதிக்கத்தை யாராலும் மன்னிக்க முடியாதே!

இவையெல்லாம் 'பழைய' நடப்புகள்.

அண்மை - பத்தாண்டுகளுக்கு முன்னால் இதே செப்டம்பர் 11 அன்று - 1991 செப்டம்பர் 11இல் ஈராக் மீது குண்டு மழை பொழியத் தொடங்கி சில வாரங்களிலேயே இரண்டு இலட்சம் ஈராக் மக்களைக் கொன்று குவித்த அமெரிக்கா - ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்து கடந்த பத்தாண்டுகளில் சுமார் 50,000 குழந்தைகள் மருந்து கிடைக்காமல் மரணம் அடையக்



அமெரிக்க குண்டுக்கு இலக்கான வீடு

காரணமாக இருந்த அமெரிக்கா - 'சுதந்திரம்' பற்றியும் 'நாகரிகம்' பற்றியும் பேச என்னத் தகுதி இருக்கிறது? ஈராக் மீது போர் நடத்த ஆணையிட்டவர் அன்றைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் எச்.புஷ். - இன்றைய குடியரசுத் தலைவர் ஜார்ஜ் டபுள்யூ. புஷ்ஷின் தந்தை!

உலகம் முழுதும் உள்ள இனவெறி அரசுகளுக்கு பின்பலமாக இருப்பது அமெரிக்காதான். தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி அரசுக்கு கடைசி வரை பக்கபலமாக இருந்தது அமெரிக்கா. கடந்த ஐம்பது ஆண்டுகளாக பாலஸ்தீனர்கள் நாடற்றவர்களாக அலைவதற்கு, இஸ்ரேலின் யூதவெறி அரசின் கொலைக்கரங்களுக்குப் பல்லாயிரம் பாலஸ்தீன மக்கள் பலியாகிப் போனதற்கு முக்கிய காரணமாக இருப்பது அமெரிக்கா. இன்றுகூட, டர்பனில் நடந்த இனவெறிக்கு எதிரான ஐ.நா.மாநாட்டில் இஸ்ரேலிய இனவெறிக்கு எதிராக பாலஸ்தீனர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை உலகமே ஆதரித்து நின்றாலும், அத்தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் செய்தது அமெரிக்காதான்.

சிலி நாட்டில் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அலண்டேயின் இடதுசாரி அரசைக் கவிழ்த்து, பினோசேயின் சர்வாதிகார ஆட்சியை அமர்த்தி 35,000 சிலி மக்களையும், கம்யூனிஸ்ட்டுகளையும் கொன்று குவித்தது அமெரிக்க வல்லரசு. நிகராகுவாவில் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சாண்டிநிஸ்டா அமைப்பின் ஆட்சியைக் கவிழ்த்து, இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவியது அமெரிக்க வல்லரசு. அமெரிக்காவின் நேட்டோ, சென்டோ, சீடோ இராணுவக் கூட்டுகளில் இருப்பவற்றில் பல நாட்டு ஆட்சிகள் இராணுவ ஆட்சிகள் - சர்வாதிகார ஆட்சிகள்தாம். இந்த அமெரிக்காதான் சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்று தனது ஆப்கான் தாக்குதலை நியாயப்படுத்துகிறது.

இன்றைக்கும் கூட அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கு எதிரான இன ஒதுக்கல் பல்வேறு வடிவங்களில் நீடிக்கிறது. பல்வேறு வழிகளில் இனவெறி ஊட்டப்பட்ட சமூகமாக அமெரிக்க சமூகம் இருப்பதால்தான், இந்த செப்டம்பர்11 சம்பவத்திற்குப் பிறகு தாடி வைத்தவர்கள் பலர் அங்கங்கே தாக்கப்பட்டனர். அராபியர் எனத் 'தவறாக' நினைத்து ஒரு சீக்கியரும் கொல்லப்பட்டார். அமெரிக்கர் அல்லாதவர்கள் பொது இடங்களில் தாக்கப்படுவதும், இழிவுபடுத்தப்படுவதும் தொடர்கிறது. ராஜீவ்காந்தி மகன் ராகுல் காந்தியைக் கூட 'சந்தேகத்தின்பேரில்' என்று சொல்லி ஐந்து மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து இழிவுபடுத்தியது அமெரிக்கக் காவல்துறை. எல்லா பாதுகாப்பு சோதனைகளும் முடிந்த பிறகும் அமெரிக்க விமானங்களில் அமெரிக்கர் அல்லாதவர்கள் பயணம் செய்வது சட்ட விரோதமாக தடுக்கப்படுகிறது. அவர்கள் இறங்கினால் தான் விமானத்தை எடுப்போம் என்று அமெரிக்கக் விமானிகள் பிடிவாதம் செய்வதும், 'அவர்கள்' பயணம் செய்தால்



படிப்பகம்

www.padippakam.com

நாங்களெல்லாம் இறங்கி விடுவோம் என்று வெள்ளை அமெரிக்கப் பயணிகள் கூச்சலிடுவதும் அன்றாட நடப்பாகி விட்டது.

உலகைச் சூறையாடிக் கொண்டு, உலகம் முழுதும் உள்ள பிற்போக்கு சக்திகளுக்கு அரணாக இருந்து கொண்டு உலக மக்களின் ஒட்டுமொத்த எதிரியாக இருப்பது அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகும். ஆனால் தமது ஆதிக்க வெறியை மூடிமறைப்பதற்காக எப்போதுமே சனநாயக வேடம் தரிப்பது அமெரிக்க வல்லரசின் வாடிக்கை. "சர்வாதிகார கம்யூனிச ஆபத்திலிருந்து உலக சனநாயகத்தைப் பாதுகாக்க" என்று சொல்லித்தான் உலகம் முழுதும் தமது ஆதிக்க வேட்டையை நடத்தியது. இப்போது "இஸ்லாமிய அடிப்படை வாதத்திலிருந்து உலக சுதந்திரத்தைப் பாதுகாக்க" என்று சொல்லி தமது ஆதிக்க வெறியைச் செயல்படுத்துகிறது.

இதே ஆப்கானிஸ்தானை 1979ல் சோவியப் படைகள் ஆக்கிரமித்தபோது, அதனை எதிர்த்துப் போராட இஸ்லாமிய மத உணர்வு ஆப்கான் மக்களுக்கு உந்து சக்தியாக விளங்கியது. இதையே அமெரிக்கா தமது நோக்கத்திற்கு ஏற்பப் பயன்படுத்திக் கொண்டது. இதற்குரிய விரிவான திட்டத்தை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. தீட்டி செயல்படுத்தியது. அமெரிக்காவின் இராணுவக் கூட்டில் இருக்கும் பாகிஸ்தான் இதற்கு உதவி செய்தது.

ஆப்கானிஸ்தானில் பல்வேறு இடங்களில் 'மதரசாக்கள்' - இஸ்லாமிய பள்ளிக் கூடங்கள் எழுந்தன. இங்கு இஸ்லாமிய மதக்கல்வியுடன், ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டு 'புனிதப்போர்' (ஜிஹாத்) தயாரிப்பு நடந்தது. உலகெங்கிலுமிருந்து, குறிப்பாக, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சூடான், சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கில் இஸ்லாமிய இளைஞர்கள் இங்கு ஆயுதப் பயிற்சி பெற்றனர். பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.மூலம் அமெரிக்கா இந்த இளைஞர்களுக்கு ஆயுதமும், பணமும், பயிற்சியும் தாராளமாக வழங்கியது.

ஆப்கானை ஆக்கிரமித்த சோவியத் படைகளோடு மேற்கண்ட இளைஞர்கள் இரத்தம் சிந்திப் போரிட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர். பத்தாண்டுகள் நடந்த இந்தப் போரில் சோவியத் ஒன்றியத்தின் 15000 படையாட்கள் பலியானார்கள். கடைசியில் 1989ல் சோவியத் படை ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியது.

ஆப்கானை மீட்க இஸ்லாமிய இளைஞர்கள் 'புனிதப்போர்' என்ற பெயரால் மத அடிப்படையில் ஒன்றிணைந்து போரிட்டாலும் இந்தப்போரில் அமெரிக்கா உதவியதற்கு வேறு உள்நோக்கம் உண்டு.

சோவியத் ஒன்றிய ஆக்கிரமிப்பை எதிர்த்து உருவான இந்த இஸ்லாமிய வாதம், அன்றைய சோவியத் ஒன்றியத்தில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் உஸ்பெக்கிஸ்தான், தாஜிகிஸ்தான் கசகஸ்தான் முதலிய குடியரசுகளில் பரவி, பெரும் மதக்கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே அமெரிக்காவின் திட்டமாக இருந்தது. அதற்காகவே பல்லாயிரம் கோடி டாலர் பணத்தைக் கொட்டியது.

அன்றைக்கு "கம்யூனிச அபாயத்தை" முறியடித்து, சனநாயகத்தை மீட்டெடுக்கப் பயன்படுத்திய இஸ்லாமிய மதவாதம் இன்று "சனநாயகத்தின் முதல் எதிரியாக" அமெரிக்க வல்லரசுக்குத் தெரிகிறது. அன்று ஆப்கானிஸ்தான் மதரசாக்களில் அமெரிக்க உதவியுடன் ஆயுதப் பயிற்சி பெற்ற ஒசாமா பின்லேடன் இன்று அதே அமெரிக்காவால் 'முதன்மையான பயங்கரவாதி' என்று சித்திரிக்கப்படுகிறார்.

அவரை வேட்டையாடுவது என்ற பெயரால் இன்று அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது மனிதத்தன்மையற்ற, ஆக்கிரமிப்புப் போர் நடத்தி வருகிறது. அக்டோபர் 7ஆம் நாள் தொடங்கி இரண்டு வாரத்திற்கும் மேலாக இக்கொடுந் தாக்குதல் நடந்து வருகிறது. நூற்றுக்கணக்கில் அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படை விமானங்கள் இரவு - பகலாக தொடர் குண்டுமழை பொழிந்து வருகின்றன.

காபூல், கண்டஹார், ஜலாலாபாத் போன்ற பெரு நகரங்கள் மட்டுமின்றி, பல்வேறு சிற்றூர்களும் பற்றி எரிகின்றன. ஆப்கானிஸ்தான் நாடே இடிபாடுகள் நாடாகக் காட்சியளிக்கிறது. இலட்சக்கணக்கில் ஆப்கான் மக்கள் பாகிஸ்தான், ஈரான் முதலான நாடுகளுக்கு அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு புறம் இந்த மக்களை நாடற்றவர்களாக விரட்டி வரும் அமெரிக்க வல்லரசு, இன்னொருபுறம் இந்த மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வீசி எறிவது, மனித உணர்வுகளையே இழிவுபடுத்தும் வெள்ளைத் திமிர் நடவடிக்கையாகும்.

மனித குலத்திற்கே எதிரான இந்தப் போர் நடவடிக்கை 'உலக பயங்கரவாத எதிர்ப்பு' என்று நியாயப் படுத்தப்படுகின்றது. ஒசாமா பின்லேடன் 'சர்வதேச ப்யங்கரவாதி' என்று வல்லரசுகளால் சித்தரிக்கப்பட்டாலும், அமெரிக்கா தவிர வேறு எந்த நாட்டுக்கும் எதிராகவும் அவர் தாக்குதல் நடத்தியதாக சான்றுகள் இல்லை. பின்லேடனின் அல்கொய்தா அமைப்பு 1995லிருந்து இருப்பதாக சொல்லப்பட்டாலும், அவரும், அவரது அமைப்பும் வெளியுலகுக்கு அறிமுகமானது 1998ல்தான்.

1998 ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் ஆப்பிரிக்க நாடுகளான டான்சானியாவிலும் கென்யாவிலும் இருந்த அமெரிக்கத் தூதரக கட்டிடங்கள்



படிப்பகம்

www.padippakam.com

தாக்கித் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலுக்கு பின்லேடனின் அல்-கொய்தா பொறுப்பேற்றுக் கொண்டது. அதன்பிறகு நியூயார்க் நகரின் இதே உலக வர்த்தக மையக் கட்டிடத்தின் மீது அல்-கொய்தா ஒரு மனித குண்டுத் தாக்குதலுக்கு முயன்றது.

மீண்டும் மீண்டும் அமெரிக்காதான் குறி வைக்கப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அமெரிக்காவுக்கு எதிரி என்றால், அவர் உலகுக்கு எதிரி என்று பொருளா? அமெரிக்கா மீது தீவிரத்தாக்குதல் நடத்துபவரை 'உலக பயங்கரவாதி' என்று சித்திரிப்பதில் எந்த நியாயமும் இல்லை.

பின்லேடனுக்கு எதிராக என்று சொல்லி தொடுக்கப்பட்டுள்ள இப்போரை ஆதரிக்காத நாடுகள் எல்லாம் பயங்கரவாத நாடுகள் என்று அமெரிக்க வல்லரசு வர்ணிக்கிறது. "உலக நாடுகள் உடனே முடிவெடுக்கட்டும். நீங்கள் எங்கள் பக்கமா? இல்லையா? எங்கள் பக்கம் சேராதவர்கள் எல்லாம் பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்றே பொருள்" என்று ஜார்ஜ் புஷ் உலகையே மிரட்டுகிறார். ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத்திற்கும். இறையாண்மைக்கும் விடப்படும் வெளிப்படையான அறை கூவலாகும் இது.

பின்லேடனும், அவரது அமைப்பினரும் அமெரிக்காவைத் தமது முதல் எதிரியாகக் கருதுவதற்குக் காரணம் என்ன? உலகம் முழுதும் உள்ள இஸ்லாமிய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதும், இஸ்லாமிய மக்கள் பலர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருப்பதும் அமெரிக்க வல்லரசுதான் என்று இவர்கள் மதிப்பிடுவதே இதற்குக் காரணம். இதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன.




சென்ற அரை நூற்றாண்டு காலமாக பாலஸ்தீன , மக்கள் நாடிழந்து, அமைதியான வாழ்விழந்து, அவர்களில் பல ஆயிரம்பேர் மூன்றாவது தலைமுறையாக அகதிகள் முகாம்களிலேயே சீரழிகின்றனர். பல்லாயிரம் பேர் மடிந்துள்ளனர். பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலுக்கு பின்பலமாக அமெரிக்க முற்றாதிக்கமே இருந்து வருகிறது. பாலஸ்தீனர்களில் மிகப் பெரும்பாலோர் மதத்தால் இஸ்லாமியர்கள்.

பாலஸ்தீன விடுதலைப் பிரச்சினையும், இஸ்லாமிய மத உரிமைப் பிரச்சினையும் இவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கின்றன.

ஈராக் ஆக்கிரமிப்பிலிருந்து குவைத்தை மீட்பது என்ற பெயரால் ஈராக்கின் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. குவைத்திலிருந்து தனது இராணுவத்தை ஈராக் அதிபர் சதாம் உசேன் திரும்பியழைத்துக் கொண்ட பின்னும், கொலைவெறித் தாக்குதலை அமெரிக்க அரசு தொடர்ந்தது. இலட்சக் கணக்கானோர் மாண்டனர். பொருளாதாரத் தடையால் பல்லாயிரம் பேர் மடிந்து கொண்டிருக்கின்றனர். அமெரிக்காவின் நிபந்தனைகளையெல்லாம் ஈராக் அரசு நிறைவேற்றினாலும் அமெரிக்கா திருப்தியடையவில்லை. சதாம் உசேன் பதவி விலகும் வரை தனது நெருக்குதல் தொடரும் என்று அமெரிக்க வல்லரசு கொக்கரிக்கிறது. ஈராக்கின் இறையாண்மையை கடித்துக் குதறுகிறது அமெரிக்கா.

ஈராக் சிக்கலைச் சாக்காக வைத்து சவுதி அரேபியாவில் அமெரிக்கா தனது இராணுவத் தளத்தை நீடித்து வைத்துக் கொண்டுள்ளது. சவுதியின் செலவில் பல்லாயிரம் அமெரிக்க ஆக்கிரமிப்பு படையாட்கள் பராமரிக்கப்படுகிறார்கள்.

இவையெல்லாம் இஸ்லாமியர்களின் சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால் என்று பின்லேடன் கருதுவது இயல்பே.

இதனால்தான் மீண்டும், மீண்டும் அமெரிக்கா மீது குறி வைக்கப்படுகிறது. இதனால்தான் அமெரிக்காவின் ஆதிக்க மையங்களான பென்டகனும், உலக வர்த்தக மையமும், குறிவைத்துத் தகர்க்கப்பட்டன.

இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முதல் நிபந்தனை, எழுத்தாளர் அருந்ததிராய் கூறுவது போல உலகத்தில் மற்ற நாடுகளும் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிமை பெற்றவை என்பதை அமெரிக்கா ஏற்க வேண்டும் என்பதுதான்.

வல்லரசுகள், குறிப்பாக,



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கா, உலகில் தமது பொருளாதார ஆதிக்கத்தையும் இராணுவ மேலாதிக்கத்தையும் நிறுவுவதற்காக செய்யும் பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாகவே உலகம் அமைதியிழந்து தவிக்கிறது.

தீவிரவாதமும், பயங்கரவாதமும் தானாக வருவதில்லை. ஆதிக்க சக்திகள் தமது ஆதிக்கத்தை நிறுவ முயலுவதன் எதிர்விளைவாகவே இவை தோன்றுகின்றன.

ஆதிக்க சக்திகள் தமது ஆதிக்க நடவடிக்கைகளை 'சனநாயகம்' 'பொதுக்கருத்து' என்ற பெயராலேயே தொடங்கி நடத்துகின்றன. அதற்கு எதிர்ப்பு வலுப்பெறும்போது அரசு பயங்கரவாதம் தலைதூக்குகிறது. ஆதிக்க சக்திகள் தமது நலன்களை பொது நலன்கள் போல் சித்திரித்து, பிரச்சாரம் செய்து மக்களை நம்ப வைத்து விடுகின்றன. தனது எதிரியை உலக எதிரியாக - 'சர்வதேச பங்கரவாதியாக-சித்திரித்து மக்களை நம்ப வைப்பதில் அமெரிக்கா கணிசமாக வெற்றியடைந்திருப்பது கவனிக்கத்தக்கது. அதற்குப் பிறகு தமது ஒடுக்குமுறைகளுக்கு 'மக்கள் ஆதரவை' இந்த ஆதிக்க சக்திகள் பெற்று விடுகின்றன.

'சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான' நடவடிக்கை என்ற பெயராலேயே தமது வல்லாதிக்கப் போர்களையும், சதி நடவடிக்கைகளையும் அமெரிக்கா நடத்தி வருகிறது என்பதை ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

உலகின் வேறு பல நாடுகளிலும், குறிப்பாக, பலமொழி, பல இனமக்கள் வாழும் நாடுகளிலும் சனநாயகம் என்பது தவறாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சனநாயகம் குறித்த விழிப்புணர்வு மிக மிக அவசியம். அதன் சாதகம் அதன் பெயரால் நடைபெறும் பாதகம் ஆகிய இரண்டு குறித்தும் விழிப்புணர்வு தேவை.

'சனநாயகம்' என்பதன் சாரமே சமத்துவம்தான். சமத்துவம் இல்லாத இடத்தில் உண்மையான சனநாயகம் செயல்பட முடியாது.

'சனநாயகம்' என்பதை பெரும்பான்மைக் கருத்தின் செயல்பாடு என்பதாக மட்டுமே குறுக்கி விடக் கூடாது. 'சனநாயகம்' என்பது வெறும் எண்ணிக்கை விளையாட்டன்று. சிறுபான்மைக் கருத்துக்கு சமத்துவமான சுதந்திரம் வழங்குவது சனநாயகத்தின் உயிரான கூறு ஆகும்.

குறிப்பாக **பலமொழி, பல மதம் வாழும் நாட்டில் மொழி சமத்துவமும், மத சமத்துவமும் பேணப்படாமல் பெரும்பான்மையோர் பேசும் மொழியும் பெரும்பான்மையோர் பின்பற்றும் மதமும் மட்டுமே மேலோங்கிச் செயல்படுமானால் அது சனநாயகம் அன்று. அது பெரும்பான்மை வாதம் (Majoritarianism) ஆகும்**

சிறுபான்மை மொழியும், சிறுபான்மை மதமும் வெறும் எண்ணிக்கையை வைத்து இரண்டாம் தரமாக நடத்தப்பட்டால் அங்கு வெளித் தோற்றத்தில் தேர்தல், பேச்சுரிமை, நீதிமன்ற உரிமை போன்றவை வழங்கப்பட்டிருந்தாலும் அது சனநாயகம் அன்று. பெரும்பான்மை வாதமாகும்.

இதுபோன்ற சூழலே தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் தோற்றுவிக்கும்.

எடுத்துக்காட்டாக, இலங்கையில் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மொழியும், புத்தமதமும் அரசு மொழியாக, அரசு மதமாகத் திணிக்கப்பட்டன. தமிழ் மொழியும் புத்தம் அல்லாத பிற மதங்களும் புறக்கணிக்கப்பட்டன. தமிழர் பகுதியில் தேர்தல் அடிப்படையில் ஒரே கருத்துடைய கட்சி நூற்றுக்கு நூறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினாலும் ஒட்டுமொத்த இலங்கை நாடாளுமன்றத்தில் இது சிறுபான்மை என்பதால் புறக்கணிக்கப்பட்டது. இதன் விளைவாகவே ஈழத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு மாறினர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் மக்களில் தனித்த பெரும் எண்ணிக்கையினராக இந்தி பேசும் மக்கள் இருப்பதால், இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டது. தமிழ் உள்ளிட்ட மற்ற சிறுபான்மை எண்ணிக்கையோர் மொழிகள் புறக்கணிக்கப்படுகின்றன. பெரும்பான்மையோரின் மதமான இந்து மதமே நடைமுறையில் அரசு நடவடிக்கைகளில் மேலோங்கி இருக்கிறது. மற்ற மதங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

இது சனநாயகம் அன்று, பெரும்பான்மைவாதம் ஆகும். இதனால்தான் காசுமீர், அசாம், நாகலாந்து, மிசோரம், பஞ்சாப் போன்ற இடங்களில் ஆயுதப் போராட்டங்கள் வெடித்தன. மற்ற இடங்களிலும் அமைதியின்மை நிலவுகிறது.

இவ்வாறான போராட்டங்களையும், அதிருப்திகளையும் 'பயங்கரவாதம்' என்று ஆட்சியாளர்கள் முத்திரை குத்தி விடுகிறார்கள்.

எல்லா ஆயுதப் போராட்டங்களும் பயங்கரவாதம் அல்ல. ஆயுதம் தரிக்காத சாதாரண மக்கள் மீது திட்டமிட்டு வன்முறையை ஏவிவிட்டு, நீடித்த பயத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையே பயங்கரவாதம் (terrorism) எனப்படும். ஒரு ஆயுதம் தரித்த குழு தான் எதிரி என நினைக்கும் இன/ மதத்தைச் சேர்ந்த சாதாரண மக்கள் மீது திட்டமிட்ட வன்முறையை நடத்தினாலும் அது பயங்கரவாதம் தான்.

ஆனால் எதிரி அரசின் இலக்குகளை அல்லது, எதிரி அமைப்பின் இலக்குகளைத் தாக்கும்போது, அதன் உடன் நிகழ்வாக சாதாரண மக்கள் தாக்கப்படுவது உண்டு. இதை வைத்து



படிப்பகம்

www.padippakam.com

அதனை பயங்கரவாதம் என்று வரையறுக்க முடியாது.

பயங்கரவாதம் ஒரு குற்றச் செயல். அதனை ஒரு அரசு நடத்தினால் அது அரசு பயங்கரவாதம். அதுவும் குற்றச் செயலே.

ஆனால், பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டி பொதுமக்களின் சனநாயக உரிமைகளைப் பறிப்பது ஆட்சியாளர்களின் வாடிக்கையாகி விட்டது. செப்டம்பர் 11 தாக்குதலை சாக்காக வைத்து அமெரிக்க அரசு சனநாயக உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து வருகிறது.

எந்தத் தொலைபேசியையும் ஒட்டுக் கேட்கலாம். இன்டர்நெட் வங்கிக் கணக்குகளில் தலையிட்டு கண்காணிக்கலாம்; சந்தேகத்திற்குரிய வெளிநாட்டவரை வெளியேற்றலாம். ஒருவருடைய ஒப்புதல் இல்லாமல் அவரது உடலிலிருந்து மரபணு (DNA) வை எடுக்கலாம். எந்த நீதிமன்ற ஆணையும் இன்றி யாருடைய கல்வி நிறுவனத்திலும், தொழில் நிறுவனத்திலும், குடியிருப்பிலும் நுழைந்து சோதனையிடலாம் என்பன போன்ற விரிவான அதிகாரங்கள் அமெரிக்க உளவுத்துறைக்கு வழங்கப்பட்டு விட்டன. இதற்கான சட்டம் ஒரு சிறு எதிர்ப்போடு அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. இது தவிர அமெரிக்கக் குடிமக்களுக்கு மின்னனு அடையாள அட்டை வழங்கி, அவர்களது நகர்வுகளை நுண் கேமிராக்கள் வழியாக எந்நேரமும் கண்காணிப்பது குறித்து புஷ் அரசு ஆலோசித்து வருகிறது.

எந்த சுதந்திரத்தைக் காட்டி 'நீடித்த சுதந்திரம்' (Enduring freedom) என்ற போர் நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறதோ அதே சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறது அமெரிக்க அரசு.

அமெரிக்காவின் ஆப்கான்போரை எதிர்த்து அமெரிக்க மக்களே ஆங்காங்கு போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். இத்தாலி, ஸ்பெயின், தாய்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் போர் எதிர்ப்பு வலுத்து வருகிறது. உலகம் முழுதும் உள்ள இஸ்லாமிய மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். போர் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் இஸ்லாமிய நாடுகளில் தீவிரப்பட்டு வருகின்றன. பாகிஸ்தானில் இது உள்நாட்டுக் கலவரமாக மாறுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது.



நியூயார்க்கில் போர் எதிர்ப்புப் பேரணி

இந்தியாவில் இடதுசாரிக் கட்சிகள் போர் எதிர்ப்புக் கிளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன. இங்கும் இஸ்லாமிய இளைஞர்கள் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இஸ்லாமியரின் இந்த எதிர்ப்புணர்வு இயல்பானது.

ஆனால் இதனைப் பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தும் ஆபத்து உண்டு. அவ்வாறு போனால் அது தமிழர்களின் ஒற்றுமையையும் பாதிக்கும்.

சந்தடி சாக்கில், 'பயங்கரவாத' விடுதலைப்புலிகளின் பணப்புழக்கத்தையும் முடக்கி வைக்க அமெரிக்கா ஆணையிட வேண்டும் என சோ வகையறாக்கள் கூக்குரலிடுகிறார்கள்.

அமெரிக்கா கோராமலேயே இந்தியாவை இந்த போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வாஜ்பாய் அரசு வலியச் சென்றது. தனது இஸ்லாமிய எதிர்ப்பு, இந்துத்துவ அரசியலை நிறைவேற்ற இது தக்க தருணம் என்று பா.ஜ.க. அரசு திட்டமிடுகிறது. இதன் ஒரு பகுதியாகவே, இஸ்லாமிய மாணவர் அமைப்பான 'சிமி'யை போதிய காரணம் காட்டாமலேயே தடை செய்துள்ளது. அடுத்து காஷ்மீரில் ஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்தியுள்ளது. இது அபாயகரமான போக்காகும்.

இந்தப் போக்கு தொடருமானால் நாளைக்கு யார் இன உரிமை கோரினாலும் பயங்கரவாதி என முத்திரை குத்தி தண்டிக்கப்படும் அபாயம் உண்டு.

தில்லி அரசு பிறப்பித்துள்ள 'பயங்கரவாத எதிர்ப்பு அவசரச் சட்டம்' இதற்கொரு முன்னோட்டம் ஆகும்.

ஆப்கான் மீது போர் நடத்தும் அமெரிக்காவையும் அதற்குத் துணைபோகும் வாஜ்பாய் அரசையும் எதிர்த்துக் குரல் கொடுப்பது ஒவ்வொரு சனநாயக வாதியின் கடமையுமாகும்; தமிழ்த்தேசிய வாதிகள் அனைவரது கடமையுமாகும்.

உலக பயங்கரவாதியான அமெரிக்காவே ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறு!

இந்திய அரசே! இந்துத்துவா போதையில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளனுக்குத் துணை போகாதே!

இதுதான், ஜனநாயக, மதச்சார்பற்ற மற்றும் தமிழ்த் தேசிய சக்திகளின் முழக்கமாக இருக்க வேண்டும்.

இந்த முழக்கம் வெற்றியடைய போராட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப்பட நடிகர்களின் தமிழினத் துரோகம்

- நா.வைகறை

நடிகர் பார்த்திபன் ஆனந்த விகடன் வார இதழில் "....ச்சும்மா" என்ற தொடர் எழுதி வருகிறார். 21.10.01 இதழில் தான் முதல் முதலாக மலையாளத்தில் நடித்து கேரளாவில் வெளியாகியுள்ள "நரேந்திரன் மகன் ஜெயகாந்தன் வகா" என்ற திரைப்படம் குறித்து எழுதியுள்ளார்.

பார்த்திபனின் 'புள்ளக் குட்டிக்காரன்' திரைப்படத்தில் நடித்த மலையாள நடிகர் சீனிவாசன் எழுதி சத்தியன் அந்திக்காடு இயக்கியுள்ள இப்படத்தில் சிறப்புத் தோற்றத்தில் பார்த்திபன் நடித்துள்ளார். கும்பகோணத்தில் இருந்து கேரளாவுக்குச் செல்லும் நாயகனின் நண்பனாக பார்த்திபன் வருகிறார்.

தமிழ்நாட்டில் இருந்து வரும் பார்த்திபனை பார்த்து படத்தின் வில்லன் இன்னொசென்ட் "மலையாளிகள் எல்லாம் புத்திமான்களடா, தமிழனெல்லாம் கழுதைப்பால் குடிச்சு வளந்தவன். முல்லைப் பெரியாறு ஆத்திலேர்ந்து தண்ணி மொண்டு கிட்டுப் போக வந்தியா?" என்று ஏகத்துக்கு ஏளனமாகப் பேசுவார் என பார்த்திபன் இத் தொடரில் குறிப்பிட்டுள்ளார்.

இன்னொசென்ட் இவ்வாறு பேசியவுடன் பார்த்திபன் தமிழனின் வீரத்தைப் பற்றியோ, தமிழர்களின் தன்மானம் குறித்தோ அல்லது பெரியாற்று அணையில் 1895 முதல் 999 ஆண்டுகளுக்கு அணையை தமிழகம் பயன்படுத்திக் கொள்ள உரிமை தரும் ஒப்பந்தம் குறித்தோ, அணையில் 152 அடி தண்ணீர் தேக்கினால் மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மாவட்ட விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றோ, பெரியாறு அணை மட்டுமல்ல தேவிகுளமும், தமிழர்களுக்குச் சொந்தம் என்றெல்லாம் பேசியிருப்பார் என்று நினைத்தால் ஏமாந்து போவீர்கள்.

கட்டுரையில் பார்த்திபன் தொடர்கிறார்.... "இன்னொசென்ட் ஏளனமாகப் பேசியவுடன் அவரையும் அவரது ஆட்களையும் எதிர்த்து பதிலேதும் பேசாமல் அடித்து நொறுக்கிவிட்டு முடிவில், 'தமிழன் வேறயில்ல, மலையாளி வேற இல்ல, எல்லோருமே இந்தியர்கள் தான், என்னை மன்னிச்சுடுங்க' என்று நான் சொல்வதை இன்னொசென்ட்டும் அவரது ஆட்களும் சொல்வார்கள்".

மலையாளிகளின் இன உணர்வு எந்தளவுக்கு உள்ளது என்பதற்கு இச் செய்தியும் ஒரு சான்று. அதே சமயத்தில் தமிழ் நடிகர்களின் இன உணர்வு வீழ்ச்சியடைந்து உள்ளதையும், மாற்றான் இழிவுபடுத்துவதையும் பொறுத்துக் கொண்டு 'இந்தியப் பெருமிதம்' கொள்வதில் காணும் சுகத்தை எண்ணும்போது மிகுந்த வேதனையாக உள்ளது. இந்த '...ச்சும்மா' கட்டுரையில் கூட தமிழின உரிமை குறித்து பார்த்திபன் ஒரு வார்த்தை எழுத வில்லை.

மலையாள நடிகர் இன்னொசென்ட் பேசுவது போல தமிழ் நடிகர்கள் யாராவது தமிழ்நாட்டு உரிமை குறித்து தமிழ்ப் படத்திலாவது பேசியதுண்டா? தமிழனை இழிவு செய்பவர்களை எதிர்த்து பதில் சொல்கிறார்களா?

மலையாளிகள் மட்டுமல்ல, தெலுங்கர்கள், கன்னடர்கள், வங்காளிகள் இவர்களுக்கு இருக்கும் இன உணர்வு தமிழ் நடிகர்களுக்கு இல்லையே?

கன்னட நடிகர் பிரகாஷ்ராஜ் ஆந்திராவில் ஆதிக்கம் செலுத்தக் கூடாதென்று தெலுங்கு நடிகர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். தெலுங்கு நடிகர் வெங்கடேஷ் கன்னடத்தில் முன்னுக்கு வரக்கூடாது என்று கன்னடர்கள் செயல்படுகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் மறைந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசன் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டவுடன் வங்காளிகள் என்ன சொன்னார்கள்? வங்கத்தில் உள்ள சத்தியஜித்ரேயோ அல்லது மிருனாள் சென்னோதான் உலகத் திரைப்பட விழாவில் குத்துவிளக்கேற்ற வேண்டுமேயொழிய, சிவாஜி ஏற்றக் கூடாது என்றார்கள். ஆனால், தமிழர்களோ வந்தவர்களுக்கெல்லாம் சிகப்புக் கம்பளம் விரிக்கிறார்களே!

வீரப்பனிடம் இருந்து ராஜ்குமாரை மீட்க ரஜினிகாந்த் செயல்பட்ட வேகம் என்ன? செயல்பட்ட விதம் தான் என்ன? ஆனால், மைசூரில் 'சமுத்திரம்' திரைப்படக் குழுவினர் பாதிக்கப்பட்டபோது தாக்கியவர்களை கண்டித்தாரா? இல்லையே.

தமிழ்ப்பட நடிகர்கள் தமிழர் நலன் தமிழர் உரிமை குறித்துப் பேசவில்லையென்றாலும் பரவாயில்லை. குறைந்த பட்சம் தமிழர்களின் இனவுணர்வைக் கொச்சைப்படுத்தும் காட்சியமைப்புகளில் நடிக்க மறுக்க வேண்டும். சுய நலத்துக்காக இனமானத்தைக் கேலிப் பொருளாக்கக் கூடாது.

'நாகேந்திரன் மகன் ஜெயகாந்தன் வகா' மலையாளப்படம் தமிழகத்தில் திரையிடப்படும்போது தமிழர்களை இழிவுபடுத்தக்கூடிய காட்சியை நீக்கக் கோரி தமிழக மக்கள் போராட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# தனித் தொகுதிகளும் தலித் மக்களும்

- இராசேந்திர சோழன்

தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் ஒவ்வொரு பொறுப்புக்கும், கட்சி சார்ந்தும், கட்சி சாராமலும் ஏராளமான வேட்பாளர்கள் போட்டியிட்டு பட்டி தொட்டிகளிலெல்லாம் தேர்தல் பணிகள் அமளி துமளி பட்டுக் கொண்டிருக்க, சில இடங்களில் போட்டியின்றி ஒரு மனதாகத் தேர்வு. சில இடங்களில் வேட்பு மனுக்களே தாக்கல் செய்யப்படவில்லை என்றும் செய்திகள்.

ஊராட்சித் தலைவர் பதவிக்கு வேட்பு மனுவே தாக்கல் செய்யப்படாத இடங்கள் விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கொட்டக்கட்சியேந்தல், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஒன்றியத்தில் கீரிப்பட்டி, பாப்பா பட்டி, செல்லம்பட்டி ஒன்றியத்தில் நாட்டார் மங்கலம் ஆகியன.

இதில் மதுரை மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளுக்கும் கடந்த 96 ஆம் ஆண்டு தேர்தலும் நடைபெறவில்லை. இவை மூன்றும் பொதுத் தொகுதிகள் அல்ல. தாழ்த்தப்பட்டோருக்கான தனித்தொகுதிகள். கடந்த முறை யாருமே வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை என்பதால் தேர்தல் நடைபெறவில்லை. இத்தேர்தலிலும் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை.

சரி. நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டு உண்மை நிலை என்ன என்று அறிந்து உலகுக்கு அறிவிக்கலாமே என்னும் விழைவில் மக்கள் சிவில் உரிமைக்கழக முன் முயற்சியில் மனித உரிமை ஆர்வலர்கள், படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள் அடங்கிய ஒரு குழு அக்.6,7 தேதிகளில் இரு நாள் பயணமாக மதுரை நோக்கிப் புறப்பட்டது.

குழுவில் ம.சி.உ.க. (P.U.C.L.) தலைவர் ரவிக்குமார், செயலாளர் வழக்கறிஞர் சுரேஷ், மக்கள் கல்வி இயக்கப் பேராசிரியர் பா.கல்யாணி, எழுத்தாளர்கள் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் பொன்னீலன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மேலாண்மை பொன்னுசாமி, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை இராசேந்திரசோழன், ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியன், பத்திரிகையாளர் 'காலச்சுவடு' கண்ணன், அய்யனார், ம.சி.உ.க. மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆசைத் தம்பி, ஜவஹர் உள்ளிட்டோர் இடம் பெற்றிருந்தனர்.

முந்தைய நாள் இரவே மதுரை வந்தடைந்திருந்த குழு, ஏற்கெனவே இப்பகுதியில் கள ஆய்வு நடத்தி 'மக்கள் கண்காணிப்பு' அமைப்பு தயாரித்து வைத்திருந்த அறிக்கையைப் பெற்று தமிழக மகளிர் இயக்கம், தலித் பெண்கள் மேம்பாட்டுப் பேரவை உள்ளிட்ட சில உள்ளூர் அமைப்புகள், ஆர்வலர்கள் துணையுடன் முதல் நாள் திட்டமாக உசிலம்பட்டியை அடுத்த கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார் மங்கலம் கிராமங்களை நோக்கிப் புறப்பட்டது.

குண்டும் குழியுமான குறுகிய கிராமச்சாலைகள், எதிரே மற்றொரு வண்டி வந்தால் ஒதுங்கக்கூட இடமில்லாமல் பெரும்பாலும் வானம் பார்த்த பூமி. ஒரு சில மச்சு வீடுகளைத் தவிர பிற அனைத்தும் கீற்று வேய்ந்த சிறு குடிசைகள், சிறிய ஓட்டு வீடுகள். வறிய ஏழ்மைத் தோற்றமளிக்கும் மக்கள். சுதந்திர இந்தியாவின் ஐம்பதாண்டு வளர்ச்சிக்குப் பின்னும் இந்தியக் கிராமங்களின் நிலை இதுதானா......? வளர்ச்சி என்பதெல்லாம் நகர்ப்புறங்களை நோக்கியதுதானா என்கிற கேள்விகளின் உரையாடல்களினூடே குழு முதலில் கீரிப்பட்டியை அடைகிறது.

அன்று கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார் மங்கலம் ஆகிய மூன்று கிராமங்களிலும் தாழ்த்தப்பட்ட தாழ்த்தப்பட்டோர் அல்லாத இருதரப்பு மக்களையும் குழுவாகவும், தனித் தனியாகவும் சந்தித்துப் பேசி அங்குள்ள சூழல்களையும் உணர்வுகளையும் புரிந்து கொண்ட வகையில் குழுவினரின் மதிப்பீடு இதுதான்.

1. இம் மூன்று கிராமங்களிலுமே தாழ்த்தப்பட்ட மக்கள் 30 அல்லது 25 விழுக்காட்டிற்கும் குறைவானவர்களாக இருக்கின்றார்கள். இக்கிராமங்களில் மொத்தமுள்ள வாக்காளர்களில் தாழ்த்தப்பட்டோரது வாக்குகள் எண்ணிக்கை வருமாறு: கீரிப்பட்டி 1300ல் 300; பாப்பாபட்டி 2500ல் 700; நாட்டார் மங்கலம் 2750ல் 650.

இவர்களும், ஒரு மொத்தமாக இல்லை. ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு சில துணைக் கிராமங்களைக் கொண்ட அமைப்பாக இருப்பதால் இவர்கள் அவ்வக் கிராமப் பகுதியிலும் சிதறியே வாழ்கிறார்கள்.

வாழ்க்கை முறையும் தாழ்த்தப்பட்டோர் அல்லாத பிற சாதி நில



படிப்பகம்

www.padippakam.com

உடைமையாளர்கள் சார்ந்தே, அவர்கள் நிலத்தில் வேலை செய்து பிழைக்க வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள்.

படித்து முடித்து வேலை வாய்ப்பு பெற்ற ஒரு சிலர் பணி நிமித்தமாக வெளியூர் சென்று விட்டனர். பெரும்பாலும் உள்ளூரோடு அவர்களுக்குத் தொடர்பில்லை.

இந்தப் பின்னணியில் தாழ்த்தப்பட்டோர் அல்லாதார் சொல்லுகிற கருத்து. மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு, கால்பங்கு கூட இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமத்துக்கு, தலைவராவதா? இது என்ன நியாயம்? ஏற்க மாட்டோம். பொதுத் தொகுதியாக அறிவிக்காத வரை தேர்தல் நடத்த விட மாட்டோம் என்பதே.

தனித் தொகுதி என்பது நிரந்தரமானதல்ல என்பதோ, வெறும் பெரும்பான்மை சிறுபான்மை கோட்பாட்டை மட்டுமே வைத்துப்பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நாளிலும் தலைவராக வரமுடியாது என்பதால் தான், இட ஒதுக்கீடு கோட்பாடும் தனித் தொகுதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதோ, இப்படிப்பட்ட வழி முறைகள் மூலமே சமூக சமத்துவத்தை நிறுவும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு, நாட்டில் பிற பகுதிகளிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதோ, எதையும் அவர்கள் ஒப்புக் கொள்வதாய் இல்லை. எல்லாவற்றையும் நிராகரிக்கும் போக்கே அவர்களிடம் வெளிப்படுகிறது.

2. கிராமத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில குடும்பங்கள் தவிர இங்குள்ள தாழ்த்தப்பட்டோர் அல்லாத அனைவரும் பிரன்மலைக்கள்ளர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். இன்றும் குலக்குழு வாழ்வின், அது சார்ந்த வழிபாட்டு முறைகளின் பழக்க வழக்கங்களை விடாமல் கடைப்பிடித்து வருபவர்கள். இவர்களது மொத்த சமூக வாழ்க்கையுமே இது சார்ந்தே இயங்குகிறது எனலாம்.

*மதுரை மாவட்டத்தில் 40 ஊராட்சித் தலைவர்கள் 'போட்டியின்றி ஒருமனதாகத்' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் பொதுத் தொகுதி தனித் தொகுதி எல்லாமும் அடக்கம். இந்த ஒரு மனதான தேர்வில் சில 'ஏல அடிப்படையிலும்' நடைபெற்றுள்ளன. ஒரு லட்ச ரூபாய் முன் பணம் கட்டி ஏலம் கேட்க வேண்டும். அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர் தலைவர். சில இடங்களில் 'குடவோலை முறை மூலம்' வாக்களித்து தலைவரை தேர்ந்தெடுத்ததாகவும், கேட்டால் இது நம் தமிழ் மரபில் உள்ளது தானே என்றும் சொல்கிறார்கள். இது எந்த அளவுக்கு சனநாயகத் தன்மை கொண்டதாய் இருக்க முடியும் என்பதோ, ஊர்க்கட்டுப்பாட்டை விரும்பாதவர்களின் நிலை என்ன என்பதோ எல்லாம் கேள்விக்குரியதே. ஏலம் எடுத்து தலைவர் அளிக்கும் பணம் கிராம வளர்ச்சிப்பணிகள் எதற்கும் செலவிடப்படுவதாக எவரும் சொல்லவில்லை. எல்லாம் தேர்திருவிழாக்களுக்கும், வாண வேடிக்கைகளுக்குமே செலவிடப்படுவதாகவும், இதிலும் துணைக் கிராமங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதாகவுமான குமுறலும் ஒருபுறம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் மட்டுமல்ல பக்கத்தில் இராமநாதபுரம், சிவங்கை மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட நிலை உண்டு.*

எல்லா ஊரிலும் கிராமப் பொது மண்டபம், அல்லது பொது கூடுமிடம் இருக்கிறது. சாரத்தில் இது பெரும்பான்மை சாதிக்காரர்களின் கூட்டமாகவே தான் இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஊரின் எல்லா முடிவுகளும் இங்கே தான் எடுக்கப்படுகின்றன. இதுவே ஊரை வழி நடத்துகிறது. இம் முடிவுகளுக்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டும். யாரும் மீற முடியாது. மீறுபவர்கள் மீது நடவடிக்கை உண்டு.

இந்திய அரசமைப்புச் சட்டம், அடிப்படை உரிமை, சனநாயகம், சமத்துவக் கோட்பாடு, அது சார்ந்த பிற சட்ட திட்டங்கள் எதுபற்றியும் இவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் அது ஒரு பொருட்டில்லை. ஊர்க் கூட்ட முடிவுகள் தான் முக்கியம். அதுதான் முதலில் மற்றதெல்லாம் இரண்டாம் பட்சமே.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதில் எந்தவிதமான பங்கோ அதிகாரமோ கிடையாது. அவர்களுக்குள்ளதெல்லாம் முடிவுகளுக்குக் கட்டுப்படும் கடமை மட்டுமே.

இந்த கட்டமைப்பு வலுவாக இருப்பதால் இவர்கள் உண்மை அறியும் குழுவிடம் இயல்பாக ஒன்றைச் சொல்கிறார்கள். இக்கிராமங்கள் தனித் தொகுதிகள் தான் என்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் பாட்டுக்கு மனுச் செய்து கொள்ளட்டுமே. நாங்களா வேண்டாமென்கிறோம். நாங்கள் ஒன்றும் தடை செய்யவில்லையே என்கிறார்கள்.

3. அரசியல் கட்சி செயல்பாடுகளைப் பொறுத்த வரை ஊரின் எந்தப் பகுதியிலுமே எந்தக் கட்சியின் கொடியுமே இல்லை. இதனால் ஊர் முழுக்கவும் ஒரே கட்சியாக, எல்லோரும் கூடி முடிவு செய்து ஏதாவது ஒரு கட்சிக்குத்தான் வாக்களிப்பார்களா என்றால் அப்படியும் இல்லை.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் வரும்போது அந்தந்த கட்சிக்காரர்களும் அவரவர் கட்சிக் கொடிகளைக் கட்டிக் கொண்டு வரலாம். உள்ளூரிலுள்ள கட்சிக்காரர்களும் அந்த கட்சித் தோரணங்கள் கட்டி வரவேற்கலாம். வாக்குக் கேட்டு பிரச்சாரம் செய்யலாம். இந்த உரிமையும் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்ந்த கட்சிக்கு இருப்பதாய்த் தெரியவில்லை. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

எதுவானாலும் எல்லாம் அந்த ஒரு நாளோடு சரி. அடுத்த நாள் எல்லாவற்றையும் கலைத்து விட வேண்டியதுதான். தேர்தல் நாளில் அவரவர் விரும்பும் கட்சிக்கு அவரவர் ஓட்டு போட்டுக் கொள்ளலாம்.

அதாவது மேல் நிலை அமைப்புகளுக்கு சனநாயகம். உள்ளூர் நிர்வாகத்திற்குக் கட்டுப்பாடு. இதிலும் தாழ்த்தப்பட்டோர் அமைப்புக்குப் பாகுபாடு.

இது ஒரு புறமிருக்க இங்கு இறை வழிபாட்டுச் சடங்குகளும் விழாக்களும் அரசியலோடு தொடர்புடையதாக ஒன்றுக்கொன்று இரண்டறக் கலக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தின் பொதுக் கூட முகப்பில் சாமி சிலைகள் வைக்கப்பட்டு கோவில் போன்ற தோற்றம் தருகின்றன. உட்புறம் முத்துராமலிங்கத் தேவர் மூக்கையாத் தேவர், சுபாஷ் சந்திர போஸ் படங்கள், ஃபார்வாட் பிளாக் கொடிகள் வரையப்பட்டுள்ளன.

கோவில் திருவிழாக்களின் போது சாதி நாட்டாண்மைகளுக்கு முதல் மரியாதை செலுத்தும் நடைமுறை இருக்கிறது. இதற்கும் அரசியலுக்கும் நேரடியாக ஏதும் சம்பந்தமில்லை என்றாலும், முதல்மரியாதை பெறும் சாதியத் தலைவர்களே ஊர்த் தலைவராகவும் இருக்க வேண்டுமென்று சாதிக்காரர்கள் விரும்புகிறார்கள்.

முதல் மரியாதை பெறுபவர் ஒருவராகவும்; ஊர்த் தலைவர் வேறு ஒருவராகவும் இருப்பதை இவர்கள் விரும்புவதில்லை. அதாவது அதிகாரம் கைமாறுவது என்பது இவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதே இதன்பொருள். இதிலும் பாப்பாபட்டி, மூக்கையாத் தேவர் பிறந்த ஊர் என்பதால், இந்த உணர்வு, இங்கு கூடுதலாக இருக்கிறது. அதாவது நம் தலைவர் பிறந்த ஊருக்கு நம்மவரல்லாத தாழ்த்தப்பட்ட ஒருவர் தலைவராக வருவதா என்னும் உணர்வு.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் போய் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? கண்களில் மிரட்சியும் அச்சமும் குடி கொள்ள அவர்கள் சொல்வது. "எங்களுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய ஆசைதான். ஆனால் கிராமத்தில் பெரும்பான்மையினராயிருக்கும் அவர்களை மீறி என்ன செய்ய முடியும்?".

சட்டம், காவல், நிர்வாகம், நீதி மன்றம் பாதுகாப்பு எல்லாம் இல்லையா என்று கேட்டால் "அதெல்லாம் எத்தனை நாளைக்கு" என்கிறார்கள்.

இன்னும் சிலர் "எங்களையெல்லாம் கொண்டு போய், எங்கள் மக்கள் வாழும் வேறு பகுதிகளில் குடியமர்த்தி விட்டால் கூடப் பரவாயில்லை. நாங்கள் எங்கள் மக்களோடு மக்களாக ஒன்றாய்க் கிடந்து விடுவோம்" என்கிற அளவுக்கு விரக்தியாய்ப் பேசுகிறார்கள்.

இப்படி பலதரப்புக் கூற்றையும் வைத்து நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டு, திரும்புகிறது குழு. இத்துடன் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட ஊர்கள், தலைவர் பதவி பல இலட்சங்களுக்கு ஏலம் போன ஊர்கள் இவைகளில் ஏதாவதொன்றை நேரில் சென்று கண்டு வர நினைத்திருந்தது. இதில் போஸ் என்பவர் 5.4 இலட்சத்துக்கு தலைவர் பதவியை ஏலம் எடுத்த அய்யனார் குளம், உசிலம்பட்டி வட்டப்பகுதியிலேயே இருந்தாலும் நேரமின்மையால் சென்று பார்க்க முடியவில்லை.

அதே போல கடந்த தேர்தலில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் செயல்பட முடியாது, மதுரையில் ரிக்ஷா ஓட்டிப் பிழைத்துக் கொண்டிருப்பவர் ஊரான மருதங்குடியையும் பார்த்துவர திட்டமிட்டது. அது மதுரையை விட்டு வேறொருதிசையில் பல கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருந்ததில் அதையும் தவிர்க்க வேண்டியதாயிற்று.

*உசிலம்பட்டி வட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாட்டார்மங்கலம் ஊராட்சி மன்ற தனித்தொகுதிக்கு, சரஸ்வதியம்மாள் வயது 45, நரசிங்கம் வயது49 ஆகிய இருவர் தனித்தனியே மனுச் செய்திருக்கின்றனர்.*

*இதில் சரஸ்வதியம்மாள் முன்னாள் காவலரின் மனைவி. வேட்பு மனுத்தாக்கல் செய்யச் சென்ற போது தடுக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டிருக்கிறார். வேட்பு மனு தாக்கல் செய்யாமலே அதன் 'பலனை' அனுபவித்துக் கொண்டிருக்கும் இவருக்கும், ஒரு துணை ஆய்வாளர் இரண்டு காவலர்கள் ஆயுதம் தாங்கி நின்று இவர் குடிசையில் பாதுகாப்புப் பணி புரிந்து வருகின்றனர்.*

*நரசிங்கம், தான் வேட்பு மனுத் தாக்கல் செய்ய பாதுகாப்புக் கோரி மாவட்ட ஆட்சியரை அணுகியபோது அவர் துணைக் கண்காணிப்பாளரைப் பார், அவரைப் பார், இவரைப் பார் என்று இழுத்தடிப்பு செய்து வேட்பு மனுத்தாக்கலுக்கான காலக் கெடுவே முடிந்துவிட்டது. இப்படி முயன்ற குற்றத்திற்காகவே அவருக்கும் அச்சுறுத்தல்.*

*தற்போது இவருக்கும் 24 மணி நேர காவல் பாதுகாப்பு தரப்பட்டு, வீட்டோடு - தன் குடிசையிலேயே முடங்கிக் கிடக்கிறார்.*



படிப்பகம்

www.padippakam.com

எனவே, கடந்த தேர்தலில் முருகேசன் என்பவர் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட முடியாது படுகொலைக்குள்ளான மேல வளவு நோக்கி குழு மறுநாள் பயணப்பட்டது.

ஊரை நெருங்கியதும் முதலிலேயே தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புப் பகுதி. சாலையோரத்திலேயே தியாகிகள் நினைவுக் கள மண்டபம், கம்பீரமாயும் பொலிவுடனும் நின்றது. எளிய வடிவமைப்புடன் கூடிய கச்சிதமான மண்டபம். நன்கு பராமரிக்கப்பட்டு வருவது தெரிந்தது. ஏழு தியாகிகள் அடக்கம் செய்யப்பட்ட இடம்.

மண்டபத்தைச் சுற்றிப்பார்த்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி, பகுதி மக்களைக் கண்டு விசாரித்தால் இங்கு பிரச்சினை வேறு விதமாக இருந்தது.

இங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் போட்டியிட எந்தத் தடையும் இல்லை. 8 பேர் போட்டியிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தாழ்த்தப்பட்டோரின் போலிப் பிரதிநிதிகளாக செயல்பட உறுதியளித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். செயல்படவும் முடியும் என்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் அல்லாத பகுதி மக்களைப் போய்க் கேட்டால், தாழ்த்தப்பட்ட மக்கள் பேர்ட்டியில் நாங்கள் யாரும் தலையிட்டுக் கொள்வதில்லை. யார் எங்களை வந்து கேட்கிறார்களோ அவர்களுக்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். இந்த முறை செல்லம்மாள் என்பவர் எங்களை வந்து அணுகினார். அவரை நாங்கள் ஆதரிப்பதாக முடிவு செய்திருக்கிறோம். அவ்வளவே என்கிறார்கள்.

இக்கிராமத்தில் கடந்த ஆண்டு நிகழ்வுகளின் பதட்டம் தணிந்து பெருமளவு சகஜநிலை திரும்பி வயல் வேலை, வீட்டு வேலைகளுக்கெல்லாம் தாழ்த்தப்பட்டோர் சென்று வருவதாகச் சொல்லப்பட்ட போதிலும், இரு தரப்பினரிடமுமே ஏதோ ஒரு இனம் புரியாத இறுக்கம், மனதிலிருப்பதை வெளிப்படையாய்ச் சொல்லிக் கொள்ள முடியாத ஒரு நெருடல் நிலவுவதாகத் தெரிந்தது.

மக்களிடம் விடைபெற்றுக் கொண்டு முற்பகல் அளவிலேயே மேல வளவு பயணத்தை முடித்துக் கொண்ட குழு பிற்பகல் மதுரையை அடைந்து இரண்டு நாள் கள ஆய்விலும் தாங்கள் அவதானித்த கருத்துகளை பரிமாறித் தொகுத்து, ஒரு அறிக்கையினைத் தயாரித்தது.

ஏற்கெனவே தகவல் தெரிவித்து இறுதி செய்தபடி மாலை மாட்டுத் தாவணி பேருந்து நிலையம் எதிரில் உள்ள செய்தியாளர் அரங்கில் பத்திரிகையாளர் சந்திப்பு. குழுவினர் தம் கருத்துகளைப் பத்திரிகையாளர்களிடம் பகிர்ந்து கொள்ள, பத்திரிகையாளர்களும் தாங்கள் அறிந்த தகவல்களைப் பங்களிப்பாகச் செலுத்த, பத்திரிகைகளுக்கான செய்தியளிப்பு நிறைவடைந்தது.

இவ் இரண்டு நாள் அனுபவத்தில் அறிய வந்த தகவல்களை வைத்து நோக்க, தற்போதுள்ள நிலைமைக்கும், பிரச்சினையின் தீர்வுக்கும் நமக்குத் தோன்றும் யோசனைகளாக சொல்ல விரும்புவது:

இருபத்தியோராம் நூற்றாண்டு, நாகரிக வளர்ச்சி, சனநாயகம், சமத்துவம் இந்தியாவின் குடியரசுத் தலைவரே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்தான் என்று பேசப்படும் பெருமை போன்றவற்றிற்கிடையேதான். இந்த நாளிலும் தாழ்த்தப்பட்ட ஒருவர் ஊராட்சி மன்றத் தலைவராக வரமுடியாமல் சாதி ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது. இதற்கு முதலாவதானதும் அடிப்படையானதுமான காரணம், ஆட்சியாளர்கள், அரசியல் கட்சிகள்.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 17இல் தீண்டாமையை ஒரு குற்றச் செயல் எனப்போட்டு, அதையொட்டி சில சட்டங்களை இயற்றியதுடன் பள்ளிப் பாடப்புத்தகங்களிலும் தீண்டாமை ஒரு பாவச் செயல், பெருங்குற்றம், மனிதத் தன்மையற்ற செயல் என்றெல்லாம் முதல் பக்கத்திலேயே அச்சிட்டு வைத்திருக்கும் அரசுகள், அதன் செயலாக்கத்திற்கு எந்த சீரிய முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான சிறப்பு நலத்திட்டங்கள் எதுவும் இப்படிப்பட்ட கிராமங்களுக்கு உரிய முறையில் போய்ச் சேர்ந்ததாகவும் தெரியவில்லை.

அரசியல் கட்சிகள், மக்கள் நலன்பற்றியோ, அவர்களின் சமூக விழிப்புணர்வு பற்றியோ எந்த அக்கறையும் பட்டுக் கொள்வதில்லை. அவ்வப்பகுதியிலும் செல்வாக்கு மிக்க சாதிகளோடு சமரசம் செய்து கொண்டு அது அதற்குரிய வேட்பாளர்களை நிறுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முனையும் நோக்கு கொண்டவையாக மட்டுமே செயல்பட்டு வருகின்றன.

* ஈரோடு மாவட்டம் கொமார பாளையம் சிற்றூராட்சியில் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட ஒரு வார்டில் எவரும் வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை என்பதை ஒரு சீரிய பிரச்சினை எனக் கருதி கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிடுகிறார் மாவட்ட ஆட்சியர் கா. பாலசந்திரன். எனில் மூன்று பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்புகளுக்கும் கடந்த தேர்தலிலும், இந்த தேர்தலிலும் எவருமே வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை என்ற நிலையை வெகு எளிதாக எடுத்துக் கொண்டிருக்கிறார் மதுரை மாவட்ட ஆட்சியர் சேது. இராமச்சந்திரன்.

நிர்வாகத்தின் இது போன்ற பல்வேறுப்பட்ட போக்குகளே சாதி ஆதிக்க வெறி தொடர்ந்து தலை விரித்தாடக் காரணமாய் அமைகின்றன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வட மாவட்டங்களை ஒப்பு நோக்க தென் மாவட்டங்களிலேயே இப்படிப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

## திலீபன் நினைவு சிறப்புத் தகவல் நேரம்

தியாகி திலீபன் நினைவு நாளான செப்டம்பர் 26 அன்று தஞ்சையில் தமிழக இளைஞர் முன்னணி சிறப்புத் தகவல்நேரம் நடத்தியது. தோழர் இரெ.சிவராசு தலைமை தாங்கினார். தோழர் கி. வெங்கட்ராமன் 'பயங்கரவாதமும், சனநாயகமும் 'என்ற பொருளில் உரையாற்றினார். தோழர்களின் கேள்விகளுக்கும் தோழர் கி.வெ. விளக்கம் அளித்தார்.

கொடுமைகள் இன்னும் நீடித்துக் கொண்டிருக்கின்றன எனலாம்.

* இப்படிப்பட்ட சாதிய ஒடுக்குமுறைகளைக் களைய ஆட்சியாளர்களும் அரசியல் கட்சிகளும் உரிய செயல் திட்டங்கள் தீட்டி அதைச் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

* தற்போது ஒன்றிய கவுன்சிலர், மாவட்ட கவுன்சிலர் பொறுப்பு வரைக்கும் அரசியல் கட்சிகள் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பிருந்து, ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்புக்கு போட்டியிட மட்டும் அவ்வுரிமை வழங்கப்படாமல் இருக்கிறது. இதுவே ஒரு சனநாயக மறுப்பாகும். எந்த ஒரு தனி நபருக்கும் அரசியல் கட்சி சார்ந்தோ சுயேச்சையாகவோ போட்டியிடும் உரிமை இருக்க வேண்டும். இதன் வழி கிராமப்புறங்களிலும் அரசியல் சார்ந்த நடவடிக்கைகைகள் பெருகவும், சாதியக் கட்டமைப்பு ஓரளவு சரியவும் வாய்ப்பு கூடும்.

* தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் தங்கள் மக்களோடு மட்டுமே சேர்ந்த தனிக்குடியிருப்பிற்கு பாதுகாப்பு கருதி இடம் பெயர்வது என்கிற ஒரு கருத்து தலை தூக்கியிருக்கிறது. இது மக்களை மீண்டும் சாதிய ரீதியில் அணி சேர்க்கவும் அதன் கட்டமைப்பை இறுக்கப்படுத்தவும் சாதிகளுக்குள்ளே பகைமையையும் வெறுப்பையும் மேலும் தூண்டவும் வளர்க்கவுமே பயன்படும். எனவே அப்படிப்பட்ட எண்ணத்தை கைவிட வேண்டும்.

* கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு இக் கொடுமையை ஒழிக்க முனையும் அதே வேளை, இது உணர்ச்சிகளை மலிவாக உசுப்பிவிடும் தன்மை கொண்டதாகவும் இருப்பதால், படிப்படியான, இங்கிதமான விழிப்பூட்டல் மூலமும், உணரச் செய்து ஒப்புக் கொள்ள வைப்பதன் மூலமும் இப்பிரச்சினையின் தீர்வுக்கான வழி வகைகளைக் காண வேண்டும்.

* எல்லாவற்றுக்கும் மேலாக பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் இது நமக்கு விதிக்கப்பட்டது நிலையானது என்கிற மனப்போக்குகளிலிருந்து விடுபட்டு, இதன் மாற்றத்துக்கும், தாங்களும் பிற மனிதர்களைப் போல சமத்துவமாக நடத்தப்படவேண்டியவர்கள்தான் என்கிற உரிமைக்கும் போராட வேண்டும். இதற்கு தாழ்த்தப்பட்டோர் அல்லாதோரின் பங்கு மிக முக்கியமானதாகும். அப்பகுதி மக்களில் உள்ள சனநாயக சக்திகள் இதற்கு முழு மனதாக ஆதரவளிக்க வேண்டும். இப்போராட்டத்தை ஊக்கப்படுத்த மற்றவர்களையும் இதற்கு மனமிணங்கச் செய்ய முயலவேண்டும்.

* இவையனைத்தும் பிரச்சினையின் தீர்வுக்கான பொதுவான நடவடிக்கைகள். எழுந்துள்ள குறிப்பான பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் அதாவது மூன்று தனித் தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்துவது பற்றி, வரும் பிப்ரவரி மாதத்தில் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதற்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்ட ஆட்சியர் செய்தது போலவே கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிட்டு, தாழ்த்தப்பட்டோர் வேட்பு மனுத் தாக்கல் செய்ய தடைக்கற்களாயிருக்கும் சூழல், சக்திகளைக் கண்டறிந்து அவற்றைக் களைந்து தேர்தலுக்கான சுமுக நிலையை உருவாக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட சமூக வேட்பாளர்களைப் போட்டியிட விடாமல் தடுக்க முன் முயற்சி செய்த சாதி ஆதிக்க வெறியர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.●

## தோழர் பி.எஸ்.சீனிவாசராவ் அவர்களின் 40 ஆம் ஆண்டு நினைவுநாள் பொதுக் கூட்டம்

திருத்துறைபூண்டி, காமராஜர் சிலை அருகில் 30.09.2001 ஞாயிறு மாலையில் திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளர், தோழர் ப. பழனிக்குமார் தலைமையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் தோழர் பெ.மணியரசன் சிறப்புரையாற்றினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் இரா.கோவிந்தசாமி, தமிழக உழவர் முன்னணி ஒன்றிய அமைப்பாளர் தோழர் வெ.இராமதாசன், கட்சி ஒன்றிய செயலாளர் கா.அரசு ஆகியோர் பேசினார்கள். காலையில் பல்வேறு பகுதிகளிலும் கட்சி கொடிகளை ஏற்றி நூற்றுக்கணக்கானவர்கள் வாகனங்களில் வந்திருந்தனர். மாலையில், தோழர்கள் பொதுச்செயலாளர் உட்பட பி.எஸ்.ஆர். நினைவு மேடையில், மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர். இந்நிகழ்ச்சி புதிய எழுச்சியும் பிரதிபலிப்பும் உடையதாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இரும்பொறையின்

# சிறைத்தூரிகை

(பாத்தொகுப்பு)

- நீடா இளஞ்செழியன்

அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பலரும், முழுமையான விடுதலை உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு, அடிமைகளாகவே சிந்தித்துக் கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கின்றனர். இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, வரட்டு இலக்கியத் தத்துவங்களுக்கும் இடந்தராது ஆதிக்க வாதிகளால் சிறைபடுத்தப்பட்டிருந்த காலங்களிலும் விடுதலை வேட்கையோடு தன் முனைப்பான சிந்தனைகளோடு பல தலைப்புகளில் பல்வேறு பாக்களை "சிறைத்தூரிகை"யில் பதிவு செய்து இருக்கிறார் இரும்பொறை.




சிறைக்கம்பியே கரமாக நீண்டு எழுதுவதுபோல் தீட்டப்பட்டுள்ள ஓவியர் புகழேந்தியின் ஓவியமும், அய்யா பழ.நெடுமாறன் அவர்களின் அணிந்துரையும், உணர்ச்சிப்பாவலர் காசி ஆனந்தன் அவர்களின் மதிப்புரையும் சிறைத்தூரிகைக்குச் சிறப்பு சேர்ப்பதோடு, எப்படிப்பட்ட படைப்புகளை "சிறைத்தூரிகை" உள்ளடக்கி இருக்கிறதென்பதையும் உணர்த்துகின்றன.

சிந்துவெளி நாகரிகத்தை வரலாற்றுப் புரட்டால் ஆரியமயமாக்கும் இச்சூழலில் வந்தவனுக்கெல்லாம் வளமான வாழ்வளித்து விட்டு தன் வாழ்வு இழந்து போகும் நிலையை "சிந்து வெளியானே" பாவின் இறுதி வரியில் "வீட்டை விலைபேசாதே" என எச்சரிக்கிறார்.

"சாவைச் சுமந்தால் சரித்திரமாகலாம் புரிந்துகொள் தோழனே!" என்கிறார் இன்னொரு பாவில். "சிற்றெறும்பு / தன் எடையிலும் / பல மடங்கு உணவினை / இழுத்தோடும்/ இனத்தின் சேமிப்பு கிடங்கு" என்று இன உணர்வை வலியுறுத்துகிறார்.

தங்கைக்கு எழுதிய கடிதமொன்றில் வீணர்களை இனத்திற்கு உரமாக்கச் சொல்கிறார்.

தமிழர்களின் தாராள எண்ணங்களால் சுயமிழந்து போகும் தமிழனின் நிலையினை "உன் விரிந்த அன்பால்/ சுருங்கியது தேசம் / விழித்துக்கொள்" என்கிற வரிகளில் விளக்குகிறார்.

பெரியாரின் பெயரைச் சொல்லி அரசியல் பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவர்களை "உங்களின் அறுபது ஆண்டுகால சூட்டுக் கோலுக்குப் / பிறகும் சொரணையில்லாமல் / பார்ப்பனியத்திற்கு / நடைபாவாடை விரிப்பவர்களுக்கு / இன்று நீங்கள் இருந்திருந்தால் / எதால் அடிக்கச் சொல்வீர்கள்?" எனக் கேட்கிறார்.

பெண்ணுக்குப் புகட்டப்பட்டிருக்கும் ஆலோசனைகளும் பூட்டப்பட்டிருக்கும் அணிகலன்களும், கூட பெண்ணிய விடுதலைக்கு எதிரானதுதான் என்பதை உன்/ உரிமைக்கு விலங்கிட்டது / ஊர்மட்டுமா? இல்லை/ கை வளையலும் / கால்தண்டையும் / கழுத்துப் பதக்கமுங்கூட / அச்சம் / மடம் / நாணம் / பயிர்ப்பு / நான்கையும் எடுத்து / நான் குதிக்கிலும் வீசு / ஓங்கிய குரலில் / உரிமை முழங்கிப் பேசு" என்கிறார்.

"தமிழர் தலைமகன் வாழியவே" ஈழப்போர்க்களத் தலைவரின் - பிரபாகரனின் தனிச் சிறப்பைக் குறிப்பிடுகிறார். ஈழவிடுதலை ஆதரவு நிகழ்வுகளில் எல்லாம் பாடப்பட வேண்டிய பாடல் இது.

## உரைகல்

இப்படி தொகுப்பு முழுக்க இன,மொழி, விடுதலை உணர்வுகளை வலியுறுத்தி வாசிப்பவர்களை சிலிர்த்தெழ வைக்கிறார். இன்றைய கால கட்டத்திற்கு இப்படி ஒரு தொகுப்பு தேவையே! இதன் விலை ரூ.25/- மட்டுமே!

**இதழ் தொடர்புக்கு :**

தடா அமுதன்
நட்புறவுப் பதிப்பகம்,
கொத்தமங்கலம் (அஞ்சல்),
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 624



படிப்பகம்

www.padippakam.com

# "திராவிடம் - தேசியமல்ல, கலாச்சாரமே" தணிகைச் செல்வன் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலைஞர் கருணாநிதி பேச்சு!

கவிஞர் தணிகைச் செல்வன் அவர்களின் அனைத்துக் கவிதைகளின் முழுத்தொகுப்பும் கொண்ட "**தணிகைச் செல்வன் கவிதைகள்**" நூல் வெளியீட்டு விழா 1.10.2001 அன்று மாலை சென்னை நாரதகான சபாவில் நடந்தது.

விழாவிற்குத் தலைமை ஏற்று கவிதை நூலை வெளியிட்டார் முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். தோழர் பெ.மணியரசன், ஃப்ரண்ட்லைன் ஆசிரியர் என்.ராம், பேராசிரியர் பொன் செல்வகணபதி ஆகியோர் உரையாற்றினர். திரு இளவேனில் வரவேற்புரையாற்றினார்.

"பாரதியாருடைய வேகமும் பாரதிதாசனுடைய சொல்வளமும் தணிகைச் செல்வன் கவிதைகளில் இருக்கின்றன" என்று பாராட்டினார் கலைஞர்.

கவிஞர் தணிகைச் செல்வன் "இந்திய தேசியம்", "திராவிட தேசியம்" என்ற இரண்டு இல்லாத தேசியங்களை விமர்சித்து எழுதிய கவிதைகளைக் குறிப்பிட்டு பேசும்போது, பின்வருமாறு கலைஞர் கூறினார்:

"இருபது மொழிகள் பேசும்
இந்தியப் பூபாகத்தில்
ஒரு மொழி மாந்தரெல்லாம்
ஓரினம், எனவே இங்கு
இருபது மொழிகளுக்கு
இனங்களும் இருபதென்னும்
வரலாற்றைப் படைக்க வேண்டும்
வாழ்க்கையைப் படிக்க வேண்டும்

என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.




எனக்கொத்த கருத்து இது. இந்தியாவிலேயே இருக்கின்ற ஒவ்வொரு மொழி பேசுகின்ற இனமும் தேசிய இனம். அந்த வகையில் இது தமிழ்த் தேசிய இனம் என்று அவர் குறிப்பிடுகிறார். அப்படிக் குறிப்பிட்டு விட்டு

'இந்தியம்' - 'திராவிடம்' என்ற
இருவகைத் தேசியத்தின்
பண்புகள் கடந்த காலப்
பழமையின் கானல்தோற்றம்!

செந்தமிழ் மொழியால் தமிழன்
என்பதே உண்மை! வேறு
இனப்பெயர் பொய்ம்மை!

என்று சொல்கிறார். இதில் தான் நான் சற்று வேறுபட்டு மறுக்க விரும்புகிறேன். நான் அடிக்கடி சொல்வது, மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன், உலகத்தால் மனிதன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை பாடாக இதை எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

நாங்கள் தமிழ்த் தேசிய இனத்தை மறுக்க வில்லை. திராவிடம் என்று நாங்கள் குறிப்பிடுவது இந்த இயக்கத்திற்கு அந்தப் பெயரை அறிஞர் அண்ணா அவர்கள் சூட்டியது ஒரு தேசிய நிலைபாடு எடுத்தல்ல. திராவிட நாகரிகம் என்று தனித்துப் பிரித்துக் காட்ட வேண்டுமேயானால், அரப்பா, மொகஞ்சதாரோ போன்ற பகுதிகளிலே கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் பலபெரியவர்கள் சரித்திர ஆசிரியர்கள், புவியியலாளர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோர் - ஐயர், ஐயங்கார், சர்மா, சாஸ்திரிகள் என்ற பட்டத்துக்குரிய வரலாற்றாசிரியர்கள் கூட வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற உண்மை.



படிப்பகம்

www.padippakam.com


# தணிகைச் செல்வனின் கவிதைகள்

கவிஞர் தணிகைச் செல்வன் இதுவரை எழுதியுள்ள ஏழு கவிதைத் தொகுதிகளும் ஒரே நூலில்!



பக்கம் : 559
விலை : ரூ.250.00

<u>கிடைக்குமிடம்</u>

தணிகை நூலகம்
15, ஸ்ரீராம் குடியிருப்பு,
தாம்பரம் சானடோரியம்,
சென்னை - 47.


மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிட நாகரிகம். ஆரிய நாகரிகம் வந்து புகுந்த நாகரிகம். எச்சரிக்கையாக அண்ணா ஆரியர், திராவிடர் என்று பகுத்துக் குறிப்பிடவில்லை. 'ஆரியம்' 'திராவிடம்' என்று கலாச்சாரத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள். இப்பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுக்குட்பட்ட பகுதி திராவிடம் என்று அழைக்கப்பட்டாலும் தனித்தனி பகுதிகளாக அவைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் நாம் தமிழ் மொழிக்குரியவர்கள். தமிழ்த் தேசிய உணர்வை வெறுத்துவிடவில்லை. ஏற்றுக் கொள்கிறோம். அதே நேரத்தில் திராவிட நாகரிகம் என்பது தனி நாகரிகம் என்பதைப் பிரித்துக் காட்ட, எடுத்துக்காட்ட திராவிடம் என்ற சொல்லை பயன்படுத்துகிறோம். 'இந்தியம்' என்று சொல்வது கிடையாது.

.....................................................

திராவிடம் என்பதற்கு எதிர்மறை 'இந்தியம்' என்று ஆகாது. திராவிடம் என்பதற்கு எதிர்மறை 'ஆரியம்' என்று தான் ஆகும். ஒரு பகை உணர்ச்சியோடு நான் இதைச் சொல்லவில்லை"

இங்கு, கலைஞர் கருணாநிதி அவர்கள், தமிழ்த் தேசியத்தைத் தாங்கள் வெறுக்கவில்லை ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறிவிட்டு, திராவிடம் என்பது ஒரு தேசியமல்ல, அது ஒரு கலாச்சாரம், ஆரியத்திற்கெதிரான கலாச்சாரம். அந்த திராவிடக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்ற பொருளில் தான் 'திராவிடம்' என்ற சொல்லை பயன்படுத்துகிறோம். அண்ணா கூட எச்சரிக்கையாக "திராவிடர்" என்று குறிப்பிடாமல் "திராவிடம்" என்று தான் குறிப்பிட்டார் என்று கூறுகிறார்.

ஆனால் இதே கலைஞர் இதே பேச்சில் தம்மை "இனத்தால் திராவிடன்" என்று கூறுகிறார். அண்ணா திராவிடர் என்று சொல்லவில்லை என்று கூறும் இவர் தம்மை, நம்மை "திராவிடன்" என்று ஏன் சொல்ல வேண்டும்? திராவிடர் என்பதில் உள்ள 'ர்' பலர் பாலைக் குறிக்கும் அல்லது மரியாதை விகுதி ஆக இருக்கும். மற்றபடி உட்பொருளில் திராவிடன், திராவிடர் இரண்டும் ஒன்றே.

'கலாச்சாரத்தால் திராவிடன்' என்று சொல்லாமல் 'இனத்தால் திராவிடன்' என்றல்லவா கலைஞர் குறிப்பிடுகிறார்.

"தமிழம்" என்ற சொல்தான் வேற்று மொழியாரால் குறிப்பாக ஆரியரால் "திரமிளம்", "திராவிடம்" என உச்சரிக்கப்பட்டது என்பார் பாவாணர். மொகஞ்சதரோ, அரப்பா நாகரிகம் தமிழர் நாகரிகம் தான் என்பார் அவர்.

ஒரு வகையில் ஆறுதல் அடையலாம். திராவிட தேசியம், திராவிட இனம் என்றெல்லாம் பேசி வந்த கலைஞர் திராவிடம் என்பது வெறும் கலாச்சாரம் தான் என்று மாறியுள்ளார். மேலும் தமிழ்த் தேசியத்தை வெறுக்கவில்லை, ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறியுள்ளார்.

இச்செய்தி பதிவாகிட கவிஞர் தணிகைச் செல்வன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா பயன்பட்டதும் பெருமைக்குரியதுதான். மொழியால், தேசிய இனத்தால், தேசத்தால் நாம் தமிழர்களே!

நாட்டால் இந்தியன் என்பது இனக் கோட்பாட்டிற்கு ஒவ்வாத ஒன்று●


தேசியம் கற்பிதமா?
இதுவரை தமிழ்த் தேசியம்
இனி தமிழ்த் தேசியம்
தலைவரைத் தேடி
முழக்கங்களும் கோட்பாடுகளும்
பார்ப்பனியமா? பார்ப்பனர்களா?
தன் சாதிப்பற்றும் தமிழ்த் தேசியமும்
இன்னும்... இன்னும் பல பொருள்கள்
குறித்த கட்டுரைகள் அடங்கிய புதிய வெளியீடு

# தமிழ்த் தேசியம் இனி




பக்கம் : 236+6
விலை : ரூ.80.00

<u>கிடைக்குமிடம்</u>

தமிழ்முழக்கம்
2/66, நூறடிச் சலை,
(தேர்தல் ஆணையம் அருகில்)
வடபழனி,
சென்னை - 600 026.




படிப்பகம்

www.padippakam.com

# மாட்டிறைச்சியுணவு

## அதன் குரல்வளை நெறிக்கப்பட்ட வரலாறு

பேராசிரியர் புனியாணி
'எக்தா' எனும் சமூக ஒற்றுமைக்கான அமைப்பின் உறுப்பினர்.

*'புனிதப் பசு: இந்திய உணவுமுறை மரபில் மாட்டிறைச்சி'* எனும் ஆழமான வரலாற்று நோக்கிலான ஆய்வு முடிவுற்று, அது புத்தகமாக அச்சேறும் நிலையிலுள்ளது. இந்நூல் அச்சில் வெளிவரக் கூடாது என நினைக்கும் சிலர் தங்களுடைய பெயர்களை குறிப்பிடாமல் தொலைபேசி மூலமாக இந்நூலாசிரியரைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தியுள்ளனர். இதனால் சில காலமாகவே மனநிம்மதியிழந்து தவிக்கிறார் இந்நூலின் ஆசிரியரான டி.என்.ஜா. இவர் தில்லிப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக பணிபுரிபவர்.

வரலாற்று ஆய்வுகளில் கடைபிடிக்கப்படும் நெறிமுறைக்கு ஏற்ப செய்யப்பட்ட ஆய்வு இது; அதிகாரப்பூர்வமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆழ்ந்த புலமையுடன் செய்யப்பட்ட ஆய்வு இது எனக் கருதப்படுகிறது. மாட்டிறைச்சி உண்ணுதல் பற்றி பொதுவாகப் பெரும்பாலோர் கொண்டுள்ள கருத்திற்கு மாறாக, இந்துத்துவ சக்திகள் மாட்டிறைச்சிக்கு எதிராக செய்துவரும் தீவிரப்பரப்புரையையும் மீறி இன்றும் கூட இந்தியர்களில் பலர் - குறிப்பாக இந்நாட்டின் மண்ணின் மைந்தர்களும் பிற மதத்தினரும் - மாட்டிறைச்சியை உணவாக உண்கின்றனர்.

இந்துத்துவ சக்திகள் பசுவிற்கு 'தாய் அந்தஸ்தை' வழங்கியுள்ளனர் என்பது பலரும் அறிந்த ஒன்று. தற்போது கேரளாவில் மட்டுமே 72 சமூகத்தினர் - இவர்களில் பலர் தாழ்த்தப்பட்டோர் அல்லர் - அதிக விலையுள்ள ஆட்டிறைச்சிக்குப் பதிலாக மாட்டிறைச்சியை விரும்பி உணவாக ஏற்றுள்ளனர். இந்துத்துவ சக்திகள் இதனை தடுக்க முயற்சித்து வருகின்றன.

### நிலைக்கத்தக்கதல்ல

முகலீம் அரசர்களால்தான் மாட்டிறைச்சியை உணவாக சாப்பிடும் முறையானது இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்ற கட்டுக்கதையை இவ்வரலாற்று ஆசிரியர் நூலின் தொடக்கத்திலேயே தோலுரித்துக் காட்டியுள்ளார். இசுலாம் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்பே இந்தியரின் உணவாக மாட்டிறைச்சி இருந்து வந்துள்ளது. ஒரு மதக்கூட்டத்தின் அடையாளமாக உணவுப்பழக்க வழங்கங்களை ஏற்க வேண்டும் என்ற வாதம் சாரமற்றது; வலிமையற்றது; நிலைக்கத்தக்கதல்ல.

ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருந்தபோது, மிருகபலியிடுதல் அவர்களின் சமூகவாழ்வில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. கால்நடைகளே பெரும் செல்வமாகக் கருதப்பட்டது. கடவுள்களின் அருளைப் பெறுவதற்காக கால்நடைகளை பலியிட்டனர். சொத்தின் மதிப்பானது கால்நடைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருந்து, வேளாண்மையே முதன்மையான தொழிலாக மாறிய காலக்கட்டம் வரை ஆரியர்களிடம் மிருகபலி வழக்கம் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை பண்டைய நூல்களிலிருந்து குறிப்பாக வேதங்களிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது.

பல்வேறுபட்ட விலங்குகளின் இறைச்சியை உண்பவர்களாக இருந்தனர் ஆரியர்கள். சிலருக்கு குறிப்பிட்ட விலங்குகளின் இறைச்சி மீது மிகுந்த நாட்டமிருந்தது. இந்திரனுக்கு எருதுவின் இறைச்சி என்றால் உயிர்; அக்னிக்கு எருதுவும் பிடிக்கும், பசுவும் பிடிக்கும். மருட்ஸ் மற்றும் அஸ்வின்ஸ் (Maruts and Aswins) ஆகியோருக்கு மாட்டிறைச்சி படையலாக வழங்கப்பட்டது. வேதங்களில் குறிப்பிடப்படும் 250 வகையிலான விலங்குகளில் குறைந்தது 50 வகையிலானவை பலிக்கும், சாப்பிடுவதற்கும் உகந்தவை என்று கருதப்பட்டன. ரந்திதேவா எனும் புகழ்மிகு அரசன் இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது. தானியங்களையும், மாட்டிறைச்சியையும் பிராமணர்களுக்கு வழங்கியதால் பேரும் புகழும் பெற்றவர் இம்மன்னர். தைத்ரிய பிரம்மன் (Taittiriya Brahman) திட்டவட்டமாக இப்படிக் கூறுகிறது: உண்மையில் பசுவே உணவாகும். பசுவின் மிருதுவான இறைச்சியே யக்னவல்கியர் மிகவும் விரும்பி உண்ணும் உணவு என்பதை பலரும் அறிவர். பின்னர் எழுதப்பட்ட பிராமணிய நூல்களும் மாட்டிறைச்சியை உணவாகக் கொண்டிருந்த உணவுமுறையை உறுதிப்படுத்துகின்றன. மனுசுமிருதி கூட உண்பதற்கு தடை விதிக்கவில்லை.

### மருந்தாக

சரக் சம்ஹிதை (Charak Samhita) நூலின் 86,87 பக்கங்களில் மருத்துவ சிகிச்சை குறித்து எழுதப்பட்டுள்ளது. பல்வேறு நோய்களுக்கு மாட்டிறைச்சியே



படிப்பகம்

www.padippakam.com

மருந்தாக கூறப்படுகிறது. சாறு (சூப்) வடிவத்தில் தயாரித்தளிக்கப்படவும் பரிந்துரைக்கப்படுகிறது. விட்டு விட்டு காய்ச்சல் வருதல், தேகம் வலுவிழத்தல், உடல் மெலிதல் போன்ற நோய்களுக்கு மாட்டிறைச்சியே நோய்தீர்க்கும் மருந்தாக வலியுறுத்தப்பட்டுள்ளது. சோர்விற்கும், கீல்வாத நோய்க்கும் மாட்டிறைச்சியின் கொழுப்பு மருந்தாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விவசாய பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து சமூகத்தின் பல மட்டங்களிலும் பரவலான மாற்றங்கள் ஏற்பட்டன. அதேபோல்தான் மிருகபலி எனும் வழக்கத்திலும் மாற்றங்களைச் செய்ய வேண்டியதாயிற்று. அந்தக் காலத்தில் மிருகபலியிடுதல் போன்ற மதச்சடங்குகளை நடத்துவதற்கு பிராமணர்கள் மட்டுமே தனியுரிமை பெற்றவர்களாக இருந்தனர். இப்பழக்க வழக்கங்களை புத்தர் எதிர்த்தார்; சாடினார். 500 எருதுகள் 500 ஆண் கன்றுகள், 500 பெண் கன்றுகள்,500 ஆடுகள் ஆகியவற்றை பலிபீடத்தின் கம்பத்தில் கட்டிப்போட்டு பலியிடும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அஸ்வமேதா, புரஸ்மேதா, வாஜபேயா போன்றவை நற்பலன் எதனையும் வழங்கவில்லை என்ற உண்மையை எடுத்துரைத்தார் புத்தர். திகா நிக்கியா (Digha Nikya) விலுள்ள கதையொன்றின்படி மகத நாட்டினில் புத்தர் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த சமயம் குட்டதந்தா (Kutadanta) எனும் பிராமணர் யாகமொன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார். 700 எருதுகள், 700 வெள்ளாடுகள், 700 செம்மறியாடுகள் ஆகியவற்றை பலியிட்டு யாகத்தை நடத்திட ஏற்பாடு செய்திருந்தார். புத்தரின் தலையீட்டால் இது தடுத்து நிறுத்தப்பட்டது. வேளாண்மைச் சமூகத்தில் உழவுத்தொழிலில் கால்நடைகளுக்குள்ள முக்கியத்துவத்தின் பின்னணியில் கால்நடைகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடாது; பலியிடக்கூடாது எனும் புத்தரின் கோட்பாட்டை புரிந்து கொள்ள வேண்டும்.

**பவுத்தத்திடமிருந்து ஆபத்து**

புத்தரின் அகிம்சைக் கொள்கையானது குருட்டுத்தனமானதல்ல; பிடிவானதுமானதுமல்ல. மாட்டிறைச்சியை அவர் ருசித்துள்ளார். பன்றி இறைச்சியை உண்டு அவர் இறந்தார் என்பது பலரும் அறிந்த ஒன்றாகும். பேரரசர் அசோகர் பவுத்தத்தை தழுவியதாலேயே மரக்கறி உணவுக்கு மாறிவிடவில்லை. அரண்மனையின் சமையலறைக்கு கொண்டுவரப்பட்டு கொல்லப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கையை மட்டுமே குறைத்தார்.

நிலைமைகள் எப்படி மாறின? நம்பிக்கைக்கும் வழிபாட்டிற்கும் மட்டுமல்லாமல் "தாய்" என்ற தகுதியை பசு எவ்வாறு பெற்றது? பவுத்தத்தின் வளர்ச்சியால் காலப்போக்கில் பவுத்தத்தை பிராமணீயம் எதிர்க்க முன்வந்தது. இதனின் தொடர்ச்சியால் மாட்டிறைச்சியை உண்ணும் பழக்கம் பல்வேறு விதமாக பார்க்கப்பட்டது. பிராமணீய மதிப்பீடுகளுக்கெதிரான பவுத்தத்தின் அச்சுறுத்தல் கடுமையாகவே இருந்து வந்தது. பிராமணீயத்தின் இறுக்கமான பிடியிலிருந்து கீழ்சாதியினர் நழுவிவிடும் அபாயத்தை தடுத்திட வேண்டி எல்லாத்தளங்களிலும் பிராமணீயம் நடவடிக்கைகளை எடுத்தது. மெய்யியல் தளத்தில், பிராமணீய மதிப்பீடுகளின் உயர்வை நிலை நாட்ட பாடுபட்டார் சங்கரர். அரசியல் தளத்தில், புஷ்யமித்திர சுங்க மன்னன் பவுத்ததுறவிகள் மீது கொடிய தாக்குதலைத் தொடுத்தார். குறியீட்டளவில், கௌதமர் புத்தராக மாறக் காரணமாக இருந்ததாகக் கருதப்பட்ட ஞானஒளி பெற்ற - அந்த போதிமரத்தை வெட்டிச் சாய்த்தார் ஷாசாங்க் அரசன் (Shashank). உழவுத் தொழிலுக்கு முக்கியமெனக் கருதப்படும் கால்நடைச் செல்வத்தை பாதுகாப்பதை பவுத்தமதம் நோக்கமாக கொண்டிருந்தமை அதனின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. ஒரு கோணத்தில் பார்க்கப் போனால், பவுத்தத்தை இந்தியாவிலிருந்து விரட்டியடிப்பதில் பிராமணீயம் "வெற்றி" பெற்றிருந்தாலும் கூட, அது தனது கருத்தியலான 'மிருகபலி' நிலையிலிருந்து மாறி, காலத்திற்கேற்ப தன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இந்த இடத்திலிருந்துதான் பசுவை தங்களது கருத்தியலின் வெற்றிக்கான சின்னமாக முன்னிறுத்தத் தொடங்கினர். அவர்களது கருத்தியல் இதை தத்துக்கு எடுத்துக் கொண்டது. புத்தரின் கோட்பாடுகள் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், பவுத்தத்திற்கு எதிராக பிராமணீயம் முன்வைத்த கருத்துக்களோ குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை; அதிகாரத்தின் மூலம் திணிக்கப்பட்டவை. எனவே, கால்நடைச் செல்வத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் சமூக மற்றும் கருணை அடிப்படையிலும் புத்தரின் கருத்தியல் அமையப் பெற்றது. ஆனால், அதற்கு எதிராகப் பிராமணர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் வெறுமனே குறியீட்டின் (சடங்கு சம்பிரதாய) அடிப்படையிலானவை. அதனால்தான் பிராமணியக் கருத்தியலின் சீடர்கள், புத்தரின் அகிம்சைக் கொள்கையால்தான் இந்தியா தன் வலிமையை இழந்தது என்று குற்றஞ்சாட்டுகின்றனர். புத்தர் பசுவை வழிபட்டவரல்ல என்பதையும், தற்போது பிராமணீயம் அர்த்தப்படுத்துகிறதே அந்தவிதமான சைவராகவும் புத்தர் வாழவில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்வது அவசியமாகும். பசுவைத் தாயாகக் கருதும் பிராமணீய நிலைபாடு படிப்படியாக இறுக்கம் பெற்றது. இருப்பினும், இக்கருத்தால் ஈர்க்கப்படாமலிருந்த கீழ்சாதியினர் எப்போதும்



படிப்பகம்

www.padippakam.com

போல் மாட்டிறைச்சியை உணவாகக் கொண்டுள்ள பழக்கத்தை தொடர்ந்தனர். புத்தரின் கொள்கைகளை ஏற்றவர்களும் மாட்டிறைச்சி உட்பட எல்லா இறைச்சியையும் உணவாகக் கருதி தொடர்ந்து சாப்பிட்டு வந்தனர். தனது நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் நிலையிலிருக்கும் மதச் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனக் கருதிய முதல் முகலாய மன்னரான பாபர், தனது மகனுக்கான ஆலோசனையாக பசுவை மதிக்குமாறும், பசுவதையை தவிர்க்குமாறும் தனது உயிலில் குறிப்பிட்டார். இந்திய தேசிய இயக்கம் எழுச்சி பெற்றதன் விளைவாக இந்துத்துவக் கோட்பாடும், அதற்கான அரசியலும் கட்டியமைக்கப்பட்டன. அதனுடனேயே பசுவதைக்கெதிரான தடை கோரும் கோரிக்கையும் உருவானது. நாடு சுதந்திரமடைந்த பிறகு ஆர்.எஸ்.எஸ். இக்கோரிக்கைக்கான மக்கள் இயக்கத்தை கட்டும் முயற்சிகளில் ஈடுபட்டது. பசுவதைத் தடை முழக்கத்தை எழுப்பிக் கொண்டிருந்தது. ஆயினும், 1980கள் வரையிலும் இதனடிப்படையில் மக்களைப் பெருந்திரளாக திரட்ட முடியவில்லை.

பசுவைத் தாயாகவும், வழிபாட்டிற்குரியதாகவும் கருதும் நபர்களின் உணர்வுகளை மதிக்கும் அதே சமயத்தில் நடுநிலையான ஆய்வுகளை மதிக்கவும் போற்றவும் வேண்டும்.

ஆனால், தங்களது அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப இம்மாதிரியான ஆய்வுகள் அமையவில்லை என்பதற்காக இவைகளை எதிர்க்கின்றன மதவெறி அரசியல் சக்திகள். பல்வேறுபட்ட கருத்துக்களை தங்கு தடையின்றி விவாதிப்பதற்கான உரிமை வெளியை (Liberal space) அழித்தொழிக்கும் முயற்சி இது. நமது சனநாயகத்தின் குரல்வளையை நெரித்து, அதனின் மூச்சை திணறடித்துக்கொல்லும் பாசிசப்போக்கின் அடையாளமிது. சில திரைப்படங்களை எதிர்த்தும், ஓவியங்களை கிழித்தும் இந்துத்துவ சக்திகள் கிளர்ச்சி செய்தனர். காதலர் தினத்தை கொண்டாடக் கூடாது என இளைஞர்களை அச்சுறுத்தினர். இன்னும் பலவிதமான மதவெறி அரசியலின் மிரட்டல்களையும் செயல்பாடுகளையும் நாம் நிறையவே பார்த்து விட்டோம். சனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் விடப்படும் இப்படிப்பட்ட சவால்களையும் ஆபத்துகளையும் எவ்வித சமரசமுமின்றி, நம் வலிமை அனைத்தையும் திரட்டி எதிர்ப்போம். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் தனிச்சிறப்பாக விளங்கும் சனநாயக உணர்வு நம் நாட்டை ஆளும் சக்தியாகத் திகழச் செய்வோம்●

மொழியாக்கம்: சிதம்பரன்.வி

இந்து 14.8.2001

## சத்துணவு மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கக் கோரி தமிழக இளைஞர் முன்னணி கண்டன ஆர்ப்பாட்டம்

செப் 5 : மயிலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தென்கொளப்பாக்கம் தொடக்கப்பள்ளியில் சராசரி மாணவர் வருகை 94க்கு மேல் இருக்க 60 மாணவர்களுக்கு மட்டுமே சத்துணவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 60 மாணவர் உணவை 94பேர் பகிர்ந்து சாப்பிடும் அவல நிலை நீடிக்கிறது. இது தொடர்பாக அதிகாரிகளுக்கு பல முறை புகார் அனுப்பியும், நேரில் முறையிட்டும், பலன் இல்லாததால், த.இ.மு., சார்பில் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



பள்ளிக்குழந்தைகளும், பெற்றோர்களுமாக, சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, நா.மணி தலைமையேற்க, முருகதாஸ் முன்னிலை வகித்தார். சு. மதியழகன், மு. செல்வம், சு. ஏழுமலை, த.சக்திவேல், ச. பழனி ஆகியோர் போராட்டத்தை விளக்கிப் பேச, த.இ.மு. தமிழகத் தலைவர் ம.பாபு, ஆசிரியர் அ. இராமலிங்கம் த.தே.பொ.க. திண்டிவனம் நகரச் செயலாளர் மு. கந்தசாமி, பேரா.பா.கல்யாணி, த.தே.பொ.க. மாவட்டச் செயலாளர் இரா. இராசேந்திர சோழன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ச.யோகநாதன் தமிழக உழவர் முன்னணி செஞ்சி வட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் க.கிருஷ்ணன் ஆகியோர் போராட்டக்காரர்களை வாழ்த்திப் பேச, திரு நா. சக்கரவர்த்தி நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்ட முடிவில் த.இ.மு. பொறுப்பாளர்கள் ஆணையரைச் சந்தித்து பேச அவர் ஒரு வார காலத்தில் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவண செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளார். நிர்வாகத்திற்கு கால அவகாசம் தந்து அதற்குப் பிறகும் கோரிக்கை நிறைவேற்றவில்லையெனில் அடுத்தகட்டமாக சாலைமறியல் போராட்டம் நடத்துவது என்ற அறிவிப்புடன் போராட்டம் முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## தடை உடைத்து
## ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

2000 மே7 அன்று சிதம்பரத்தில் நடைபெறவிருந்த ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டை தமிழக அரசு தடை செய்தது. தடையை மீறி பேரணி சென்ற திருவாளர்கள் பழ.நெடுமாறன், பெ.மணியரசன், தியாகு, அறிவுமதி, கி.வெங்கட்ராமன் உட்பட ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

தடையை எதிர்த்து திரு பழ.நெடுமாறன் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் மாநாடு நடத்துவதற்கு அனுமதி வழங்கியது. இத்தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா அரசு செய்த மேல் முறையீட்டையும் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

தடை உடைத்து மீண்டும் சிதம்பரத்தில் விருத்தாசலம் இராசு நினைவரங்கத்தில் (வி.கே.ஆர் திருமண மண்டபம், கீழவீதி) 16.09.2001 அன்று ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடும், ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பேரெழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

திரு அ.கோ. கஸ்தூரி ரங்கன் தலைமை தாங்க திரு வே.மணிவாசகன் முன்னிலை வகிக்க தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் திரு நா.அருணாசலம் ராசு அவர்களின் படத்தை திறந்து வைத்து திறப்புரையாற்றினார்.

### நூல் வெளியீடு

தோழர் பெ.மணியரசன் எழுதிய **தமிழ்த் தேசியம் இனி** என்ற நூலை திரு தா.செ.மணி வெளியிட திரு அ.கோ.கஸ்தூரி ரங்கன் பெற்றுக்கொண்டார்.

தோழர் சுப.வீரபாண்டியன் எழுதிய **உடையும் சித்திரங்கள்** என்ற நூலை திரு பழ.நெடுமாறன் வெளியிட கவிஞர் அறிவுமதி பெற்றுக்கொண்டார்.

இவ்விரண்டு நூல்களையும் சென்னை 'தமிழ் முழக்கம் பதிப்பகம்' வெளியிட்டது.

### கருத்தரங்கம்

'ஈழப்போரின் உலகத் தாக்கம்' என்னும் பொருளில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு திரு க.பரந்தாமன் தலைமை தாங்கினார். 'ஈழப்போரின் போர்க்கலைத் தாக்கம்' என்னும் பொருளில் புதுகை பாவாணன், 'ஈழப்போரும் சாதி ஒழிப்பும்' என்னும் பொருளில் பாலகுருசாமி, 'ஈழப்போராட்டத்தால் வளரும் தமிழியம்' குறித்து கவிஞர் அறிவுமதி 'ஐ.நாவுக்கு தேவை புதிய பார்வை' என்னும் பொருளில் புலவர் கலியபெருமாள் 'ஈழப்போரும் வல்லாதிக்க எதிர்ப்பும்' என்னும் பொருளில் ச.யோகநாதன் உரை நிகழ்த்தினர்.

### சிறப்பரங்கம்

புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் 'தவிக்கும் தமிழகம்' பற்றி சிறப்பரங்கத்திற்கு திரு பா.மோகன் முன்னிலை வகித்தார். 'பொருளியல் உரிமை' குறித்து தோழர் தியாகு, 'மொழிவுரிமை' குறித்து புலவர் இறைக்குருவனார், 'ஆற்றுநீர் உரிமை' குறித்து திரு அரங்க குணசேகரன் 'அரசியல் உரிமை' குறித்து பேரா.த.செயராமன், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### நிறைவரங்கம்




மாலையில் நடைபெற்ற நிறைவரங்கத்திற்கு தோழர் கி.வெங்கட்ராமன் தலைமை தாங்கினார். திரு அற்புதம் குயில்தாசன் முன்னிலை வகித்தார்.

திருவாளர்கள் பழ.நெடுமாறன், பண்ருட்டி ச. இராமச்சந்திரன், பெ.மணியரசன், தா.செ.மணி. சுப.வீரபாண்டியன், ஆ. வந்தியத் தேவன், ச.மெல்கியோர், வாலாசா வல்லவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநாட்டின் உணவு இடைவேளையில் தஞ்சை கோ.வி.கணேசன், மாங்குடி சௌந்தர்ராசன் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும், பள்ளிக் குழந்தைகளின் சாலையார் குறித்த உரை வீச்சுகளும் நடைபெற்றன.

நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்புப்படி கர்நாடகம் தமிழகத்திற்கு தண்ணீர் விட வலியுறுத்தியும், தமிழக அரசு புதிய வரைவு திட்டத்தை ரத்து செய்துவிட்டு உச்ச நீதிமன்றத்தில் தில்லி மற்றும் கர்நாடக அரசுகளை பிரதிவாதிகளாக சேர்த்து வழக்குத் தொடரக் கோரியும், இரசாயன ஆயுதங்கள் வாங்கி குவித்துள்ள சிங்கள அரசுக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் அமைப்பு மீது இந்திய அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மான அரங்கத்திற்கு மு.அந்தாலனார் தலைமையேற்க, நா.ப.ராமசாமி, சா.பேகன், புதுவை அழகிரி, தமிழ்வேங்கை ஆகியோர் தீர்மானங்களை முன் வைத்தனர்.

முன்னதாக கு.சிவப்பிரகாசம் வரவேற்றார். இறுதியில் பழமலை நன்றி கூறினார்.

காலை முதல் இரவு வரை நடைபெற்ற மாநாட்டில் குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் முடிந்தது மிகவும் பாராட்டத்தக்கது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஊர்திகளில் தமிழர்கள் திரண்டு வந்து கலந்து கொண்டது வளர்ந்து வரும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு சான்றாய் அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# அழகின் துடிப்பு

## கலைநேயக் கடிதம்

இயற்கையின் மீது தீராத காதல், மயக்கம், ஆர்வம், அக்கறை, ஈடுபாடு, அன்பு பாசம், நட்பு, காதல்... சொக்கிப் போய்விடுகிறேன், அதன் அழகில். இயற்கையின் நுட்பங்களை



அறியத் துவங்கி மலைத்துப் போய் நிற்கிறேன்.

ஒவ்வொரு செய்தியும் நுணுக்கமாகவும், நுட்பமாகவும், ஆழமாகவும் அனைத்து உயிர்களும் சங்கிலித் தொடராக ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது எனும் அடிப்படை உண்மையை பறைசாற்றிக் கொண்டே இருக்கிறது... செவியிருப்போருக்கு இது எட்டும். செவியிருந்தும் இல்லாதிருப்பவரே மிகவும் அதிக எண்ணிக்கையிலுள்ளனர். நுண்ணுணர்வற்றவர்களுக்கு அதனின் முக்கியத்துவத்தை எளிதில் உணர வைக்க இயலாது...

இயற்கை காட்சிகள் வெறுமனே அழகாக இருக்கின்றன என்று நான் சொல்ல மாட்டேன். அது வழங்கும் அறவியல் கோட்பாடும், மனித நேயமும், உயிரினை மதிக்கும் உயர்பண்பும், இயற்கையின் அதிசயங்களை சொல்லித்தரும் அறிவுக்களஞ்சியமாகவும், வார்த்தைகளால் விவரிக்க முடியாத அனுபவமாகவும் இருக்கின்றன. நான் உணர்பவைகளில் சிலவற்றையேனும் என்னால் இயன்றளவு சிலருடனாவது பகிர்ந்து கொள்ள ஆசைகொண்டுதான் நிழல்படமெடுக்கத் துவங்கினேன். (STILL PHOTOGRAPHY) பறவைகளை எடுக்க எனது கருவி போதுமானதாக இல்லை என்றறிந்தபோது உடைந்து போனேன். சமாதானப்படுத்திக் கொண்டுதான் சிறிது கால அவகாசத்திற்குப் பிறகுதான் மலர்கள், பூச்சிகள், மரங்கள், கிளைகள், காய் பழங்கள், மலைகள், மேகங்கள், பட்டாம்பூச்சிகள், அருவி, ஏரி, நீரோடை, வாய்க்கால் நில அமைப்பு (Landscape) என எதையும் விட்டு வைக்காமல் படமெடுத்தேன்... ஏற்கெனவே எனக்குள் இருந்த திரைப்பட ஆர்வமும் ஓவிய அக்கறையும் உதவியிருக்கக் கூடும். நிறைய படங்கள்; குவியலாகி விட்டன...

நான் இரசிப்பவற்றை சில நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதையும் தாண்டி மக்களிடம் எடுத்துப்போக வழி வகை உண்டா என்பதே எனது தொடர்ந்த கவலையாக இருந்து வருகிறது... வெளிநாட்டினருடன் தொடர்பு கொண்டு முயற்சிக்கலாம், ஆனால் எனக்கு அதில் அவ்வளவாக ஆர்வமில்லை. தமிழர்களுக்கு முதலில் பயன்பட வேண்டும்.

வீழ்ந்து கிடக்கும் - பல்வேறு தளங்களில் விதவிதமான ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகி, பண்பாட்டுத் தளத்தில் உருவமிழந்துபோன அடிமைப்பட்டுப்போய், அடிமைத்தனத்தையே கூட உணராதவர்களாய் வீழ்ந்து கிடக்கும் தமிழினத்திற்கு தமிழின விழிப்புணர்வுக்கு எழுச்சிக்கு அது உதவினால்தான் எனக்கு மகிழ்ச்சி கிட்டும். வளர்ந்த சமூகங்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள தெரிந்திருக்கின்றன. இயற்கைப்பற்று நமக்குத்தான் உடனடித் தேவையாய் இருக்கிறது. Ecology, Environmental Science என்பதெல்லாம் புழக்கத்திற்கு வருவதற்கு முன்பே நிலங்களை அதன் உயிரியல் குழுமங்களுடன் (Biological diversity) பகுத்தாய்ந்து பிரித்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றெல்லாம் சிறப்பு பெயரிட்டு உணர்த்தியவனின் வாரிசுதான் இன்றைய தமிழனா.........

ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் இழந்து வருகிறோம், என்னென்ன இழக்கிறோம் என்பதைக் கூட அறியாத -தெரியாத -உணராத நிலையிலேயே... சங்க இலக்கியங்கள், திருக்குறள், பாரதி, பாரதிதாசன், காசி ஆனந்தன், தமிழேந்தி,



பெருஞ்சித்திரனார், தணிகைச் செல்வன், அறிவுமதி, இன்குலாப், தமிழன்பன் போன்றோரின் நெருப்பு வரிகளையும் எனது நிழல் படங்களையும் பயன்படுத்தி நவீன முறையில் -



படிப்பகம்

www.padippakam.com

வடிவில் - வண்ணத்தில் தரமான பொங்கல் வாழ்த்துக்களை தயாரிக்க இயலுமா? நமக்கு பொருளாதார நன்மை ஏற்பட வேண்டும்; இழப்பு ஏற்படக்கூடாது. பொதுமக்கள் பலரையும் இயற்கை நேயமும், தமிழுணர்வும் சென்றடைய இது வழிவகுக்கும் என்பது என் நம்பிக்கை. விநாயகர் சதுர்த்தி, ஆயுத - சரஸ்வதி பூஜை, சிவ ராத்திரி, தீபாவளி போன்ற எண்ணற்ற பண்டிகைகள் தமிழனை நிலைகுலையச் செய்து கொண்டே இருக்கின்றன. போதாதற்கு இப்போது வடநாட்டுப் பண்பாட்டுப் படையெடுப்புகள் ஹோலி, ராக்கி, இந்தி திரைப்படங்கள் இத்யாதி. எனவே, இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை மிகைபடக் கூற முடியாது....

முன்பெல்லாம் தமிழரை முதற்கட்டமாக பண்பாட்டளவில் உளவியல் அடிப்படையில் மீட்டெடுக்கும் முயற்சியாக பொங்கல் திருநாளை பெரியாரும் திராவிடர் இயக்கமும் வற்புறுத்தினர்; மறுமலர்ச்சிக்கு வழிகோலியது. இப்போதோ பார்ப்பனியம் உலகமயமாதலுடன் கைகோத்து தமிழனின் அடையாளங்களை இயன்றவரை அழித்து வருகிறது. எனவேதான் இதனின் அவசியம் கருதி உங்களது உதவியை கோருகிறேன்.

வடிவமைப்பு, அட்டை, காகிதம், எழுத்து வடிவம், வண்ணங்கள், மொத்த கட்டமைப்பு என எல்லாவற்றிலும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். இயற்கை நேயமும், தமிழனும், பொங்கலும், தமிழும் வெவ்வேறானவை அல்ல. ஒன்றுடன் மற்றொன்று பின்னிப் பிணைந்துள்ளது. அச்சு விந்தைகள் பலவும் நாளும் தொடர்கின்றன●

- சிதம்பரன்.கி
வழக்குரைஞர்
ஈரோடு.

## பி.ஜே.பி.இன் மதவெறிப் பாசிசத்திற்கு எதிராக பொதுக்கூட்டம்

விநாயகர் ஊர்வலம் என்ற பெயரில் இந்து மதவெறியை தூண்டுகிற ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிசத், சிவசேனா, பஜ்ரங்தள், இந்து முன்னணி மற்றும் அவற்றின் அரசியல் முகமான பி.ஜே.பி உள்ளிட்ட சங் பரிவார அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கண்டித்து மதுரை மீனாட்சிபுரம் அருகில் ஆகஸ்ட் 20 அன்று பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவீரன் பகத்சிங் பாசறை சார்பாக நடைபெற்ற இக் கூட்டத்தில் தோழர்கள் சி. காமராசு (த.தே.பொ.க) மு.பித்தன் (தந்தை பெரியார் திராவிடர் கழகம்) இருளாண்டி (தமிழ் தமிழர் இயக்கம்) அரி (பகத்சிங் பாசறை) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## தியாகி என். வெங்கடாசலம் 24ம் ஆண்டு நினைவு நாள் பொதுக்கூட்டம்

தஞ்சை ஒன்றியம் வல்லம் பகுதியில் 21.09.2001 அன்று வல்லம் அண்ணா சீரணி அரங்கத்தில் தோழர் பி.முருகையன் (ஒன்றியச் செயலாளர்) தலைமையில் தோழர் என்.வி. நினைவுநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பெ.மணியரசன் (பொதுச்செயலாளர் த.தே.பொ.க.), மற்றும் திரு சூரெத்தினசாமி (தேனி மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர்) சிறப்புரையாற்றினர். தோழர் க.பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர் த.தே.பொ.க.), நா.வைகறை (பொதுச் செயலாளர், த.இ.மு.), பழ. இராசேந்திரன் (நகரச் செயலாளர், த.தே.பொ.க.), குழ.பால்ராசு (பூதலூர் ஒன்றியச் செயலாளர்), ஆ.சண்முகம் (மாவட்ட செயற்குழு), தெ.காசிநாதன் (தமிழக உழவர் முன்னணி அமைப்பாளர்), வே. தனசேகரன் (ஒன்றியத் தலைவர் த.இ.மு.), கு.முனியமுத்து (ஒன்றியச் செயலளர் த.இ.மு.) ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். தோழர் தமிழ்ச் செல்வன் நன்றியுரை கூற கூட்டம் சிறப்பாக முடிந்தது.

## தந்தை பெரியார் குறித்த விவாத அரங்கம்

தந்தை பெரியார் திராவிடர் கழகம், சிந்தனையாளர் மன்றம் ஆகிய அமைப்புகள் சார்பில் தஞ்சையில் 23.09.2001 அன்று தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவையொட்டி விவாத அரங்கம் நடைபெற்றது.

தோழர் பெ.மணியரசன் (பொதுச்செயலாளர், த.தே.பொ.க.) 'த.தே.பொ.க. பார்வையில் தந்தை பெரியார்' என்ற பொருளில் விவாதத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்களின் வினாக்களும், பெ.ம.வின் பதில்களும் விவாத அரங்கத்தை மேலும் சிறப்பாக்கியது. திரு செகதீசன் தலைமையில் நடைபெற்ற இவ்வரங்கத்தில் தொடக்க நிகழ்ச்சியாக தோழர் அ.மார்க்ஸ் எழுதிய 'பெரியார்?' என்ற நூலை ஆய்வு செய்து திரு குப்பு.வீரமணி உரையாற்றினார்.

முன்னதாக பசு.கவுதமன் வரவேற்றார். இறுதியில் தோழர் மணிவண்ணன் நன்றியுரை கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதமா? அது எங்கேயிருக்கிறது?

- கவிஞர் தஞ்சைவாணன் துரை.சீனிவாசன்

மதங்கள் - கிறித்துவம், இசுலாமியம், சீக்கியம், பௌத்தம், சைனம் என்பனவாய் இருக்கின்றன. இவற்றிற்குக் கொள்கை, கோட்பாடு, தோற்றுவாய், வழிபடு நெறிமுறைகள் கொண்ட புனித நூல்கள் தனித்தனியே உண்டு. அவற்றின்படி உண்டியிலிருந்து உறவுமுறை வரை, நித்திய நடைமுறைகளில் அந்தந்த மதத்தினரிடையே நிறைந்த சமத்துவம் நிலவுகிறது.



மனிதராய்ப் பிறந்து மாணிக்கங்களாய்ப் பரிணமித்த மகான்களே இம்மதங்களின் தோற்றுவாயாக இருக்கக் காண்கிறோம். அவர்கள் இயேசு கிறிஸ்து, முகம்மது நபி, குருநானக், கௌதம புத்தர், மகாவீரர் ஆகியோர் இதன்படி 'இந்துமதம்' என்று சொல்லப்படும் இதற்குத் தோற்றுவாயான மகான் உண்டா என்று பார்ப்போம். இதைத் தோற்றுவித்த மனிதர்களுள் மாணிக்கமாய்ப் பரிணமித்த மகான் யார்? இதன் கொள்கை, கோட்பாடு, வழிபடு நெறிமுறைகள் கொண்ட ஒரு புனித நூல் எது? என்றால் எதுவும் இல்லை. இந்து மதம் என்று சொல்லித் திரிவோரிடையே நித்திய நடைமுறைகளில் சமத்துவம் நிலவுகிறதா என்றால் அதுவும் இல்லை; சாதிகளைப் புகுத்தி, வர்ணாசிரமப் படிக்கட்டில் நிறுத்தி, அதன்படி பார்ப்பனரை மேலாக்கி மற்றவர்களைப் படிப்படியாய்க் கீழாக்கி, ஒருவரொடு ஒருவர் ஒட்டாமற் செய்கிறது 'இந்து மதம்'. மேலும். மேற்கூறியபடி மதங்களுக்குரிய அறிகுறிகள் எதுவும் இல்லாமல் 'மதம்' என்று சொல்லி மார்தட்டிக் கொள்வதால் மட்டும் 'இந்து மதம்' எனும் இது மதங்களுக்குரிய நிலைகளில் எதையும் கொண்டுள்ளதாகக் கொள்ள முடியாது. மேலே கூறிய மதங்கள் எதிலும் இல்லாதவர்களெல்லாம் இந்துக்கள் என்று கூறிக்கொள்ளும் இதன் போக்கும் ஏற்கக் கூடியதாய் இல்லை. எனவே, இது ஒரு 'மதம்' அன்று. பார்ப்பனர் தாம்வாழத் திட்டமிட்டுப் படைத்துக் கொண்ட கட்டமைப்பேயாகும்.

இந்நிலையில், மக்கள் அறிவும், தெளிவும் இன்றித் தம்மை 'இந்து' என்று சொல்லிக் கொள்வதும், தாமே வலியச் சென்று மேல் - கீழ் இழிநிலையை ஏற்றுக் கொள்வதும் ஏனோ?

இன்னும், பார்ப்பனர்களால் எள்ளியொதுக்கப்பட்ட நாலாம் சாதியெனும் வர்ணாச்சிரமக் கீழ்த்தட்டு மக்களின் உழைப்பும், பணமும் கொண்டு, கற்பனைக் கடவுள்களின் பெயரால் எழுப்பப்படும் எண்ணிறந்த கோயில்களில் பார்ப்பனரே ஆதிக்கமும், வேலை வாய்ப்பும் பெற்று வாழ்கின்றனர். பணமும், உழைப்பும் தந்து 'கோயில்கள்' எனும் "பார்ப்பன ஆதிக்கக் கோட்டைகளை" - தமிழ்நாட்டில் மட்டும் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ளன. இவைகளை கட்டிக் கொடுத்துவிட்டு, தீண்டப்படாதவர்களாய், பார்ப்பனர் வாழ்வுக்கு பக்கபலமான அடிமைகளாய் வெளியில் நின்று அல்லற்படும்படி செய்திருப்பதுதான் 'இந்து மதம்' என்று சொல்லப்படும் பார்ப்பன ஆதிக்க நிலைப்பாடாகும்.

இந்நிலை கண்டு வருந்திய பாரதிக் கவிஞர்

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் - பல்
லாயிரம் 'வேதம்' அறிவொன்றே தெய்வம் என்று
அறைந்திடல் கேளீரோ?"

என்று பாடியதுடன், மேலும்

"மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங்கதைகள் சேர்த்துப் - பல
கள்ள மதங்கள் பரப்புதற்கோர்மறை
காட்டவும் வல்லீரோ?"

என்றும் கேட்டுப் பார்ப்பனரின் பகட்டை அம்பலப்படுத்தியுள்ளார். பாரதியார், மேலும் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே, அது வந்தால் மனித வாழ்வு மலரும், சமத்துவ நிலை வரும் என்று எண்ணி மகிழ்ந்து ஆனந்தப் பள்ளுப் பாடினார் கீழ்க்கண்டவாறு:

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே!
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும் காலமும் போச்சே!"

என்று பாடிய பாரதிக் கவிஞன் வாக்கையும், அரசியல் சட்ட நெறியையும் அலட்சியப்படுத்தும் நிலை இனிமேலும் இருக்க விடாமல் 'இந்து மதம்' என்ற பார்ப்பனச் சூழ்ச்சிக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டுத் தமிழரெலாம் ஒன்றுபடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

சுதந்திரம் கிடைத்து ஆண்டுகள் ஐம்பத்து நான்கைக் கடந்த பின்னும் அந்தச் சரி நிலையை, சமத்துவப் பெருநிலையை இந்தியச் சனநாயகக் குடியரசு இன்று வரை மக்களுக்கு அளித்தபாடில்லை; மாறாக 'இந்து' வெனும் பார்ப்பன வர்ணாச்சிரமப் படிக்கட்டு ஏற்றத் தாழ்வு இழிநிலை, தொண்ணூறு சதவீதத்திற்கு மேற்பட்ட நம் மக்களை தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி, நசுக்க இடம் கொடுத்துள்ளது.

மேலும், பார்ப்பனரைத் தவிர மற்றவர்கள் அர்ச்சகர்ப் பணி செய்தால் கற்சிலைக் கடவுளும் காறைக்கட்டு கோயில்களும் தீட்டாகி விடும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறது நடுவணரசு.

பிறப்பால் உயர்வு, தாழ்வு உண்டென்னும் பார்ப்பனச் சுயநலக் கொள்கையினையும், கற்பனைப் புராணக் கதைகளையும் நீக்கிவிட்டால் இந்துமதம் என்பது ஏது?

இதற்குச் செயலூக்கம் தரவே சோதிடத்தையும், புரோகிதத்தையும் திட்டமிட்டுக் கல்லூரிப் பாடத் திட்டத்தில் விஞ்ஞானப் பாடம் என்ற பெயரில் (பி.ஜே.பி.) நடுவணரசு புகுத்தியிருக்கிறது. உலக விஞ்ஞானிகளால் ஒப்புக் கொள்ளப்படாத இவை எப்படி விஞ்ஞானம் ஆக முடியும்? ஆயினும் இதற்குப் பக்கபலமாக இராச்திரிய சுயம் சேவக்சங் (ஆர்.எஸ்.எஸ்.) விச்வ இந்துப் பரிசத் (வீ.ஹெச்.பி.)., பச்ரங்தள் (பீ.டீ.) ஆகிய இந்துத்துவ வெறிகொண்ட அமைப்புகள் நிற்கின்றன.

வளரும் இளந்தலைமுறையினரை மூடர்களாக்கி, இந்துத்துவக் கோட்பாட்டையும், சமஸ்கிருத மொழியையும் திணித்து, நிலை நிறுத்தி, பல இன, பலமொழி மக்கள் வாழும் துணைக் கண்டம் என்று பெயர் பெற்ற இந்திய நாட்டை சமஸ்கிருத மொழிப் போர்வையில் சுருட்டத் தன்னலம் பாராட்டும் திட்டமே இது.

பொறுமை ஒருநாள் புலியாகும்
பொய்யும் புரட்டும் பலியாகும்!

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## காவிரி நீர் உரிமை மீட்க செய்ய வேண்டியது என்ன?

### தமிழக இளைஞர் முன்னணி
### விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள்

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புப்படி கர்நாடக அரசு காவிரியில் நீர் விட மறுத்து வருகிறது. சுமார் 4½ இலட்சம் ஏக்கரில் குறுவை பயிர் கருகும் நேரத்தில் கூட காவிரி ஆணையத் தலைவரான பிரதமர் வாஜ்பாய் கர்நாடக அரசை வலியுறுத்தி தமிழ்நாட்டு உரிமையை பாதுகாக்கவில்லை. தமிழக முதல்வர் செயலலிதாவோ காலம் கடந்து கடிதம் எழுதி அக்கறையற்று செயல்பட்டார்.

வாஜ்பாயோடு ஒப்பந்தம் போட்டு காவிரி உரிமையைக் காவுக்கொடுத்த கருணாநிதியோ தமிழக விவசாயிகள் மீது அக்கறை இல்லாமல் லாவணி அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார். சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகளோ தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் மேட்டூரிலிருந்து கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடு என்றும், தென்னக நதிகளை இணைக்க வேண்டும் என்றும் திசை மாற்றி நாற்காலி அரசியல் நடத்துகின்றன.

கர்நாடக அரசை மிரட்டி பணியவைத்து தான் காவிரி உரிமையை மீட்க முடியுமே தவிர உரிமைகளை எப்பொழுதும் கெஞ்சி பெறமுடியாது. 'காவிரி நீர் தர மறுக்கும் கர்நாடகத்திற்கு நெய்வேலி, கல்பாக்கம் மின்சாரம் அனுப்பாதே!' "காவிரி நீர் தர மறுக்கும் கர்நாடக அரசு மீது பொருளாதார தடை விதி!"

'காவிரி என்ற ஒரு இயற்கை வளத்தை பாதுகாக்க முன் வராத தில்லி அரசே நரிமணம் பெட்ரோலை எடுக்காதே' என்பது போன்ற முழக்கங்களை முன் வைத்து த.இ.மு. சார்பில் விளக்கத் தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றன.

**பூதலூர் ஒன்றியம்**

11.09.2001 அன்று செங்கிப்பட்டியில் தோழர் க. காமராசு (ஒன்றியச் செயலாளர், த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற விளக்கத் தெருமுனைக் கூட்டத்தில் தோழர்கள் இராசேந்திர சோழன் (தலைமைச் செயற்குழு த.தே.பொ.க.) நா.வைகறை (பொதுச் செயலாளர் த.இ.மு.) குழ. பால்ராசு (பூதலூர் ஒன்றியச் செயலாளர் த.தே.பொ.க.) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

குரும்பூண்டி தோழர் சேகர் நன்றி கூறினார்.

**தஞ்சை**

நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள பிலோமினா நகரில் 12.9.01 அன்று தோழர் இரா.சு.முனியாண்டி (நகரச் செயலாளர், த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் இராசேந்திர சோழன், நா.வைகறை, பழ.இராசேந்திரன் (நகர செயலாளர், த.தே.பொ.க.) தெ. காசிநாதன் (அமைப்பாளர், தமிழக உழவர் முன்னணி) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தோழர் சோமு (நகரக்குழு, த.இ.மு.) நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# பாரத மாதா பஜனையில் பட்டினிச் சாவுகள் முகாரி

- பரிமநல்வன்

பாரத நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து விட்டது. படை பலத்தில் உலகின் நான்காவது மிகப் பெரிய ராணுவமாகத் திகழ்கிறது. தொழில் நுட்பத்தில் வல்லரசு நாடுகளுக்கு இணையாக வெற்றிகரமான அணு வெடிப்பு சோதனை நிகழ்த்தி சாதனை படைத்திருக்கிறது. பல்வேறு வகைப் பண்பாடு, நாகரிகம், மதம் கொண்ட மக்களிடையே 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் கோட்பாடு அடிப்படையில் முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோட்டு வருகிறது. கடந்த 12.10.2001 அன்று கூட ஆப்கான் அகதிகளுக்காக 10 கோடி டாலர் உணவு பொருட்கள் உதவி வழங்க முன் வந்துள்ளது. இது வெல்லாம் பாரத மாதா பஜனையில் பாடப்படும் "கீர்த்தனங்கள்"

எனில், இதே 'பாரத' நாட்டில் தான் கடந்த ஆண்டுகளில் நாடெங்கும் பட்டினிச் சாவுகள் மகாராட்டிரம், குஜராத்தில் பருத்தி, பருப்பு விவசாயிகள், ஆந்திராவில் கைத்தறி நெசவாளிகள், இந்த ஆண்டு ஒரிசாவில் மலை வாழ் பகுதியினர் என நூற்றுக் கணக்கில் மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக ஒரிசா மாநிலம் ராயகடா மாவட்டம் காசிப்பூர் மலைக் கிராமங்களில் மட்டும் சுமார் 75பேர் பட்டினிச் சாவுகளுக்கு பலியாகியுள்ளனர். இதில் பித்தாஜோடி என்னும் ஒரே ஒரு கிராமத்தில் மட்டும் எட்டு உயிர்கள் பிரிந்துள்ளன.

இந்த காசிப்பூர் மலைப் பகுதியில் சுமார் நானூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. எல்லாம் பல கிலோமீட்டர் இடைவெளிகளில். இக்கிராமங்களுக்குச் சென்று வர ஒழுங்கான பாதைகள் கிடையாது. இத்தனை கிராமங்களுக்கும் காசிப்பூரில் உள்ள ஒரே ஒரு மருத்துவமனைதான் நலவாழ்வுக்கு. இப்பகுதிக்கு உள்ளதோ மூன்றே மூன்று பள்ளிகள் மட்டுமே. பள்ளிக்கோ மருத்துவ மனைக்கோ வரவேண்டுமானால் கிராம மக்கள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து வர வேண்டும். வந்தாலும் பணியில் யாரும் இருக்கமாட்டார்கள். பணியாளர்களோ ஆசிரியர்களோ பத்துப் பதினைந்து நாளைக்கொரு முறை வந்து கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு முதல் தேதி ஊதியம் வாங்கிக் கொண்டு போவதோடு சரி.

பகுதி மக்களுக்கு நிலையான வேலையோ வருவாயோ கிடையாது. மலைப்பகுதியில் சிறு விவசாயம், ஆடு மாடு வளர்த்தல், இவைகளே தொழில். மழைக்காலங்களில் குடிசைகளிலேயே அடைந்து கிடக்க வேண்டியதுதான். கோடைக் காலங்களில் மாங்கொட்டைகளைச் சேகரித்து இடித்து மாவாக்கி வைத்துக் கொண்டால் அதைக் கஞ்சியாகக் காய்ச்சி குடித்து கொண்டு உயிர்வாழ வேண்டிய நிலை. ஜூன் முதல் செப்டம்பர் வரை இதே நிலைதான்.

இப்படிப்பட்ட வாழ்நிலையில் மாங்கொட்டை கஞ்சி குடித்தே பலபேர் இறந்திருக்கிறார்கள். இச்சாவுகள் திக்ரி, கடியபோடா, பன்சுகுடா, பில்லாமல்லி என பல கிராமங்களுக்குத் தொடர்ந்திருக்கின்றன.

இறப்பதற்கு முன் வயிற்றுப் போக்காலும் வாந்தியாலும் துடிக்கும் மக்களை என்ன செய்வதென்று புரியாமல் காசிப்பூர் மருத்துவமனைக்கு கொண்டுவர அங்கே அவர்கள் இறக்கவும், இக்கிராமங்களில் திக்ரி என்பது மட்டும் சாலையோரமாக இருந்து அங்கு ஆறுபேர் இறந்த செய்தி மாவட்டத் தலைநகர் ராயகடாவுக்கு எட்டவும் தான், இப்பட்டினிச் சாவுகள் பற்றிய செய்தியே வெளியுலகத்திற்குத் தெரியவந்துள்ளது.

தொடக்கத்தில் காசிப்பூரிலிருந்து கிராமங்களுக்கு வந்து மருத்துவர், பிணங்களைக் கட்டிலில் தூக்கிப்போட்டு திறந்த வெளி அறுவை சிகிச்சை செய்து, சாவுகளுக்கு மாங்கொட்டை மாவுதான் காரணமென்று அறிக்கை தந்தாலும், அதிகாரிகள், இப்பட்டினிச் சாவுகளை மூடிமறைக்கவே முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் அதற்குள் செய்தி பத்திரிக்கைகளுக்கு எட்டி, பல்வேறு இதழ்களைச் சார்ந்த பத்திரிக்கையாளர் குழு ஹெலிகாப்டரில் இப்பகுதிக்கு வந்து இறங்கி செய்திகளை வெளிக்கொணர்ந்திருக்கிறது. அதன்பிறகே அரசு இயந்திரங்கள் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றன.

அப்போதும் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்? "நாங்கள் அரிசி தருகிறோம் கோதுமை தருகிறோம். ஆனால் இம்மக்கள் மாங்கொட்டையின் மேல் உள்ள மோகம் காரணமாக எங்களுக்குத் தெரியாமல் அதை ஒளித்து வைத்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனாலேயே சாவுகள் நேர்கின்றன" என்கிறார்கள்.

ஆனால் உண்மையில், ஒருசில சாலையோர கிராமங்கள் தவிர பல



படிப்பகம்

www.padippakam.com

கிலோமீட்டர் உட்புறம் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு அரிசி, கோதுமை கொண்டு செல்லவோ, நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, மேலும் பட்டினிச் சாவுகள் பரவாமல் தடுக்கவோ அதிகாரிகள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட சூழலில்தான் இந்த ஆண்டு ஜுலை மாதம் மக்கள் சிவில் உரிமைக் கழக அமைப்பு உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தொடுத்தது. இந்தியா முழுக்க இப்படி நேர்ந்து கொண்டிருக்கும் பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிறுத்த உச்சநீதிமன்றம் தலையிட்டு உடனடியாய் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே வழக்கின் கோரிக்கை.

அரசமைப்புச் சட்டவிதி 21 இன்படி உயிர் வாழும் உரிமையை உறுதி செய்யக் கோரி வழக்கு தொடுக்கப்பட்டது.

மக்கள் சிவில் உரிமைக் கழகம் தாக்கல் செய்திருந்த வழக்கில் உயிர்வாழும் உரிமை என்பது உணவு பெறும் உரிமையையும் உள்ளடக்கியதுதான். ஒருவர் அவருக்குரிய உணவை சாப்பிட்டால் தானே உயிருடனேயே இருக்க முடியும். அந்த உணவு அவருக்குக் கிடைக்காமல் போனால் அல்லது மறுக்கப்பட்டால் உயிர் வாழும் உரிமை எங்கே பாதுகாக்கப்படும்? எனவே உச்சநீதிமன்றம் தலையிட்டு, உணவை பெறமுடியாதவர்களுக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்வதன் மூலம் இந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரியிருந்தது.

வழக்கை அனுமதித்த உச்சநீதிமன்றம், வழக்கை நீதிபதிகள் பி.என்.கிர்பால், சந்தோஷ் ஹெக்டே, பிரிஜேஷ்குமார் ஆகிய மூவர் அடங்கிய பெஞ்சுக்கு அனுப்பியது. இந்த பெஞ்ச் ம.சி.உ.க சார்பில் வழக்காடிய வழக்கறிஞர் செசில் கன்சால்வ்ஸ் இன் வாதங்களை ஏற்று, உயிர்வாழும் உரிமை என்பது உணவு பெறும் உரிமையையும் உள்ளடக்கியதுதான் என்பதை அங்கீகரித்து மத்திய உணவுக் கிடங்கில் உள்ள தானியங்கள் உரியவாறு மக்களுக்குக் கிடைக்கச் செய்வது மாநில அரசுகளின் அடிப்படைக் கடமை என வலியுறுத்தியது. இதனடிப்படையில் ஆகஸ்டு 20 அன்று அரசுகளுக்கு அறிவிக்கைகளையும் அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அத்துடன் எந்த ஒரு மனிதனுக்கும் அவனிடம் காசு இல்லை என்கிற காரணத்துக்காக உணவு பெறும் உரிமையை மறுக்கக் கூடாது, அந்த உணவை இலவசமாகவே வழங்க நேர்ந்தாலும் கூட, அப்படிச் செய்தே அம்மனிதனின் உயிர்வாழும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறியது.

இத்தீர்ப்பும் நடவடிக்கைகளும் ஒருபுறமிருக்க, இப்பிரச்சினை குறித்து வேளாண் அறிவியல் அறிஞர் முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் கடந்த ஆகஸ்டு 27ஆம் நாள் சென்னையில் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்துத் தெரிவித்த கருத்துக்களும் ஆழ்ந்த கவனத்திற்குரியன. (பசுமைப்புரட்சி என்ற திட்டத்தின் மூலம் உருவான பாதிப்புகளுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் பொறுப்பேற்க வேண்டும் என்பது வேறு செய்தி).

அவர் கூறியதாவது:

மத்திய உணவுக் கிடங்குகளில் 6 கோடியே 50 லட்சம் டன் உணவு தானிய இருப்பு உள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இப்படி ஒருபுறம் கிடங்குகளில் உணவு தானியங்கள் தேங்கிக் கிடப்பதும், பட்டினிச் சாவுகள் நடப்பதுமான அவலம் ஏன் நிகழ்கிறது?

அரசு இயந்திரங்களின் நிர்வாகக் கோளாறும் மெத்தனப் போக்குமே இதற்குக் காரணம். அவ்வப் பகுதிகளிலும் உணவுக்கு வேலைத்திட்டத்தை உரிய முறையில் செயலாக்கியிருந்தால் இந்த அவலம் நேர்ந்திருக்காது.

தவிர உணவு தானிய சேமிப்பிலும், விநியோகத்திலும் அதிகாரப் பரவல் இருக்க வேண்டும் அல்லாமல் ஒரு நிர்வாகம் எல்லா உணவு தானியங்களையும் வாங்கிக் குவித்து சேமித்துக் கொண்டிருப்பது என்பது தேவையற்றது. இதற்கு அவ்வப்பகுதியிலும் சமுதாய உணவு தானிய வங்கிகள் (Community Grain Banks) ஏற்படுத்தப்பட வேண்[illegible] இவ்வங்கிகள் பகுதி மட்ட[illegible] அமைக்கப்படும் உணவு தானிய [illegible] குழுக்கள் ( Food Grain C[illegible] தன்னுதவிக் குழுக்கள்( Se[illegible] Groups ) மூலம் நிர்வகி[illegible] வேண்டும். இந்நிர்வாகம் கீழ்வரு[illegible] செயல்பட வேண்டும்.

இக்குழுக்கள் பஞ்சம் நிலவுகிற இடத்திற்கு முன்னுரிமை தந்தும், அடுத்து பாதிப்பிற்குள்ளாகியிருக்கும், மக்கள் பிரிவினரைத் தனித்து அடையாளம் கண்டும், அதாவது கைக் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், பள்ளி வயதை அடையாத குழந்தைகள், முதியோர் என இவர்களுக்கு முக்கியத்துவம் தந்து செயல்பட வேண்டும். இதில் ஒன்றிய அரசு தானியக் கிடங்குகளைப் பராமரிக்கிறது என்கிற வகையில் துணை அமைப்பாகச் செயல்படலாமே தவிர நிர்வாகத்தில், விநியோகத்தில் நேரடியாகத் தலையிடக் கூடாது.

இப்படிப்பட்ட அதிகாரப் பரவல்மூலம் போக்குவரத்துச் செலவைக் குறைத்தல், ஊழல் நடவடிக்கைகளைக் குறைத்தல், பகுதி பிரச்சினையின் தன்மையையும், சூழலையும் உணர்ந்து அதற்குத்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் பருவநிலை, விளைச்சல் சுழற்சி இவைகளுக்கேற்ப சேமிப்பையும் விநியோகத்தையும் திட்டமிடல் அனைத்தும் சாத்தியப்படும்.

குறையுணவு மட்டத்தில் வாழ்ந்துவரும் உலகிலுள்ள மொத்தக் குழந்தைகளில் பாதி அதாவது 50 விழுக்காடு இந்தியாவிலேயே உள்ளன. 30 விழுக்காட்டுக் குழந்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

பிறவியிலேயே எடைக் குறைவாகப் பிறப்பதால் போதுமான மூளை வளர்ச்சியின்றி அறிவுத்திறன் குறைந்தவைகளாகவும் உள்ளன. இவைஎல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் உணவு விநியோகத்தில் உள்ள குறைபாடுதான்.

சத்துணவு குறித்த ·வதேசமாநாடு சமீபத்தில் ன்னாவில் நடைபெற்ற போது அவர் னார் உணவு தானியம் உலக ் உபரியாகவே இருக்கிறது தவறான மதிப்பீடு. மக்கள் ான அளவு அவற்றை வாங்கிப் படுத்த முடியாததனாலேயே அப்படி ஒரு தோற்றம் தருகிறது. எல்லோரும் அவற்றை உரிய அளவு பயன்படுத்தும் போதே இதன் பற்றாக்குறை தெரியும். எனவே இதை உபரி உற்பத்தி என்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

உச்சநீதிடின்றத் தீர்ப்புடன் முனைவர் சுவாமிநாதன் தெரிவித்துள்ள இந்த ஆலோசனைகளும் கவனிக்கத் தக்கவை. இப்படிப்பட்ட ஆலோசனைகளை வழங்கி விடுவதாலோ, அல்லது உச்சநீதிமன்ற நடவடிக்கை களாலோ பிரச்சினை உடனடியாக தீர்ந்துவிடும் என்றோ, இதுவே பிரச்சினைக்கு உரிய மாற்று என்றோ நாம் சொல்வதாகப் பொருள் கிடையாது.

உற்பத்தி, விநியோகம் இரண்டும் பெரிதும் சமூகந்தழுவியதாக, சமுதாய அமைப்பின் கட்டுப்பாட்டில் இயங்குவதாக இருக்க வேண்டும். இங்குள்ள சமூக அமைப்பிற்கேற்ப சோஷலிச நோக்குடன், மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்த வேண்டும்.

எம்.எஸ்.சுவாமிநாதன் குறிப்பிடுவது போல், உணவுப்பொருள் கொள்முதல் மற்றும் விநியோகம் இரண்டும் தில்லி அதிகாரத்தின் கீழ் மையப்படுத்தப்படாமல் மாநில அளவில் மற்றும் வட்டார அளவில் பரவலாக்கப்படவேண்டும்.

இன்றைக்கு குசராத்தில், மகாராட்டிரத்தில், ஆந்திரத்தில், ஒரிசாவில் நேர்ந்துள்ள பட்டினிச் சாவுகள் நாளை தமிழகத்தையும் தாக்காது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. தில்லி அரசின் தாராளமய மாக்கல், பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம், உள்ளூர் உற்பத்தியின் மீது தாக்குதல், காவிரி நீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு சூழல்கள் நாளை தமிழகத்தையும் தாக்கி, தமிழகத்திலும் பட்டினிச்சாவுகள் நேரலாம். எனவே இந்த ஆபத்தை யுணர்ந்து வருமுன் காக்கும் வழி வகைகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

தேசிய இனங்கள் தன்னுரிமை பெறுவதுதான் உணவு வழங்கலை உள்ளூர் மட்டத்தில் ஒழுங்குபடுத்தி, பட்டினிச்சாவுகளைத் தடுக்கும். நாம்கோரும் தமிழ்த் தேசப் தன்னுரிமை சமதர்ம (சோசலிச) நோக்கிலானதாக இருப்பதால், பட்டினிச்சாவுகள் நேராமல் உறுதி செய்ய முடியும். பாரதமாதா பஜனை பட்டினிச்சாவுகளால் எழும் அழுகை ஒலியை அழுத்தப்பார்க்கிறது●

## மணமக்களுக்கு வாழ்த்து

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் மயிலம்,* **இல.ஏழுமலைக்கும்** *விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம் குச்சிப்பாளையம்* **இரா.சுகுணாவுக்கும்** *29.08.2001 அன்று காலை மயிலம் சிங்காரவேலர் மண மண்டபத்தில், தோழர் இராசேந்திரசோழன் தலைமையில் திருமணம் நடைபெற்றது.*

*தோழர்கள் பா. கல்யாணி, மு.கந்தசாமி, ம.பாபு உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதியாக ரூ.250/- தரப்பட்டது*

*மணமக்கள் நீடுழி வாழ்க!*

★★★

*தஞ்சை நகரம் வடக்கு வாசல் பகுதி த.தே.பொ.க. தோழர் சுந்தரராசன் அவர்களின் தம்பி* **இராசமாணிக்கம்** *- செல்வி* **வி.கலையரசி** *ஆகியோரின் இல்வாழ்க்கை ஒப்பந்த விழா 5.9.2001 அன்று சேலம் எம்.எஸ். ரவிக்குமார் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் பெ.மணியரசன் (பொதுச்செயலாளர், த.தே.பொ.க.) க.பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர் த.தே.பொ.க.) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.*

*மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதியாக ரூபாய் 500.00 வழங்கப்பட்டது.*

*மணமக்கள் நீடுழி வாழ்க!*

★★★

*திருத்துறைப்பூண்டி நகர த.தே.பொ.க. செயலாளர் தோழர்* **ப.பழநிகுமாருக்கும்** *திருத்துறைப்பூண்டி வட்டம் த. கீழக்காடு திரு சேப்பன் அவர்கள் புதல்வி* **சே.பஞ்சவர்ணத்திற்கும்** *இல்வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் பெ.மணியரசன் தலைமையில் 14.09.2001 அன்று மிகச் சிறப்பாக திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது.*

*மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதியாக ரூபாய் 500.00 வழங்கப்பட்டது.*

*மணமக்கள் நீடுழி வாழ்க!*



படிப்பகம்

www.padippakam.com



# கவிதை

- கு.இராமகிருட்டிணன்

## அவலம்

☆ பலகட்டப் பேச்சுவார்த்தை
பலனேதும் இல்லை
விவகாரத்து என்றாலோ
வில்லங்கமாய்ப் பேசுவார்கள்

☆ இல்ல
இறையாண்மை
இருளடைந்து போகுமென
ஏசுவார்கள்

☆ ஒத்துவராவிட்டாலும்
ஒட்டுறவாய் வாழவேண்டும்

☆ அதிகாரம்
அனைத்தும்
அவன் கையில்
ஆனால்
அழகாய் பேசுவார்கள்
அர்த்தமற்ற சமத்துவம்

☆ தன்வீட்டு
வளத்தையெல்லாம்
வரதட்சணை வடிவிலே
வரியாக தந்துவிட்டு
தன் தேவைக்கே
கைகள் ஏந்தவேண்டும்

☆ உதைபட்டு
சதை கிழிப்பட்டாலும்
அதை வெளிக்காட்டக் கூடாதாம்

☆ இங்கே கொடுமை செய்யும்
கணவனிடம் பெண்ணும்
அங்கே கொலை செய்யும்
சிங்களனிடம் தமிழரும்
அடிமைப்பட்டே இருக்கும்
அவலம் என்று
அகலுமோ ?

## தட்டிக்கேட்க வேண்டும்

நான்
தெருவில் நடக்கும்போது
என்
செருப்பும் சாலையும்
பேசிக்கொண்டன :
"ஏன் இப்படி
வத்தலும் தொத்தலுமாய்
இருக்கிறாய்
உனது கவலையாலேயே
நான் தேய்ந்து போய்விட்டேன்"
என்று சொன்னது செருப்பு
"நான்
என்ன செய்ய
எனக்கு சிகிச்சை
அளித்ததாகச் சொல்லி
அரசியல்வாதிகளும்
ஒப்பந்தக்காரர்களும்
கொழுத்துப் போய்விட்டார்கள்
நீதான் தட்டிக்
கேட்க வேண்டும்"
என்று சாலை சொன்னது.

படிப்பகம்

www.padippakam.com

# நூல் புதிது

நூலின் பெயர் : அம்மா... தாயே ஓட்டு... போடுங்க... (நடப்பியல் புதினம்)




ஆசிரியர் : களப்பால் குமரன்

விலை : ரூ.15/-

கிடைக்குமிடம் : 18/17, காத்தான் நகர், மூன்றாம் தெரு, நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் - 613 006.

மக்கள் நலனைப் புறக்கணித்து, கொள்கை கோட்பாடுகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு செயல்படும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளை அம்பலப்படுத்தி எழுதப்பட்டுள்ள புதினம். 'அம்மா... தாயே... ஓட்டுப்போடுங்க'.

தமிழக கட்சிகள் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகளையும் கோடிட்டு காண்பித்துள்ளார் இந்நூலின் ஆசிரியர் பேராசிரியர் களப்பாள் குமரன்.

ஒரு கொள்கை நல்ல கொள்கை என்பதாலேயே வெற்றி பெற்று விடாது. வெற்றிக்காக கடுமையாக உழைக்க வேண்டும். போராட வேண்டும்.

ஆனால், எந்த சிரமமும் இல்லாமல் கதையின் நாயகன் பழனி, பிச்சை எடுக்கும் தொழிலை மேற்கொண்டு, பிச்சைக்காரர்களை திரட்டி பேரணி, பொதுக்கூட்டம் நடத்துவதன் மூலமும், பிச்சையெடுக்கும் போது சொல்கிற கருத்துகள் மூலமும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைப்பது என்பதெல்லாம் தமிழ் சினிமா பாணியே.

இன்றைய சூழலில் ஓட்டுப்போடுவதால் சமூக மாற்றம் வரும் என்பதும் மாயையே.

## 'பயங்கரவாதம்' குறித்து சிதம்பரத்தில் தகவல்நேரம்

சிதம்பரத்தில், அக்டோபர் 7 அன்று தமிழக இளைஞர் முன்னணி சார்பில் தகவல் நேரம் நடைபெற்றது. 'சனநாயகமும், பயங்கரவாதமும்' என்ற தலைப்பில் கி.வெங்கட்ராமன் விளக்கவுரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு த.தே.பொ.க. நகரச் செயலாளர் தோழர் கு. சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார்.

நூலின் பெயர் : பறிபோகும் காவிரித் தண்ணீரை காப்பாற்றும் வழி

ஆசிரியர் : பெ. தங்கப்பன் எம்.ஏ.,

விலை : ரூ.13/-

கிடைக்குமிடம் : தங்கம் பதிப்பகம், 1384, ரானி அண்ணா நகர், சென்னை - 600 078.

காவிரிச் சிக்கல், நடுவர் மன்றத் தீர்ப்பு காவிரிக்கு துரோகம் இழைக்கும் தமிழக கட்சிகள் குறித்து தெளிவான விவரங்களோடு திரு பெ. தங்கப்பன் இந்நூலை எழுதியுள்ளார். காவிரி உரிமை மறுக்கும் கர்நாடக அரசையும் காவிரி உரிமையைப் பெற்றுத்தராத தில்லி அரசையும் கடுமையாக சாடியுள்ளார். அதிகாரமில்லாத புதிய வரைவுத் திட்டத்திலிருந்து விலகி அதிகாரமுள்ள பழைய வரைவு திட்டத்தை செயல்படுத்த கூறுகிறார். அனைவரிடமும் இருக்க வேண்டிய அவசியமான நூலாகும் இது.

✡✡✡

நூலின் பெயர் : யார் அந்த அட்லாண்டிஸ் மனிதனும் மற்றும் சிலரும் (கட்டுரைத் தொகுப்பு)

விலை : ரூ.20/-

கிடைக்குமிடம் : தமிழ் நேயம், 123, காளீசுவரா நகர், கோயமுத்தூர் - 641 009.

எம்.ஜி. சுரேஷ் எழுதிய 'அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலர்' என்கிற நாவல் குறித்து பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்த கருத்துகளின் தொகுப்பு இந்நூல்.

கியூபிச நாவல் என்று வகைப்படுத்தப்படுகிற அந்நாவலின் நிறை குறைகளை இந்நூல் தொகுத்துரைக்கிறது. தமிழுக்கு இத்தொகுப்பு புது முயற்சியே.

படிப்பகம்